www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 10/00

දිනමුරසු වාරමලර්

மார்ச்.26-ஏப்.01.1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 95



'தன்னாட்சி' என்றால் யார் ஆட்சி?

எக்ஸ்ரே ரிப்போர்ட்

தொண்டமானுக்கு தொடரும் சவால்!

அழகுக் குறிப்புகள்

ரசிகன் தரும் இலக்கிய நயம்

கார்த்திக் திருந்துவாரா

கிசு கிசு

சினி விசிட்

அதிரடியான அரசியல் தொடர்

# ஹிட்லரின் காதலி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## தாயகக் கோட்பாடு

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்:
வடக்கு-கிழக்கு
இணைந்த தமிழ் பேசும் மக்களது
தாயகக் கோட்பாடு
இன்று வரை
பெரும்பான்மை இனக் கட்சிகளால்
பகிரங்கமாக ஏற்கப்படவில்லை.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின்
முன்பாக சகல தமிழ் கட்சிகளும்
தனித்தும், ஒருமித்தும்
தாயகக் கோட்பாட்டை
வலியுறுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது.

விடுதலைப் புலிகளும்
தாயகக் கோட்பாட்டில்
தமது உறுதியை எப்போதும்
வலியுறுத்தியே வந்துள்ளனர்.

கருத்து முரண்பாடுகள்
பல தமக்கிடையே இருந்தாலும்
தாயகக் கோட்பாடு,
சமஷ்டித் தீர்வு என்பவற்றில்
தமிழ் கட்சிகள்
ஒரே முடிவோடு, உறுதியாக நிற்பது
இனவாதிகளை மட்டுமே
எரிச்சல்படுத்தக் கூடும்.
ஏனைய யாவரும்
விரும்பி வரவேற்கவே செய்வர்.

இதுவரை சிந்திய இரத்தமும்
இழந்த ஈடில்லா உயிர்களும்
அரை குறைத் தீர்வுக்கல்ல
என்பதை மறப்பவர் எவரையும்
தமிழ் பேசும் மக்கள்
மதிக்கவும் மாட்டார்; மன்னிக்கவும் செய்யார்.

'சமஷ்டி' என்றவுடன்
பிரிவினை என்று பீதியுறுவோர்
இருக்கத்தான் செய்வர்.
அவர்களுக்கு அஞ்சி
ஆணித்தரமான நிலைப்பாடுகளை
தளரவிடுவது வரலாற்றுத் தவறு.

'சமஷ்டி' என்று சொல்லாமல்
சுற்றிவளைத்து சொல்லலாமே
என்கிறார்கள் சிலர்.
அப்படியானால் இனவாதம்
செத்துவிட்டது என்று சொல்வது
பொய்யென்று அர்த்தமா?

உரியதைக் கேட்கிறோம்.
உரிமையைச் சொல்கிறோம்
இதிலே மூடு மந்திரம் எதற்கு?

கேட்பது பிச்சையல்ல,
தமிழ் பேசும் மக்களது
பிறப்புரிமை பற்றிப் பேச
வெட்கமும் கூடாது;
வீண் தயக்கமும் செல்லாது!

விவேகமும், நெளிவு, சுழிவுகளும்
அரசியல் அரங்கில்
தேவைதான் என்பதை மறுப்பதற்கில்லை.
ஆயினும் விவேகம்
என்ற பெயரில்- வீரியமான
நிலைப்பாடுகளில் வீழ்ச்சி கூடாது.

தமிழ் பேசும் அரசியல் கட்சிகள்
தற்போது அதனைப்
புரிந்து கொண்டுள்ளனர் என்று
நம்புகிறோம். நல்ல மாற்றம்!

□□

முரசில் புதிய எழுத்தாளர்களை
ஊக்குவிப்பதில்
ஆர்வமுண்டு. அக்கறையுமுண்டு.

ஆயினும்-சில புதியவர்கள்
தமது கருத்தில் ஜனித்தவற்றை
எழுதி அனுப்பாமல்
கத்தரித்தவற்றை சொந்த ஆக்கம்
என்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள்.

சமீபத்தில் கூட
'ரஞ்ஜினி' என்று ஒருவர்
அனுப்பிய கவிதை ஒன்றுக்கு
'தேன் கிண்ணத்தில்' முதலிடம் தரப்பட்டது.

இந்திய வார இதழ் ஒன்றில்
நீண்டகாலத்திற்கு முன்பாக
சிறுகதையொன்றுக்குள்
காணப்பட்ட கவிதை அது.

முரசு வாசகி ஒருவர்
ஆதாரத்தோடு சுட்டிக்காட்டியிருக்கிறார்.
தொகுப்பு என்று
அனுப்ப வேண்டியதை தனது
படைப்பு என்று அனுப்பலாமா?

இவ்வாறான தவறுகள்தான்
புதியவர்களுக்கு
களம் கொடுப்பதில்
கால தாமதத்தை ஏற்படுத்துகின்றன.

தரமான ஆக்கங்களுக்கும்
ஆர்வமான முயற்சிகளுக்கும்
'முரசு' எப்போதுமே
களம் கொடுக்கும்.
அதே சமயம்-
வாசகர்கள் உதவியோடு
போலிகளை கண்டறிந்து வெளிப்படுத்தும்.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## தடுமாறாமை

"ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்: அவர் என் கால்களை மான் கால்களைப் போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்" (ஆப.3:19)

கடவுளின் மனிதனுடைய நம்பிக்கை ஒரு வாக்குறுதிக்கு ஒப்பானதாகும். ஏனெனில் அவன் நம்புவதே கடவுளின் திட்டமாகும். தீர்க்கர் வறுமை, பஞ்சம் என்னும் ஆழமான பாதை வழியே செல்ல வேண்டியிருந்தது. ஆனால் அவர் தவறி விழாமல் சென்றார். ஏனெனில் ஆண்டவர் அவரை நிலை பெற்றிருக்கச் செய்தார். ஒரு காலத்தில் அவர் மற்றவர்களுக்கு எதிர்த்து நிற்பது என்னும் மலைமேல் ஏறிப்போக அழைக்கப்பட்டார். ஆனால் ஆழங்களில் எவ்விதம் பயம் இல்லாமல் சென்றாரோ அவ்விதம் மலைமேலும் ஏறிப் போனார்.

கடவுள் அவருக்குப் பெலன் அளித்தார். யேகோவாவே அவர் பெலன் ஆனார். அதை நினைத்துப் பாருங்கள். சர்வ வல்லமையுள்ள கடவுளே நம் பெலன் ஆவார்.

ஆண்டவர் அவர் தடுமாறாமல் நடக்கவும் செய்தார். மான், மேடுகளிலும் பாறைகளிலும் தடுமாறாமல் குதித்துச் செல்கிறது. நம்கடமையை நிறைவேற்ற கடினமான பாதை வழியே செல்ல வேண்டியதாயிருந்தாலும் தடுமாற்றம் அடையாமல் செல்ல கிருபை அளிப்பார். பாறைகளுக்கேற்றவாறு நம் பாதங்களை அவர் அமைக்கக் கூடியவர். ஆகையால் நாம் இடர் அற்ற நிலையில் அங்கு இருப்போம். அவரையிட்டும் பிரிந்து நின்றால் நாம் அழிந்து விடுவோம்.

வரும் நாள்களில் நாம் உயரமான ஸ்தலங்களுக்கு அழைக்கப்படுவோம். பிரகாசமானவர்கள் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கும் கடவுளின் மலைக்குக் கூட நாம் ஏறிப்போவோம். நம்பிக்கையின் பாதங்கள் எப்படிப்பட்டவை! அவற்றினால் காலையில் குதித்து வரும் மான்களின் பின்னே நாமும் ஆண்டவரின் மலை மேல் ஏறிப்போவோம்.

குணத்தி பிரபா-கனடா.

# ஆன்மீகம்



## 'தொழுகையில் அமைதி வேண்டும்'

அன்னை ஆயிஷா (ரலி) அவர்களின் தாயார் உம்மு ரூமான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

"நான் ஒரு தடவை தொழுகையில் (இப்பக்கம் அப்பக்கமாக) அசைந்துகொண்டிருந்தேன். இதனைப் பார்த்த அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் என்னைக் கடுமையாக அதட்டினார்கள். அந்த அதட்டலினால் நான் பயந்துபோய் தொழுகையை முறித்து விடுமளவுக்கு ஆகிவிட்டேன்.

பிறகு அவர்கள்,"உங்களில் எவரேனும் தொழ நின்றால் தன்னுடைய உடலின் உறுப்புகள் அனைத்தையும் அமைதியாக வைத்திருக்கவும். யூதர்கள் ஆடுவது போல் ஆடக்கூடாது. ஏனெனில் தொழுகையில் உறுப்புக்களை அமைதியாக வைத்திருப்பது தொழுகையை நிரப்பமாக ஆக்குவதில் ஒரு பகுதியாகும் என்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்." என்று கூறினார்கள். நூல்-திர்மிதி.

தொழுகையில் அமைதியுடன் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தி பல ஹதீஸ்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் வஹீ கொண்டுவரும் வானவரை எதிர்பார்த்து அதிகமானநேரம் வானத்தின் பக்கம் பார்த்துக் கொண்டே இருக்கும் வழமை கொண்டிருந்தார்கள். ஒரு பொருளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் பார்வையும் அப்பக்கம் நிலைத்துவிடுவது வழக்கம்தான். இக்காரணத்தால், சில சமயங்களில் தொழுகையில் இருக்கும் போதும் தங்களுடைய பார்வையை உயர்த்திப் பார்க்கக்கூடியவர்களாக இருந்தார்கள். கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டிய.

## கவிதைப்போட்டி இல-92

### பரிசுக்குரிய கவிதை

### சரித்திரம்

"பத்துத் திங்களில் பதினைந்து சேய்கள்
செத்துப் பிழைத்தாள் கின்னஸ் தாய்
எட்டுத் திக்கிலும் இல்லாத விசித்திரம்-யுத்தத்தால்
மொட்டுக்கள் கருகாதிருந்தால் அதுவே சரித்திரம்."

அமிர்த-சந்திரபாலன்-திருகோணமலை.

### காமதேனு

ஒரு சூலில் பதினைந்தை கருவுலகிலுருவாக்கி
திரு உலகு பெருமை கொள புகழேட்டில் பதிவாக்கி
இன்றுலகம் காண்கின்ற இனக்குறைவு, நிறைவுபட
இவள் போன்ற மங்கை யொரு காமதேனு.

வாழையூர்-வைரமுத்து.

### தத்துவ வித்துக்கள்

தங்கப் பதுமைகளோ,
இவை-
தத்தெடுத்த முத்துக்களோ,
தத்துவத்தின் வித்துக்கள்
பூமியிலே-
புஷ்பித்த பொன் மலர்கள்.

எம்.ஏ.நஜுமுதீன்
அக்கரைப்பற்று-04.

### வண்ணமலர்கள்

'கண்ணம்மா',
'பெண்ணம்மா'-'பூமியம்மா'
'கின்னஸ்'ஸில் உன்பெயர்
'பொன்னம்மா'
வானம்மா உன்புகழ்
வற்றாதம்மா
வளரும்மா பதினைந்தும்
வண்ணமம்மா!

நா.ஜெயபாலன்-பிபிலை.

### குழவிக் கூடு

குடும்பக்
கட்டுப்பாட்டை
கூண்டோடு ஒழிக்க
கூட்டமாய் வந்த
குழவிக் கூடு

எஸ்.கோடீஸ்வரன்
பொகவந்தலாவ.

### விருட்சம்!

இவள் தாயல்ல
தாய் விருட்சம்.
பழங்கள்-குழந்தைகள்!

எம்.சுரேஷ்.

### வியப்பு

ஒரு
துளி
விந்து
உலகை
வியக்கவைத்த
உண்மை.

பி.எம்.எம்.ஏ.காதர்
மருதமுனை.

### திட்டம்

இருபத்தோராம்
நூற்றாண்டின்
இறப்பை ஈடுசெய்ய
இரகசிய திட்டமோ

எம்.எச்.எம்.மௌஜுத்
ஹிஜ்ராபுரம்.



### ஆல்போல் கிளை

ஆல்போல் கிளை விரிக்க
ஆர் உரைத்த ஆசியுரை!
அரிதாய் பலித்ததுவோ?
அவனியிலே தாயுனக்கு!
அதுவோ எமக்கின்று
அதிசயிக்கும் தோரணையோ?

தர்ஷிக்கா கனகசிங்கம்
மட்டக்களப்பு.

### குசேலர் பிரதிநிதி

குசேலர் பரம்பரையின்
குலமுறையை நினைவூட்ட
விசேடப் பிரதிநிதியாய்
வந்துதித்த தேவதையோ?

ச.மகாலிங்கம்-வெலிமடை.

### பெருமை

இகப் பேற்றில்
மகப் பேறுபெற்று
பெருமை கொண்ட-அந்த
மகிமை பெற்ற மாதாவின்
தகைமைதான் என்னே?

எஸ்.மதிவாணி துறைநீலாவணை.

### ஏன்?

ஆயுதங்கள்
அபகரிக்க
அளவில்லா
உயிர்களை
ஈடு செய்யவோ
இத்தாய்
கருப்பையின்
கனவளவை
அதிகரித்துக்
கொண்டாள்?

ரேணுகா நிபாய்தீன்
ஏறாவூர்-02.

### அவதரிப்பு

மனித(ம்)(ர்)கள்
மரணித்து விட்டமையால்
அவனிக்கு தேவைதான்
அவசர அவதரிப்புக்கள்.

வைரதாசன்-மாத்தளை.

### வீரத்தாய்

போரினில்
வீழ்ந்திட்ட
வீரர்களை
ஈடுகட்ட!
பாரினில் பெற்றாளோ
இத்தாய்
பதினைந்து
குழந்தைகளை.

பி..தவக்குமார்-கொழும்பு-11.

### அனுதாபங்கள்!....

"ஒன்று இரண்டோடே...
எத்தனை பாடு?!
இந்த பதினைந்தோடு...
என்ன பாடோ?!"

ஷாமிலா யூசுப்
கோட்டைமுனை.

## கவிதைப் போட்டி இல-95



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 01.04.95

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 95
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

படைத்தவனும் வியப்பான்
முரசே!
இந்தப் படத்தைப் போட்டு
எங்களை திகைக்க வைப்பதில்
மகிழ்ச்சிதானே உனக்கு.

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.

**முரசு முன்கூட்டியே சொல்லும் கருத்துக்களை மூன்று வாரம் கடந்து பார்த்தால் அதன் நம்பகத் தன்மை புரிகிறது. அரசியல் விமர்சனங்களில் 'முரசு'க்கு உண்டு தனித்துவம்!** சி.ராஜகோபால்-குருநாகல்.

அன்பின் தினமுரசே!

உனக்கு இருக்கும் பெருமதிப்பை பாதுகாக்க சிறந்த அபிமானிகள் இருக்கிறார்கள். அதை மாற்ற முடியாது. அத்தகைய அபிமானிகள் தினமுரசை வெட்ட விரும்ப மாட்டார்கள். உதாரணமாக குறுக்கெழுத்துப்போட்டி-வர்ணம் தீட்டும் போட்டி- மகளிர் மட்டும் போட்டி இவைகளைத் தயவு செய்து நவக்கிரக சஞ்சாரப்பகுதி வரும் பகுதிக்கு மறுபக்கம் பிரசுரிப்பதால் அதி முக்கிய செய்திகள் பாதுகாக்கப்படும்.

திருமதி. ரீட்டாமேரி மரியதாஸ்
காமினி புர-அட்டன்.

□□

அற்புதனின் அரசியல் தொடரில் எல்லோருடைய சுயரூபங்களும் தெரிகின்றன!

நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட் பக்கச் சார்பில்லாத அலசல்கள்!

அ.குமணன்-பாண்டியூர்-01.

□□

யோவ்! எங்கய்யா சிந்தியாவக் காணோம். எத்தனை வாரங்கள் தான் எதிர்பார்த்து ஏமாறுவது? சிந்தியாவின் சூடான அதுவும் இனிப்பான / பதிலால் மகிழ்ச்சியடையும் என்னை போன்ற வாசகர்களை இனியும் ஏமாற்றலாமா? சொல் முரசே! சொல். ப்ளீஸ் சீக்கிரம் வாருங்கள் டியர் சிந்து.

மு.தெய்வீக ரஞ்சனி-பதுளை.

□□

ஏன் சேர்! எங்கள் சிந்தியாவை முரசுப் பக்கம் காணோம்? நேயர்கள் தொடுத்த கேள்விக்கணைகளால் மனம் உடைந்து மருத்துவ மனையில் 'அட்மிட்' ஆகிவிட்டாரோ? சிந்தியா! அவர்கள்? கூடிய விரைவில் அவரை(க்)குணப்படுத்தி 'பட்டென' கேள்விக்கு 'சட்டென' பதில் கூற வையுங்க(ள்) சேர்!

கே.வின்சன்ட்-சத்துருக்கொண்டான்.

இராஜதந்திரியாரின் அரசியல் அலசலில் 'ஆவி' பறக்கிறது! (சூ...பாக இருப்பதால்) நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட் சொல்லவே வேண்டாம்! தூள்மா! அற்புதன் அலசலில் ஊறினாலும் அவரது அலசல் ஒரு தனிஸ்டைல்! அதிரடியாரின் நெத்தியடிகள் ஒரு ஸ்டைல். மொத்தத்தில் எல்லாமே சூப்பர் ஸ்டைல்!

து.சர்மிளாதேவி-கலஹா.

என் மனதில் வந்து தினம் உரசும்

என் இனிய தினமுரசே!

கடந்த வாரம் நீ அள்ளி வந்த அனைத்து விடயங்களும் வெரி ஃபைன்! குறிப்பாக சொல்வதென்றால், பாப்பா முரசு பகுதியில் 'வாரம் ஒரு நாடு' எனும் அறிவுத் துளியைத் தந்து தேனாய் இனிக்கச் செய்து விட்டாய். இப்படியான ஒரு அம்சத்தை உன்னில் சேர்த்துக்கொள்ளுமாறு வாசகர்சாலைப் பகுதிக்கு எழுதிவிட்டு நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த ஆசையை சென்றவாரம் நிறைவேற்றியதையிட்டு உனக்கு என்னால் எப்படி போற்றி வாழத்துவதென்றே தெரியாமல் தடுமாறிப்போயுள்ளேன். தொடர்ந்தும் அவ்வம்சத்தை நீ தந்து உன் புகழ் ஓங்க என் உள்ளங்கனிந்த வாழத்துக்கள்.

திரு. சந்திர பாலன் -இரத்தினபுரி.


□□

ப்ரிய தெவிட்டாத தினமுரசே,

உன் ஆக்கங்களை எவ்வாறு புகழ்வதென்றே தெரியவில்லை. குறிப்பாக தாய் என்ற நாவல் தொடர் சூப்பரிலும் சூப்பர். அத்துடன் மகாசூலம் அதைவிட மிகப் பிரமாதம். உன் முரசில் இவ்வாறான தொடர்கதைகள் மங்காத ஒளி வீசி நாற்றிசையும் உன் புகழைப் பேச வேண்டும் என்பதே என் அவா.

மா. சரஸ்வதி-புப்புரஸ்ஸ.

**இதயத்தை தொடுவதுபோல் கதை சொல்ல மக்சீம் கார்க்கியால் மட்டும்தானய்யா முடியும். 'தாய்' அதற்கு சான்றோ சான்று.** வி.சிவகுமார்-ஹட்டன்.




தினமுரசே தினமுரசே,
தினம் தினம் வந்தால் என்ன?
தென்றலாய் ஓடி வந்து என்
காதில் சிறு கதையும் கவிதைகளும்
ஞாலத்தின் புதுமைகளும்-
தேனாய் பாய்கிறது
திக்கெட்டும் பரவட்டும் தீந்தமிழ்.

என்.எம்.தர்ஷினி-கொட்டகலை.

□□

வாரத்திற்கு வாரம் நீ தாங்கி வரும் தினமுரசே
குறிப்பாக,எக்ஸ்ரே ரிப்போர்ட்
அற்புதன் எழுதும் அரசியல் தொடர்
அதிரடி ஐயாத்துரை
என் இதயத்தை குளிர வைக்கிறது.
என்றும் என் இனிய வாழ்த்துக்கள்.

அ.திருச்செல்வம்,
சவூதி அரேபியா.

□□

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# “அரசியல் தீர்வுபற்றிப் பேச புலிகள் தயார்.”

# “போர் நிறுத்தம் பற்றிப்பேச அரசு தயக்கம்.”

## இரு தேச கோட்பாட்டை வலியுறுத்தி பிரபா கடிதம்

**கடந்த 17.03.95 அன்று புலிகளது தலைவர் பிரபாகரனால் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. ஏறகனவே அந்தச் செய்தி வெளிவந்து விட்டது. அக் கடிதத்தில் இருந்து வெளிவராத பகுதிகள் மட்டும் இங்கு தரப்படுகிறது.**

தனது கடிதத்தில் இலங்கையில் இரண்டு தேசங்கள் என்ற கோட்பாட்டையும், அதனடிப்படையில் சமாதானத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்பதையும் வே.பிரபாகரன் வற்புறுத்தியுள்ளார்.

### சமாதான சூழல்

அன்பின் ஜனாதிபதி அவர்களுக்கு,
உங்கள் 09.03.95 கடிதம் கிடைத்தது. மிகவும் நன்றி.

உங்கள் கடிதத்தின் முன்பகுதி விடுதலைப் புலிகள் சர்வதேச செயலகம் விடுத்த அறிக்கையொன்றின் உள்ளடக்கம் பற்றி குறிப்பிடுகின்றது. ஒரு நடுவரின் மத்தியஸ்தம் தொடர்பாக நீங்கள் தெரிவித்த யோசனையை இந்த அறிக்கை திரிபுபடுத்தியிருப்பதாக எழுதியிருக்கிறீர்கள். இந்த விடயம் சம்பந்தமாக நான் உங்களுக்கு அதிகார பூர்வமான முறையில் எழுதிய கடிதத்தை நீங்கள் கருத்தில் எடுத்துக் கொள்வது தான் சிறந்தது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஒரு உண்மையான சமாதானச் சூழல் ஏற்பட வேண்டும் எனவும், மக்களின் வாழ்வு இயற்கை நிலைக்கு திரும்ப வேண்டுமெனவும் நாம் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வருகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

எனவே நிலையான போர் நிறுத்தத்தை தோற்றுவிக்கும் எமது யோசனையை உங்களது அரசு கவனத்தில் எடுக்கவில்லை என்பதை மிகவும் வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். உங்கள் அரசாங்கத்தின் அணுகுமுறையிலிருந்து இது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. போர் நிறுத்தம் என்ற கோட்பாட்டினை அதன் முழுமையான அர்த்த பரிமாணத்தில் பிரயோகிப்பதற்கு அரசு மறுப்பதுடன் மோதல் தவிர்ப்பு என்ற சொற்பதத்தை பிரயோகித்து வருகின்றது. இது ஒரு இடைக்கால சண்டை தவிர்ப்பு நிலைமையைக் குறிக்கும்.

### கவலை தரும் நிலைப்பாடு

புலிகள் இயக்கம் வற்புறுத்தும் கோரிக்கைகளை நிறைவு செய்தால் அது பாரதூரமான இராணுவ விளைவை ஏற்படுத்தும் என நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் நாங்கள் வலியுறுத்தும் கோரிக்கைகள் மக்களின் அன்றாட அவசிய பிரச்சினைகள் சம்பந்தப்பட்டவை. பூநகரி இராணுவ முகாமை அகற்றி யாழ்ப்பாணத்துக்கு ஒரு பாதையை திறப்பது, அத்தியாவசிய பொருட்கள் மீதான பொருட் தடையை முழுமையாக அகற்றுவது, மீன்பிடி தடையை நீக்குவது போன்ற கோரிக்கைகளை தேசிய பாதுகாப்பு பிரச்சனைகளாக நீங்கள் எடுத்துக் காட்டி, அவற்றை தீர்த்து வைக்க நீங்கள் மறுக்கின்றீர்கள்.

இன்னொருவகையில் சொல்லப் போனால், எமது மக்களின் சமூக-பொருளாதார வாழ்வு மீது, இராணுவம் திணித்துள்ள நெருக்கு வாரங்களை நீங்கள் நியாயப்படுத்த முனைவதுடன், தேசிய பாதுகாப்பைப் பேணுவதற்கு இந்த நெருக்குதல்கள் அவசியமானது என்றும் நீங்கள் கருதுகிறீர்கள்.

### அக்கறையில்லை.

உங்களின் இந்த நிலைப்பாட்டை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. எமது மக்களின் அன்றாட பிரச்சனைகள், தேசிய இன முரண்பாட்டிலிருந்து எழுந்த அரசியல் சிக்கல்கள் அல்ல. இவை அனைத்தும் போர் உபாய தந்திரங்களாக இராணுவத்தினால் உருவாக்கப்பட்டவை. எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட இந்த தடைகளும், கட்டுப்பாடுகளும், இராணுவத்தின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளாகும்.

### இரண்டு தேசங்கள்

நியாயமற்ற, மனிதாபிமானமற்ற இந்த நடவடிக்கைகள், மனிதாபிமானத்தின் அடிப்படையில் தீர்க்கப்படுதல் வேண்டும். பிளவுபட்டு நிற்கும் இரு தேசங்கள் மத்தியில், சமாதானத்தையும், நல்லுறவையும் கட்டியெழுப்பும் நோக்கில் இவை செயற்படுத்தப்பட வேண்டியவை. கடந்த 6 மாத காலத்தில் நாம் எழுதிய பல கடிதங்களிலும், சமாதானப் பேச்சுக்களின்போதும் எமது மக்களின் நாளாந்த பிரச்சனைகளுக்கு அவசரமான தீர்வு காணப்பட வேண்டுமென வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

### காலக்கெடு

மிகவும் எளிதாகதீர்த்து வைக்கக்கூடிய எமது மக்களின் அன்றாட பிரச்சனைகளை, தீர்த்து வைப்பதில் உங்களது அரசாங்கம் தொடர்ந்து கடுமையான போக்குகளை கடைப்பிடிக்கு மானால், மிகவும் சிக்கலான, மிகவும் கடினமான தேசிய இனப்பிரச்சனையை உங்களால் தீர்த்து வைக்க முடியுமா என்பதில் எங்களுக்கு சந்தேகம் எழுவதில் நியாயம் உண்டு அல்லவா.

எனவே சமாதானம் என்ற உன்னத இலட்சியத்துக்காக, நீங்கள் எடுத்துள்ள முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு நாம் உங்களை மீண்டும் வேண்டிக்கொள்கிறோம்.

1995.மார்ச்.28ந் திகதிக்கு முன்னதாக உங்களிடமிருந்து ஒரு சாதகமான பதிலை நாம் பெறாத பட்சத்தில், சமாதான பேச்சுக்களை தொடர்வதா, இல்லையா என்பது சம்பந்தமான மிகவும் வேதனைக்குரிய ஒரு முடிவை நாம் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

உங்களிடமிருந்து விரைவான பதிலை எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு பிரபாகரன் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## 2300 ஆசிரியர்கள் உடனே தேவை! மத்திய மாகாண அமைச்சர் தெரிவிப்பு.

கண்டி நிருபர்

மத்திய மாகாணத்தில் சுமார் 30 தமிழ் பாடசாலைகள் ஒரு ஆசிரியரை மாத்திரமே கொண்டு இயங்குவதாக ம.மா. தமிழ் கல்வி, உணவு, வர்த்தக கால்நடை அபிவிருத்தி அமைச்சர் திரு.வீ.புத்திரசிகாமணி முரசுக்குத் தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தில் தற்சமயம் தமிழ் ஆசிரியர்களின் திடீர் இடமாற்றம் சிலரிடையே அதிருப்தியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. முழுமையான ஆசிரியர் தட்டுப்பாடே இந்த நிலை ஏற்படக் காரணம் என்று அமைச்சர் புத்திரசிகாமணி கூறினார். இம்மாகாணத்தில் இயங்கும் 428 தமிழ் பாடசாலைகளில் 2300 ஆசிரியர்கள் தேவையாக உள்ளனர்.

இவர்களில் 1300 அசிரியர்களுக்கான வெற்றிடங்கள் ஆரம்ப பிரிவுகளிலும், கணிதம், விஞ்ஞானம் ஆகியபாடங்களில் தலா 300 ஆசிரியர் வெற்றிடங்களும் நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

1988 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆசிரியர் நியமனங்கள் இடம்பெறவில்லை. ஆசிரியர் இல்லாத பாடசாலைகளுக்கு அவர்களை மாற்றும் பொழுது எடுக்கப்படும் நடவடிக்கைகளின் பின்னணியில் அரசியல் புகுந்து விளையாடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சுமார் 30 பாடசாலைகள் ஒரே ஆசிரியரைக் கொண்டு இயங்குவதால் ஒருவரே அதிபரும். உதவி ஆசிரியருமாகவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அந்த ஆசிரியரும் லீவு போட்டால் பாடசாலையே மூடிவிடப்படுகின்ற பரிதாபகரமான நிலை தோன்றியிருப்பது கவலை தருவதாகவும் அவர் கூறினார்.

இதே வேளையில் இப்பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வரும்போதும் ஸ்ரீபாத கல்விக்கல்லூரியில் 3 வருடப் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த 125 அசிரியர்கள் இன்னும் நியமிக்கப்படாத சம்பவம் குறித்து மாகாணசபையில் அங்கம் வகிக்கும் தமிழ்பேசும் உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு மேயர் வீட்டில் சோதனை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு நகர மேயர் செழியன் பேரின்பநாயகத்தின் வீட்டில் பொலிஸ், இராணுவம் கூட்டாக சோதனை நடத்தியது. இதனைக் கண்டித்து 15.03.95 அன்று மட்டக்களப்பு மாநகர சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேயர் இல்லம் என்று தெரிந்திருந்தும் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நகரத்தின் முதல் பிரஜைக்கு இந்த நிலை என்றால் நமது நிலை என்ன என்று மாநகர சபை உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேயர் இல்லத்தில் நடைபெற்ற சோதனை நடவடிக்கை அவமானப்படுத்தும் செயலாகும் என்று கண்டனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல் தவிர்ப்பு அமுலில் இருக்கிறது. புலிகள் அமைப்பினர் நடமாடவும் தடை கிடையாது. அப்படியிருக்கும் போது யாரை தேடி சோதனைகள், தேடுதல்கள் நடைபெறுகின்றன என்று மாநகர சபை உறுப்பினர்கள் பலர் கேட்டுள்ளனர்.

## திருமலை எம்.பி பதவி இழுபறி!

## சிவாவின் கடிதத்தை திருமலை கிளை நிராகரிப்பு

(திருமலை நிருபர்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருக்கோணமலை கிளையினர் செயற்குழுவைக் கூட்டுமாறு கட்சித் தலைமையிடம் கோரியுள்ளனர்.

திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பங்கிட்டுக் கொள்வது தொடர்பாக திரு.சம்பந்தனும், திரு.தங்கத்துரை பா.உவும் ஒரு ஒப்பந்தம் செய்திருந்தனர்.

அந்த ஒப்பந்தப்படி திரு.தங்கத்துரை தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்க வேண்டும் என்று கூட்டணியின் திருக்கோணமலை கிளை குரல் எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக உரிய முடிவை எடுக்குமாறு திருக்கோணமலை கிளை கட்சித் தலைமையைக் கோரியிருந்தது.

அதற்கு பதில் அனுப்பியுள்ள கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம், கட்சி தலைமையின் ஒப்புதலோடு செய்யப்படாத ஒப்பந்த விடயத்தில் தலையிட முடியாது என்று தெரிவித்திருந்தார்.

19.05.95 அன்று கூடிய திருக்கோணமலை கூட்டணிக் கிளை மு.சிவசிதம்பரத்தின் கடிதம் தொடர்பாக ஆராய்ந்தது.

திரு.சிவசிதம்பரம் தன்னிச்சையாக எழுதியுள்ள பதில் கடிதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது; கூட்டணியின் செயற்குழுவைக் கூட்டி திருக்கோணமலை கிளையின் கருத்தை ஆராயவேண்டும் என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு.தங்கத்துரை பா.உவின் நடவடிக்கைகள் தொடர்பாக பிரசுரங்கள் வெளியிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

## கடற்படை வீரர்கள் மோதல்

(சஞ்சீவன்)

திருக்கோணமலை பெரிய கடை பகுதியில் கடற்படை வீரர்கள் மூவருக்கும் பொது மக்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. இதனையடுத்து ஏற்பட்ட கைகலப்பு சம்பவத்தில் பொதுமக்கள் ஒன்று சேர்ந்து தாக்கியதில் கடற்படையைச்சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

கடற்படை வீரர்கள் மூவரும் மதுபோதையில் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## எரிபொருள் வழங்க கட்டுப்பாடு

ஏறாவூர் நிருபர்

ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரியால் எரிபொருள் நிலையங்களுக்கு பணிப்புரை ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

“தற்போது எங்கள் மாவட்டத்தில் நிலவும் பாதுகாப்புநிலைமையைக் கருத்தில் கொண்டு; எரிபொருள் வழங்கும்போது ஒரு நபருக்கு 5 லீட்டர் எரிபொருள் மாத்திரம் வழங்கவும், 5 லீட்டருக்கு மேல் எரிபொருள் தேவைப்படும் பட்சத்தில் அந்நபர் என்னுடன் தொடர்பு கொண்டு, மேலதிக எரிபொருள் தேவைப்படும் அவசியத்தை விளக்கிக் கூறி எனது அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். வாகனங்களுக்குத் தேவையான அளவு எரிபொருள் நிரப்பமுடியும். ஆனால் மேலதிகமாக எரிபொருளை கொள்கலன்களிலோ, பீப்பாக்களிலோ விநியோகிக்க வேண்டாம்” என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்லது

## சமஷ்டியில் ஏன் சந்தேகம்? டக்ளஸ்தேவானந்தா கேள்வி!

இனப்பிரச்சனைக்கு சமஷ்டி கூட்டாட்சியே அர்த்தமுள்ள தீர்வாக அமையும். சமஷ்டி பற்றிப் பேசினால் பிரிவினை கேட்பதாக சிலர் சந்தேகிக்கிறார்கள்.

மாகாணசபைமுறை வந்தபோதும் இவ்வாறுதான் அவர்கள் கூறினார்கள். இந்தியா தமிழர்களுக்காக நாட்டைக் கூறுபோடப்போவதாக சொன்னார்கள். இதுவெல்லாம் அர்த்தமற்ற சந்தேகங்களாகும்.

சமத்துவமான இன உணர்வுகள் மூலமே ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்பமுடியும்.

அதற்கு சமஷ்டி அரசியலைப்பு தேவையாகும். இவ்வாறு ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ தேவானந்தா பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

## பூபதி நினைவு தினம். புலிகள் அனுஷ்டிப்பு!

இந்திய அமைதிப்படை புலிகளோடு போரை நிறுத்திப் பேச வேண்டும் என்று சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தவர் அன்னை பூபதி.

அவரது ஏழாவது நினைவு தினம் 19.03.95 முதல் தொடர்ந்து ஒரு மாத காலத்திற்கு புலிகளால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு கிரானைச் சேர்ந்தவர் திருமதி பூபதி.

இது குறித்து யாழ்ப்பாணத்தில் புலிகள் விடுத்துள்ள செய்தியில்;

“அன்னை இந்திய இராணுவத்தின் ஆதிக்க வெறியை சர்வதேசங்களுக்கும் அம்பலப்படுத்தி வெற்றி கண்டவர். இதற்காக தன்னைத் தியாகச் சுடராக உரு மாற்றிக் கொண்டார்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் அன்னை பூபதி உருவப் படங்கள் வைக்கப் பட்டுள்ளன.

ஏப்ரல் 17.18.19ம் திகதிகளில் அடையாள உண்ணாவிரதங்கள் நடைபெறவுள்ளன.அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

## இராணுவம் மீது ‘ராவய’பத்திரிகை கண்டனம்

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சிங்கள வாரப் பத்திரிகையாசிரியர் இராணுவம் குறித்து அதிருப்த்தி தெரிவித்துள்ளார்.

‘ராவய’ ஆசிரியர் திரு.விக்டர் ஐவன் யாழ்ப்பாணத்தில் ‘புலிகளின் குரல்’ வானொலிக்கு பேட்டியளித்தார்.

சமாதான பேச்சுவார்த்தையை குழப்பக்கூடிய அணியினர் இராணுவத்தில் இருக்கின்றனர். இராணுவத்தினரை உடனடியாகவோ குறுகிய காலத்திலோ மாற்ற முடியாது. ஜனாதிபதி சந்திரிக்காவை இராணுவம் வெற்றி கொண்டுவிட்டது. இது ஒரு சிக்கலான நிலைமையாகும். என்றார் விக்டர் ஐவன்.

அரசியல் நகர்வுகள் தவிர்க்க முடியாதளவில் மந்த நிலையை அடைந்துள்ளன.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றத் தவறினால் சமாதானம் தோன்றுவதற்கு சந்தர்ப்பம் இல்லை. என்றும் ‘ராவய’ ஆசிரியர் கூறியுள்ளார். புலிகளது முக்கிய பிரமுகர்களையும் அவர் சந்தித்து உரையாடினார்.

## 4ம் கட்ட பேச்சில் புலிகள் சந்தேகம்.

## யுத்தத்தை தொடர நினைப்பதாக குற்றச்சாட்டு!

யாழ் குடாநாட்டில் உள்ள வெகுஜன அமைப்புக்களோடு புலிகள் இயக்கத்தினர் கலந்துரையாடல் ஒன்று நடத்தினார்கள்.

கலந்துரையாடலில் கலந்து கொண்டு புலிகளது பிரமுகர் தமிழ்செல்வன் உரையாற்றினார். அவர் தனது உரையில்; “சந்திரிக்கா தலமையிலான சிறிலங்கா அரசு சமாதான பேச்சுக்களில் நேர்மையுடனும், இதயசுத்தியுடனும் நடந்து கொள்ளவில்லை. அண்மையில் சிறிலங்கா ஜனாதிபதியிடம் இருந்து வந்த கடிதம் நாம் எதிர்பார்க்காத ஒன்றாகும்.

அடுத்த கட்டப் பேச்சுக்கான திகதியானது இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கான மாநாடு நடைபெறும் காலப் பகுதிக்குள் அமைகிறது. இம் மாநாட்டில் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

தமிழ் மக்களுக்கு உரியளவில் ஊதவி செய்கிறோம் என்று காட்டுவதற்கே அவ்வாறு திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிகளவு நிதியுதவியைப் பெற்று யுத்தத்தைத் தொடர அரசு எண்ணியுள்ளது” என்றும் சு.ப. தமிழ் செல்வன் தெரிவித்தார்.

# கண்திறந்து பாருமையா கல்முனை வீதியை!

## திருத்த வந்த கருங்கற்கள் போவது எங்கே?





**தே**ர்தல்கால 'பூச்சாண்டி' அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் கல்முனை ஆர்.கே.எம்.பாடசாலை வீதி புனரமைப்பும் இடம்பெறத் தவறுவதில்லை. தேர்தல் வந்தால் இந்த வீதி புனரமைப்புக்காக கருங்கற்களைக் கொண்டுவந்து குவிப்பார்கள். தேர்தல் முடிந்த கையோடு அந்தக் கற்களை வேறு இடங்களுக்கு ஏற்றிச் சென்று விடுவார்கள்.

(தினமுரசு நிந்தவூர் நிருபர்)

இந்தப் 'பழக்கதோசமோ' என்னவோ தெரியாது. இப்பொழுதும் இதே நிலைதான் தொடர்கிறது!

இந்த வீதியிலமைந்துள்ள கல்முனை அம்பலத்தடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள பகுதி வீதி பள்ளமும், படுகுழிகளும் நிறைந்து காணப்படுவதுடன், மழை காலங்களில் இப்பகுதி ஒரு சிறு குளம்போன்றே காட்சியளிக்கின்றது.

இதனால் இந்த வீதியால் செல்லும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அடைவதுடன், சிலசமயம் தடக்கி வீழ்ந்து தேங்கிநிற்கும் நீரில் தோய்ந்து செல்வதும் வழக்கமாகும்.

இப்படுமோசமான பகுதியைச் சீரமைப்பதற்காக கடந்த பலவாரங்களுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் கருங்கற்களைக் கொண்டுவந்து குவித்தனர்.

ஆனால் வீதி திருத்த வேலை எதுவும் நடைபெறாமலே, கொட்டிய கருங்கற்களை தற்போது வேறு எங்கோ வீதிதிருத்தத்திற்காக ஏற்றிச் செல்லத் தொடங்கியிருக்கிறார்கள், சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர்.

இந்த நடவடிக்கை பொதுமக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 04.03.1995ல் அந்த வீதியால் சென்ற நமது நிருபர், குவிக்கப்பட்டிருந்த கருங்கற்களை டிராக்டர் ஒன்றின் மூலம் ஏற்றிச் செல்லப்படுவதை நேரில் அவதானித்ததோடு அதனை தமது கமராவுக்குள்ளும் 'கிளிக்' செய்து கொண்டார்.

டிராக்டர் பெட்டியில் கொண்டுசெல்வதற்காக கொட்டப்பட்டிருந்த கற்கள் ஏற்றப்பட்டிருப்பதையும், அள்ளுண்ட நிலையில் கற்குவியல்கள் வீதி ஓரத்தில் காணப்படுவதையும் படங்களில் காண்க.

இந்த லட்சணத்தில் அம்பலத்தடிப் பிள்ளையார் ஆலய முன்றல் பகுதி வீதியின் சீரமைப்பு என்று தான் நடக்குமோ? என அங்கலாய்க்கிறார்கள் மக்கள்.

## 'கண்டனக் குறிப்புக்களை அகற்றுக'

(திருமலை நிருபர்)

**பி**ரபல செல்வந்தர் எம்.ஐ.அப்துல் ரசூல் என்பவரின் சொத்து வாரிசுரிமை தொடர்பாக திருமலை மாவட்ட நீதிமன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பில் சட்டத்தரணி ஜனாப்.உ.மு.இஸ்மாயிலுக்கெதிராக உள்ள கண்டனக் குறிப்புகள் நீக்கப்பட வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் பணித்துள்ளது.

46 வருடங்களுக்கு மேலாக நீடித்த இவ்வழக்கு திருமலை மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப் பட்டமைபற்றிய செய்தியை முரசு கடந்த வருடம் ஆகஸ்டில் வெளியிட்டிருந்தது.

இத் தீர்ப்பின் படி நம்பிக்கையாளரின் சட்டத் தரணியாகக் கடமையாற்றிய ஜனாப். இஸ்மாயில் சம்பந்தப்பட்ட வழக்கில் சட்டத் தரணியாகத் தெரிபடக் கூடாதென்றும் அவர் சம்பந்தப்பட்ட சொத்துக்களின் வருமானங்கள், பற்றிய கணக்குகளைச் சரிவரச் சமர்ப்பித்து தான் நிரபராதி என உறுதிப் படுத்தும்வரைக்கும் பத்துலட்சம் ரூபா பிணை கொடுக்க வேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப் பட்டிருந்தது.

இத் தீர்ப்பு பற்றிய மேன்முறையீட்டின் போது மேற்கண்ட பணிப்பு வழங்கப் பட்டுள்ளது.

## சோதனைச் சாவடிகளில் தொடரும் அவலங்கள்!

(ஏறாவூர் நிருபர்)

**ப**கைமை நிறுத்தம் கொண்டு வரப்பட்ட நாள் முதல் கிழக்கில் புலிகளும் படையினரும் நல்லுறவாக நடந்துகொள்கின்றனர். படையினரையோ பொலிசாரையோ புலிகள் சந்திக்கும் பொழுது தம்மை இன்னார் என அடையாளம் கூறியதும் அவர்கள் பெரும் கண்ணியமாக அனுப்பப்படுகிறார்கள்.

ஆனால் அப்பாவிகளான பயணிகளை சோதனைச் சாவடிகளிலுள்ள பொலிசாரும் இராணுவத்தினரும் உருட்டி, அதட்டி, துன்புறுத்தி அவர்களைப் படுத்தும் பாடு மிக வேதனைக்குரியது.

பயணிகளை சோதனைச் சாவடிகளில்; கொழுத்தும் வெய்யிலில் அதிக தூரம் (சில இடங்களில் 500 யாருக்கு மேல்) நடந்து செல்ல வைப்பதும், அவர்களை அதட்டி, பொதிகளை உருட்டி சிரமப்படுத்துவதும், வாகனத்திலிருந்து பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்கள், நோயாளிகள் முழுமையாக இறங்கி நடந்து செல்லாதவரை வாகனத்தை செல்ல விடாது அதிக நேரத்திற்குத் தடுத்து வைப்பதும் இப்பொழுது அதிகரித்திருக்கிறது.

சமீபத்தில் பிபிலையிலிருந்து மட்டக்களப்பு வந்துகொண்டிருந்த பஸ் ஏறாவூரில் பரிசோதனைக்காக நிறுத்தப்பட்டது. பஸ்ஸில் சொற்ப அளவு பயணிகளே இருந்தார்கள். ஆசனங்கள் பெரும்பாலும் காலியாகவே இருந்தன. பெரும்பான்மை இனப் பொலிஸ்காரர் ஒருவர் பஸ்ஸைப் பரிசோதித்து முடிய பஸ் சாரதி பஸ்ஸை 'ஸ்டார்ட்' செய்துவிட்டார். தான் இறங்க முன் பஸ்ஸை ஸ்டார்ட் செய்தது தவறு என்று ஆத்திரப்பட்ட அந்தப் பொலிஸ்காரர் பஸ்ஸை பின் நோக்கிப், போடச் சொல்லி பயணிகளை கொழுத்தும் வெய்யிலில் இறங்கி நடந்து செல்லுமாறு கட்டளையிட்டார். பஸ்சாரதி, பஸ் நடத்துநர் ஆகியோருடன் வாய்த்தக்கம் புரிந்தார். பயணிகள்மீது பரிசோதனை முடிந்து விட்டது. அத்துடன் நீண்ட தூரப் பயணத்தில் களைப்படைந்துள்ள பயணிகள் ஏன் நடக்க வேண்டும் என்று அந்த முரட்டுப் பொலிசாரிடம் நியாயமாகக் கேட்டார் பஸ் நடத்துநர். எனினும் அவ்விடத்தில் நிலைமையை சிக்கலடைய வைக்காத பஸ் நடத்துநர், பொலிஸ்காரரின் தேவையற்ற இந்தச் செயலை உடனடியாக ஏறாவூர்ப் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் முறையிடச் சென்ற பொழுது அங்கிருந்த இரு பெரும்பான்மை இனப் பொலிசாரும் விஷயம் முற்றிவிடும் எனப் பயந்து பஸ்ஸை மட்டக்களப்பு செல்ல அனுமதித்தனர்.

## தமிழ் நிகழ்ச்சிகளின் அவலநிலை மாறுமா?

### அரச தொலைக்காட்சியில் தொடரும் குளறுபடிகள்!

**ரூ**பவாஹினியில் தமிழ் நிகழ்ச்சி பிரிவிற்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரிகள் ஏன் பலநேரங்களில் கண்மூடித்தனமாக இருக்கின்றார்கள் என்பது ரூபவாஹினி தமிழ் இரசிகர்களின் கேள்வியாகும்.

மற்றைய நிகழ்ச்சிகள் நேரம் தவறாது ஒளி, ஒலிபரப்பாகும்போது ஏன் தமிழ் நிகழ்ச்சி நிரல்கூட ஒழுங்காக போட முடியாது உள்ளது. அரிதாக ஒளி ஒலிபரப்பாகும் தமிழ் நிகழ்ச்சிகளில் ஏற்கனவே ஒளிபரப்பான நிகழ்ச்சிகளே திரும்ப திரும்ப மறு ஒளிபரப்பு செய்வதன் காரணம் யாது?

கடந்த 9.01.95 திகதி இரவு, வியாழன் நிகழ்ச்சி நிரலுக்கு பதிலாக ஏன் வெள்ளி நிகழ்ச்சி நிரல் போடப்பட்டது? வியாழன் இரவு 7.00 மணிக்கு 'நாடகம்' என முதல் நாள் நிகழ்ச்சி நிரலில் போட்டுவிட்டு ஏன் திடீரென கலந்துரையாடல் நடத்தப்பட்டது?

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகளின் அவல நிலையையும், தமிழ் இரசிகர்களின் இதயக் குமுறலையும் உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்வார்களா?

செல்வி. சு. ஜெயாமோகா-மட்டக்களப்பு.

## மன்னார் நிலவரம்

(மன்னார் நிருபர்)

### மரக்கறி விலை வீழ்ச்சி

**ம**ன்னார்ப் பகுதியில் பெருமளவு விவசாயச் செய்கைகள் மேற்கொள்ளப் படுவதால் மரக்கறி வகைகளின் விலைகள் பெருமளவு குறைந்துள்ளன. இங்குள்ள வர்த்தகர்கள் இரு மடங்கு இலாபத்துடன் மரக்கறிவகைகளை விற்று வருகின்றனர்.

### மாடிக் கட்டிடம்

பேசாலை புனித பற்றிமா மத்திய கல்லூரியில் புதிதாக இரு மாடிக் கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. சுமார் 24 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இக்கட்டிடத்திற்கு யூ.என்.எச்.சீ.ஆர். உதவியுடன் கிராம அபிவிருத்தி நிதியம் (R.D.F) செயற்படுத்தி வருகிறது.

### கிடுகுகளுக்கு மீண்டும் கிராக்கி

மன்னார்ப் பகுதியில் பகல் நேரக் கடல் வலயத்தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதால் அதிகமாக மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இந்த மீன்கள் கருவாடு பதனிடப்படுவதால் அவற்றை கட்டி ஏற்றுவதற்காக கிடுகுகள் பெருமளவில் கொள்வனவு செய்யப்படுகிறது. முன்பு 200 ரூபாவாக விற்ற கிடுகுகள் தற்போது 400 ரூபா வரை விற்கப்படுகிறது.

### வீடமைப்புத் திட்டம்

இவ்வாண்டு மன்னார் மாவட்டத்தில் 41 வீடுகள் 8 ஆயிரம் ரூபா மானிய உதவியுடன் அமைக்கப்படவுள்ளன. மேலும் 20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபா வரை வீடமைப்புக்கடன் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மன்னார் மாவட்ட முகாமையாளர் திரு.த.சிவநாதன் தெரிவித்துள்ளார்.


### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வ்ருடத்திற்கு ரூபா | 505/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 258/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 132/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.





### அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28



## UNI COMPUTER நிறுவனம்

நடாத்தும்
100 மாணவர்களுக்கு
புலமைப் பரிசில் வழங்குவதற்கான போட்டிப் பரீட்சை
விண்ணப்ப முடிவு திகதி:

**15.04.95**

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவத்திற்கும் அக்கரைப்பற்று மத்திய தபால் அலுவலகத்தில் (AKKARAIPATTU CENTRAL POST OFFICE) மாற்றக்கூடியதான, DIRECTOR, UNI COMPUTER என எழுதப்பட்ட ரூபா 150/00 பெறுமதியான காசுக்கட்டளையுடன் (M/O) தொடர்பு கொள்ளவும்.

பரீட்சைக் கட்டணம் இலவசம்

**THE DIRECTOR,
UNI COMPUTER,
MAIN STREET,
AKKARAIPATTU.**

ADVT



## STAR LINK COMMUNICATION

அறிமுகப்படுத்தும் வெளிநாட்டுத் தொலைபேசிக்கான 'யுனிற்' முறைக் கட்டண வசதி. நீங்கள் பேசும் வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகளுக்கு ஒவ்வொரு 6 செக்கன்கள் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

'யுனிற் முறையில்பேசி உங்கள் பணத்தை மீதப்படுத்திக் கொள்ளுங்கள்.'

**85-2/1D, SECOND CROSS STREET,
COLOMBO-11
TEL: 328458**

ADVT

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தன்னாட்சி என்றால் யார் ஆட்சி?

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**நாரதர்**

வடக்கில் புலிகளது காவலில் இருந்த பொலிசார் விடுதலை யாகியுள்ளனர்.

இது அவர்களது உண்ணா விரதத்திற்குக் கிடைத்த வெற்றியல்ல.

அரசுக்கும்-புலிகளுக்கும் இடையி லான சதுரங்க ஆட்டத்தில் ஒரு கட்டமே பொலிசாரின் விடுதலை.

புலிகளது ஆசீர்வாதத்தோடுதான் பொலிசாரின் உண்ணாவிரதம் ஆரம்பித்தது.

இந்த உண்ணாவிரதம் ஆரம்பிப் பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே 'புலிகளின் குரல்' வானொலி ஒரு செய்தி வெளியிட்டிருந்தது.

உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க பொலிசார் யோசித்து வருவதாக அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது பிரதிநிதிகள் யாழ் சென்ற நேரத்தில் பொலிசாரது உண்ணாவிரதம் ஆரம்பித்தமை தற்செயல் நிகழ்ச்சியல்ல.

உண்ணாவிரதமிருந்த பொலிசாரில் ஒருவர்கூட புலிகள் தங்களை விடுதலை செய்யவேண்டும் என்று கோரவில்லை.

அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என்றுதான் கோரினார்கள். அந்தக் கோரிக் கைதான் புலிகள் உண்ணாவிரதத்திற்கு அனுமதி கொடுத்தமைக்கான காரணம்.

நியாயமாகப் பார்த்தால் உண்ணா விரதிகள் அரசிடமும், புலிகளிடமும் தங்களை 'விடுவியுங்கள்' என்று பொது வாகத்தான் கேட்டிருக்கவேண்டும்.

அரசாங்கம் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்று சகல விதத்திலும் வெளியுலகிற்கு தெரிவிப்பதே புலிகளது நோக்கம்.

சமாதான அக்கறையுடையவர்கள் யார்? என்று வெளியுலகிற்கு நிரூபிப்பதில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஆரம்பித்துள்ள பிரசாரப் போரில் புலிகள் நகர்த்திய காய்தான் உண்ணாவிரதம்.

ஆனால், அரசாங்கம் புலிகளது திட்டத்தை புரிந்துகொண்டதுபோல பரபரப்புக் காட்டாமல் இருந்துவிட்டது.

பாராளுமன்றக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்தபோதும் ஆளும் கட்சி மட்டுமல்ல, எதிர்க்கட்சிகூட உண்ணா விரதிகள் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

உண்ணாவிரதிகளுக்கு அதிக ஆதரவு காட்டினால், அவர்களது விடுதலைக்கு மாற்றீடாக புலிகள் கோரும் முற்றான பொருளாதார தடை நீக்கம் பற்றி கருத்துக் கூற வேண்டியிருக்கும்.

எனவே எதிர்க்கட்சி புத்திசாலித் தனமாக வாயை வைத்துக்கொண்டது.

இதனால்,தென்னிலங்கையில் புலிகள் எதிர்பார்த்தது போல அரசுக்கு தர்மசங்கட நிலை எதுவும் ஏற்படாமல் போயிற்று.

வாசுதேவ நாணயக்கார உட்பட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் உண்ணா விரதிகளை விடுவிக்குமாறு அரசிடம் மனுக் கொடுத்தனர்.

மனுவில் கையொப்பமிட்ட ஆளும் கட்சி எம்.பிக்கள் தமது கோரிக்கைக்காக வாதாடி ஜனாதிபதியின் கோபத்தை சம்பா திக்க விரும்பவில்லை. அதனால் அந்த மனுவும் பத்திரிகைகளுக்கு நல்ல செய்தி யாக அமைந்ததோடு மறைந்து போனது.

அரசின் மௌனம் புலிகளுக்கு சவாலாகியது. ஆரம்பித்ததை எப்படி யாவது முடிக்க வேண்டுமே; உண்ணா விரதத்தை நிறுத்த நினைத்திருந்தால் புலிகளால் நிறுத்த முடிந்திருக்கும்.

பிரபாவோ புலிகளது வேறு எந்த பிர முகரோ உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு கோரவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

உண்ணாவிரதத்தை நிறுத்த வைத்தால் அரசு என்ன நினைக்கும்? புலிகள் மிரட்டிப் பார்த்தார்கள். பலனில்லை என்றவுடன் உண்ணாவிரதத்தை நிறுத்தச் சொல்லி விட்டார்கள், என்றுதான் நினைக்கும்.



விட்டுக்கொடுப்பவர்கள் என்று காட்டிக் கொள்ளவும் கூடாது. உண்ணாவிரதிகளை சாக விடவும் கூடாது.

புலிகளது பாதுகாப்பில் இருந்தவர்கள் சாக நேர்ந்தால் அதற்கு புலிகள்தான் பொறுப்பு. சர்வதேச ரீதியாக புலிகள் மீதுதான் வெறுப்பும் ஏற்படும்.

எனவேதான் இரண்டு பொலிசாரை விடுவிப்பதாக புலிகள் முடிவெடுத்தனர். அதற்கு பதிலாக மீதியுள்ள பொலிசாரை விடுவிக்க அரசு முன்வரும் என்று எதிர்பார்த்தனர்.

அரசு அசைந்து கொடுக்கவில்லை. உடனே தாமாகவே பதினாறு பொலிஸ் கைதிகளையும் விடுவிப்பதாக புலிகள் அறிவித்தனர். அரசுடன் நடத்திய பலப் பரீட்சையில் இந்த விடயத்தில் புலிகளுக்கு தோல்விதான்.

ஆனால், தோல்வியிலும் சில ஆதாயங் களும் புலிகளுக்கு சேருகிறது.

மனித உரிமைகளில் அக்கறையில்லாத வர்கள் என்ற வெளியுலக அபிப்பிராயத்தை தவிர்க்கலாம்.

சமாதானத்தில் ஆர்வமுள்ள நடவடிக் கைகளை தாம் மேற்கொண்டதாக எதிர் காலத்தில் பட்டியலிட்டுச் சொல்ல அதனை யும் பயன்படுத்தலாம்.

□□

புலிகளது நிர்வாகத்தை வடக்கே சென்று வரும் பத்திரிகையாளர்கள் முதல் தூதுக் குழுக்கள்வரை அனைவருமே பாராட்டுகின்றனர்.

அமைச்சர் கட்டளையிட்டால்கூட செவி யில் விழாததுபோல் இருக்கும் அதிகாரி களையும் புளித்துப்போன நிர்வாகங்களையும் பார்த்துப் பழகியவர்களுக்கு வடக்கில் ஆச்சரியம் நிறைய இருக்கிறது.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தமக்கு ஏற்ற நிர்வாக வடிவங்களை புலிகள் கட்டியெழுப்பியுள்ளது பாரிய வெற்றியேதான்.

அரசிடம் இப்போதும் தமிழுக்கு சம அந்தஸ்துக் கேட்டுக் குரல் கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஆனால், புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மட்டுமே தமிழில் அனைத்தும் நடக்கிறது.

புலிகளையிட்டு அதிருப்தி கொள்வோர் கூட யாழ் குடாநாட்டை விட்டு வெளியே வந்து ஒரு வாரம் இருந்தால் போதும். தாம் இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தப் படுவதை உணர்கிறார்கள். புலிகள் இருப்ப தால்தான் கௌரவமாக வாழ்கிறோம் என்று நினைக்க வேண்டியவர்களாகிறார்கள்.

தமிழுக்கு சம அந்தஸ்து மட்டுமல்ல தமிழ் பேசுவோருக்கு சம அந்தஸ்தும் பலத்தைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும் நிலைதான் இருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் பெருவாரியான வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர் ஜோசப் பரராஜசிங்கம்.

அவரும் தமிழ் மொழி ஆணைக்குழு விடம் போய் தமிழ் புறக்கணிப்பைப் பற்றி முறையிடுகிறார். கேட்கப்படுகிறதே தவிர குறை தீர்க்கப்படுவதில்லை.

இதையே புலிகளது மட்டக்களப்பு தலைவர் கரிகாலன் கூறினால் பரராஜசிங்கத் தின் கருத்தைவிட சற்று கூர்மையாக கவனத்தோடு ஆராயப்படும்.

இவ்வாறான நிலையில் திரு.ஜோசப் பரராஜசிங்கம் புலிகளை பிரமிப்போடு பாராட்டுவதை குறைசொல்ல முடியாதுதான்.

புலிகள் இதனை புரிந்துகொண்டிருக் கிறார்கள். அதனால்தான் பலத்தை இழந்து விடாத ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

புலிகளது நிர்வாக அமைப்புக்கள் பலம் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதனடிப்படையில்தான் தன்னாட்சி யுள்ள சமஷ்டி என்று புலிகள் கோருகிறார்கள்.

இதனை பலர் தவறாக புரிந்து கொள்கிறார்கள். புலிகள் மாநில சுயாட்சி கேட்கிறார்கள் - என்றுகூட தன்னாட்சி



என்பதற்கு விளக்கம் கொடுக்கிறார்கள் சிலர்.

சமத்துவமான இரு தேசங்களது கூட்டாச்சி. இரு தேசங்களிலும் இராணுவம் உட்பட பாதுகாப்பு, நிதி, நீதி நிர்வாகம் அந்தந்த அரசாங்கங்களின் பொறுப்பில் இருக்கும்.

மத்திய அரசுக்கு என்று புறம்பாக தனியான ஒரு இராணுவம் இருக்கலாம்.

சிறீலங்கா-தமிழ் ஈழம் என்றும் இரு தேசங்கள் இலங்கைத் தீவில் கூட்டாச்சி முறையில் இணைந்திருக்கும்.

இதனைத்தான் 'தன்னாட்சியுள்ள சமஷ்டி' என்று புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

'சமஷ்டி' முறை நிலவும் நாடுகளில் எல்லாம் அது ஒரேவிதமான அதிகாரங்களை கொண்டிருக்கவில்லை.

நாடுகளுக்கு நாடு வேறுபாடு உள்ளது. கனடாவில் உள்ள சமஷ்டி முறை வேறு. சுவிட்ஸர்லாந்தில் உள்ள சமஷ்டி முறை வேறு. அவுஸ்திரேலியாவில் உள்ள சமஷ்டி முறை இன்னொரு விதம்.

கனடாவில் உள்ள சமஷ்டி முறை உயர்ந்ததாகக் கருதப்பட்டது.ஆனால் அதுவே போதாது, பிரிந்து செல்ல வேண்டும் என்று 'கியூபெக்' மாநிலத்தில் உரத்த குரல் எழுந்துள்ளது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே 'தன்னாட்சியுள்ள சமஷ்டி' என்று புலிகள் கூறியுள்ளனர்.

புலிகள் கோரும் 'தன்னாட்சி' வடக்கு-கிழக்கில் தமிழ் பேசும் மக்களது ஆட்சி மட்டுமல்ல, தற்போதுள்ள நிலவரப்படி அது புலிகளின் ஆட்சியாகவும் அமையும்.

ஏனைய தமிழ் கட்சிகளும் சமஷ்டி முறையை வலியுறுத்தியுள்ளன.

புலிகளது பலமும் தமிழ் கட்சிகள் சமஷ்டியை வலியுறுத்திப்பேச சாதகமாக இருக்கிறது என்பதை தமிழ் கட்சிகள் மறுக்க முடியாது.

எனினும், ஏனைய தமிழ் கட்சிகள் கோரும் சமஷ்டியைவிட உயர்ந்த அதிகாரங் கள் உள்ள, எப்போது வேண்டுமானாலும் பிரிந்து செல்லக்கூடிய 'தன்னாட்சியுள்ள சமஷ்டி'யைத்தான் புலிகள் குறிப்பிடு கிறார்கள்.

ஆனால், தமது எதிர்பார்ப்புக்கள் பற்றி எடுத்துக் கூறுவதற்கு புலிகள் முன் வரமாட்டார்கள்.

அரசு குறைவான அதிகாரமுடைய தீர்வை முன்வைத்தால் ஒரேயடியாக நிராகரிப்பது;

அதிகாரப் பரவலாக்கலுக்கு அரசு துணிச்சலாக முன்வந்து தீர்வொன்றை முன்வைத்தால் அதனை அடிப்படையாக வைத்து 'தன்னாட்சி சமஷ்டி' அதிகாரம் பற்றி பேசுவது என்பதே புலிகளது நோக்கமாகும்.

தமது 'தன்னாட்சி சமஷ்டி' கோரிக்கையை அரசு நிறைவேற்ற முடியாது என்று புலிகளுக்கு தெரியும்.

தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றாக வேறு தீர்வுக்கு தயாராக இருக்கிறோம் என்று காட்டாவிட்டால் சர்வதேச அரங்கில் தனிமைப்பட நேரலாம் என்பதே புலிகளது கோரிக்கையின் உள் நோக்கம்.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் அன்றைய இந்தியத் தூதர் டிக்ஷித் பிரபாகரனிடம் சொன்னாராம்: **"உங்களை முதலமைச்சராக்குகிறோம்"** என்று.

அதற்கு பிரபாகரன்: **"நான் இப்போதே முதலமைச்சராகத்தானே இருக்கிறேன்."** என்று பதிலளித்தாராம்.

அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கம் மூலம் மட்டுமே எதையாவது செய்ய நினைத் தால் அது பிரபாவை திருப்திப்படுத்தாது.

அதிகாரம் இப்போதும் புலிகளிடம்தான் இருக்கிறது.'தன்னாட்சியை' அங்கீகரிப்பது மட்டுமே அரசால் செய்யப்படவேண்டும். அது சாத்தியமில்லை என்னும்போது "வேண்டாத பெண்டாட்டி கை பட்டாலும் குற்றம் கால் பட்டாலும் குற்றம்" என்ற பாணியில் பிரசாரப் போர் தொடரும்.

'தன்னாட்சியை' அங்கீகரிக்காத நிலையில் 'தமிழர்களுக்கு நல்லது செய்கிறார்கள்' என்ற அபிப்பிராயம் அரசு மீது ஏற்பட புலிகள் விடமாட்டார்கள்.

□□

# தொண்டமானுக்கு தொடரும் சவால்

அமைச்சர் தொண்டமான் தனது அமைச்சு விவாதத்தின் மீது பாராளு மன்றத்தில் உரையாற்றினார்.

ஆளும் கட்சி தரப்பில் வழக்கத்தைவிட குறைவான உறுப்பினர்களே அவரது உரையின்போது சமூகமளித்திருந்தனர். எதிர்க்கட்சி தரப்பும் வெறிச்சோடிக் கிடந்தது.

அதிலும் ஒரு வேடிக்கை, இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் தவிர வேறு எவரும் தமது தலைவரது உரையின்போது சமூகமளித்திருக்க வில்லை. ஈ.பி.டி.பி., புளொட் உறுப்பினர் கள் மாத்திரமே சமூகமளித்திருந்த தமிழ் உறுப்பினர்கள்.

தோட்டத் தொழிற்துறை அமைச்சு மீதான வாக்கெடுப்பில் இ.தொ.கா. எதிர்த்து வாக்களிக்கப்போவதாக கூறியிருந்தது.

ஏனைய தமிழ் கட்சிகள் தம்மை ஆதரித்தால் மட்டுமே எதிர்ப்பு தெரிவிப் போம் என்று பின்னர் கூறினார்கள்.

இறுதியாக ஜனாதிபதி சந்திரிக்கா வோடு பேசி ஒரு உடன்பாட்டுக்கு வந்துவிட்டதாக கூறிவிட்டு எதிர்ப்பை கைவிட்டது இ.தொ.கா.

புளாட்,ஈ.பி.டி.பி. கட்சிகள் இ.தொ. காவின் கோரிக்கைகளுக்கு சாதகமாக பேசியதால் தான் விரைவான உடன்பாடு காணமுடிந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளையில் மலையக மக்கள் முன்னணியோடு பொது விடயங்களில் இணைந்து செயற்பட இ.தொ.கா. முன்வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மலையகத்தில் தமிழர் வாழும் பகுதி களை உள்ளடக்கியதாக அதிகாரமுடைய ஒரு சபை உருவாக்கப்பட வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி கோரியுள்ளது.

இதனை இ.தொ.கா. ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளது. தற்போதுள்ள மாகாண சபை அமைப்பு முறையில் அதிகாரங் களை பரவலாக்கினால் போதும் என்பதே இ.தொ.காவின் நிலைப்பாடாகும்.

மலையக மக்கள் முன்னணியின் கோரிக்கை வெகுஜன ஆதரவைப் பெற்றுக் கொண்டால் இ.தொ.காவுக்கு பாதகம் ஏற்படலாம்.

அரசில் அங்கம் வகிக்கும் நிலையில் ம.ம.முன்னணி தனது கோரிக்கைக்காக வலுவாக போராட முனையாது என்பது இ.தொ.காவுக்கு ஆறுதலான விசயம்.

ஆனால், அரசாங்க தரப்பில் ஒத்து ழைப்பு இன்மை என்பது தொண்டாவுக்கு ஒரு பிரச்சனைதான்.

ஆளும் கட்சி தரப்பில் அவர் அமர்ந் திருந்தாலும்- முன்வரிசையில் இடமளிக்கப் பட்டிருந்தாலும்- வேண்டாத விருந்தாளி. உபசரிப்புத்தான் பல சமயங்களில் கிடைக் கிறது. அரச தரப்பின் மூத்த தலைவர்கள் தவிர ஏனைய உறுப்பினர்கள் தொண்டா குறித்து திருப்தியாக இல்லை என்று தெரிகிறது. அரசியல் சாணக்கியரான 'தொண்டா' பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து சாதிக்க நினைப்பது என்னவென் பது அவருக்கு மட்டுமே வெளிச்சம்.

சமீபத்தில் இ.தொ.கா. உறுப்பினர் திரு. சென்னன், இனவாதம் இப்போதும் இருக்கிறது என்று சபையில் பேசியதும், அதனை பிரதிபாதுகாப்பு அமைச்சர் சற்று காரமாக மறுத்தும் பேசினார். முதலில் ஆவேசப்பட்டு பேசிய சென்னன் மறுப்பை மட்டும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

தற்போதைக்கு இ.தொ.கா. அரசியல் போருக்கு தயாராக இல்லை.



திருவான மலையில் கூட்டான கட்சி அனுதாபிகள் மத்தியில் ஒரு குழப்பமாம். தங்கமானவரால் முடியாது; தன்னிடம் பிரச்சனைக ளைச் சொல்லுமாறு கேட்கிறாராம் செயலர். வெகுஜனப் பிரதிநிதியை விடத் தனக்கு செல்வாக்கு இருக்கிற தாய் சொல்லுறார் எண்டும் தகவல். யார் சொல்லுறதைக் கேட்கிறது?

தேனகத்தில் கூட்டான கட்சியின் சிபார்சு நியமனங்களை போக்குவரத்து சம்பந்தப்பட்ட அதிகாரமுடையவர், சட்டென்று தலை கீழாய் மாற்றிப்போட்டாராம். விசயம் அறிஞ்ச வெகுஜனப் பிரதிநிதிகள் ஓடுப்பட்டுத் திரிஞ்சு ஒருமாதிரி ஒப்பேற்றிப் போட்டினமாம்.

கிழக்குக்கு ரெண்டு எழுத்துத் தலைவர் அணியொன்றை அனுப்பி வைச்சிருக்கிறாராம். கிழக்கில் புதுசா திரட்டியிருக்கிற புதியவர்கள் எண்ணிக்கையும் நல்ல தொகை எண்டு தகவல். 'நாங்களே போராடுகிறோம் நீங்கள் படிக்கிறியளோ?" எண்டு ரெண்டு எழுத்துப் பெண்கள் பள்ளிக்கூடங்களில் போய் கேள்வி கேட்க, ஆண் மக்கள் அள்ளுப் பட்டுக்கொண்டு போகினமாம்.

அரசியல் தொடரிலை தனது பெயரை முக்கியத்துவப் படுத்தேல்லை எண்டு ஓடிப்போன தலைவருக்கு கோபமாம். இடை நடுவிலை தொற்றிக்கொண்டு பதவி பெற்ற கதை தெரிஞ்சதாலை புது வரலாறு எழுதி 'போஸ்ட்' பண்ணுகிறாராம். என்ரை பெருமாளே பொறுத்திருந்தா நல்லா இருந்திருக்கும். இப்ப சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த கதையாகிப் போச்சு.

## அதிரடி அய்யாத்துரை

கிழக்கில் ரெண்டு எழுத்தார் சகல தமிழ் அமைப்பு பிரதி நிதிகளோடும் சாதாரணமாக கதைச்சவையாம். என்ன அபிப்பிராயம் எண்டு நோட்டம் விட்டிருப்பினம். ஒரு தமிழ் குழு மட்டும் கூட்டான கட்சிப் பேரையும் இழுத்து அறிக்கை விட்டுப் போட்டுது. ரெண்டு எழுத்தார் சந்தித்த செய்தியை சொன்னா நல்ல பெயர் கிடைக்கும் எண்டு சில தமிழ் அமைப்புக்களே நம்புற அளவுக்கு நிலமை இருக்குது பார்த்தியளோ!

திருவானமலை அதிகார ஏஜன்ட் சம்பந்தமாக தமிழ் கட்சியளும், தனித்துவ அமைச்சரும் படு கோபத்திலை இருக்கிறதாய் தகவல். மிஞ்சிப் போனா அவரை மாற்றுவதற்கும் யோசிக்கப்படுகிறதாம்.

பச்சை அணிக்குள் தேசியப் பட்டியல் விடயத்தில் பூசல் தொடருது. கிழக்கு பிரமுகர் ஒருவருக்காக முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் ஒற்றைக் காலில் நிண்டவராம். இளம் தலைவர் பிடிவாதமாய் மறுத்து தனது ஆள் ஒருவரை நியமிச்சுப் போட்டாராம். நியமிக்கப்பட்டவர் மிக இளையவராம்.

வதந்திகள் கண்டமாதிரிப் பரவுது பாருங்கோ. தனிப்பட்ட விசயங்களை கிளறி, கை கால் வைச்ச செய்தியாக்கி அரசியல் இமேஜ் விசயத்திலை பலவீனப்படுத்த திட்டமிட்ட வேலைகள் நடக்குதாம். இதை அறிஞ்சதான் சிலருக்கு தட்டு விழுந்ததாகத் தகவல். 'தட்டு' விழுந்தது பிழைதான். அதுக்காக புனை கதையிட்டு செய்திகள் போடுறதும் சரி எண்டு சொல்ல முடியாது.

நாலு தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டு திட்டத்தை முன்வைத்த விசயம் இனவாதிகள் சிலருக்கு வயிற்றில் புளியைக் கரைச்சி ருக்குதாம். அடம்பன் கொடி திரண்டால் மிடுக்குதானே?

மூடத்தனங்களுக்கு மு.மேத்தா சாட்டை வீசிய கவிதை ஒன்று பார்வைக்கு வந்து மனதில் பதிஞ்சு போச்சு. நீங்களும் கேளுங்கோ:

"நம்பிக்கை
நமக்கு
சிறகு முளைக்க வைக்கிறது.
மூட நம்பிக்கையோ
முளைத்த சிறகுகளை
முறித்துப் போட்டுவிட்டு
நம் முதுகிலேயே
அதைச்
சுமக்கவும் வைக்கிற
சுட்டித்தனம் செய்கிறது."

மெத்தச் சரியான கருத்துத்தானே? பின்பற்றினால் என்ன?

# அற்புதன் எழுதுவது



## வீடுகள் எரிந்தன.

1983 மே 18ம் திகதி மந்தகதியில் நடந்து கொண்டிருந்தது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்.

கந்தர் மடத்தில் உள்ள தேர்தல் சாவடியின் முன்பாக சைக்கிள்களில் வந்திறங்கினார்கள் புலிகள்.

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில்தான் தேர்தல் சாவடி அமைக்கப்பட்டிருந்தது.

வாக்களிப்பு முடிவதற்கு ஒரு மணி நேரம் மட்டுமே இருந்தது.

சைவப் பிரகாச வித்தியா சாலையின் முன்புற மதில் புலிகளுக்கு பாதுகாப்பு அரணாக மாறியது.

துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின. உள்ளே காவலுக்கு நின்ற பொலிசாரும், இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தினார்கள்.

சுமார் பதினைந்து நிமிடங்கள் மோதல் நீடித்தது. புலிகளின் கை

போன்றவற்றில் ஈடுபடவேண்டும் என்று டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார். அத்னை பத்மநாபா ஏற்றுக் கொள்ளவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற திருக்கோவில் வங்கிக் கொள்ளை நடவடிக்கை காரணமாகவே டக்ளஸ் தேவானந்தா கைதுசெய்யப்பட்டு சிறையில் இருந்தார்.

புலிகளது 'ஹிற் அண்ட் றண்' எனப்படும் தாக்கிவிட்டு ஓடும் தந்திரோபாயம் தவறானது. புலிகள் தாக்கிவிட்டு ஓடி விடுவார்கள். படையினரால் மக்கள் தாக்கப் படுவார்கள். என்பதே ஈ.பி.ஆர். எல்.எஃப் அமைப்பின் விமர்சனமாக முன்வைக்கப்பட்டது.

புளொட் அமைப்பினரும் 'ஹிற் அண்ட் றண்' தந்திரோபாயத்தை கடுமையாக சாடினார்கள்.



செல்லக்கிளி

சம்பவம் காரணமாக கைதுசெய்யப்பட்டு விடுதலையான பிரபாகரன் மதுரையில் தங்கியிருந்தார்.

பிரபாகரனை பார்ப்பதற்காக மதுரைக்கு வந்தார் செல்லக்கிளி.

தமிழ்நாட்டு பொலிசாருக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு யாழ்ப்பாணம் செல்லப் போகும் திட்டத்தை கூறினார் பிரபாகர்ன்.

அவ்வாறு பிரபாகரன் யாழ்ப்பாணம் சென்றால் தானும் வந்து இணைந்துகொள்வேன் என்று கூறிவிட்டு, கைத்துப்பாக்கி ஒன்றை பிரபாவிடம் கொடுத்துவிட்டு பம்பாய் சென்றார் செல்லக்கிளி.

பிரபாகரன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிட்டார். கொடுத்த வாக்கின் படி செல்லக்கிளியும் வந்து சேர்ந்தார்.

எனக்கு எந்த விதமான அக்கறையுமில்லை."

இவ்வாறு ஜே.ஆர்.ஜயவர்த்தனா அகம்பாவத்தோடு அறிவித்தார்.

இதற்கெல்லாம் பதிலடியாகவே பாரிய தாக்குதல் திட்டம் புலிகளால் வகுக்கப்பட்டது.

### தாக்குதல்

1983 ஜூலை 23ம் திகதி. யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள பலாலி வீதியில், செல்லக்கிளி

# நள்ளிரவில் நடந்த கெரில்லா தாக்குதல்!

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

மேலோங்கத் தொடங்கியது. படையினர்சிலர் தப்பியோடினார்கள்.

கோப்ரல் ஜயவர்த்தனா கொல்லப்பட்டார். கோப்ரல் பண்டார, கொன்ஸ்டபிள் திலகரட்ண ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இயந்திரத் துப்பாக்கிகளை கைப்பற்றிக் கொண்டு புலிகள் விரைந்து சென்றனர். இத் தாக்குதலில் துணிச்சலாக செயல் பட்டதன் மூலம் 'கிட்டு' புலிகளுக்குள் கவனத்திற் குரியவராக மாறினார்.

1981ம் ஆண்டு மார்ச் 25ம் திகதி நடைபெற்ற நீர்வேலி வங்கிக் கொள்ளை நடவடிக்கைதான் கிட்டு பங்குகொண்ட முதலாவது முக்கிய நடவடிக்கையாகும். அதில் காரோட்டியாக இருந்தார் கிட்டு. எனினும் கந்தர் மட தாக்குதலில்தான் கிட்டுவின் முத்திரை பதிந்தது.

கந்தர்மட தாக்குதலை அடுத்து விரைந்து வந்த பொலிசார்





தலைமையில் பிரபாகரன் உட்பட புலிகள் காத்திருந்தனர். தாக்குதல் குழுவில் மொத்தமாக 14 பேர் இருந்தனர்.

பாதையில் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. தாக்குதல் பிரிவினர் பாதையின் இரு புறமும் பிரிந்து ஆயுதங்களோடு தயாராய் நின்றனர்.

வழக்கம் போல நள்ளிரவு ரோந்துக்கான இராணுவ படையினர் ஒரு 'ட்ரக்' வண்டியிலும் ஜீப்பிலுமாக வந்து கொண்டிருந்தனர்.

நிலக்கண்ணி வெடி புதைக் கப்பட்ட இடத்தில் 'ஜீப்' வண்டி வந்து சேர்ந்த போது நிலக்கண்ணி வெடி வெடித்தது 'ஜீப்' தூளாகியது.

'ஜீப்' வண்டி சிதறுவதைக் கண்டு பின்னால் வந்த 'ட்ரக்' வண்டி நிறுத்தப்பட்டது. அதில் இருந்த இராணுவ வீரர்கள் குதித்து தப்பி ஓட முயன்றனர்.

வெறியாட்டம் நடத்தினார்கள். அருகிலிருந்த வீடுகளை தீயிட்டுக் கொழுத்தினார்கள்.

யாழ்பல்கலைக்கழக மாணவர்களும், ஈழமாணவர் பொதுமன்றத்தினரும் தீக்கிரையான வீடுகளுக்கு யாழ்ப்பாணத்தில் நிதிசேகரித்து நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை புலிகளது மறைமுகமான கட்டுப்பாட்டில் இருந்தது.

மாணவர் அவைத் தலைவராக இருந்த இராஜநாயகம் பின்னர் புலிகளது முக்கியமான தலைவர்களில் ஒருவராக விளங்கினார்.

தற்போது புலிகளில் இருந்து விலகி வெளிநாடொன்றில் வசிக்கிறார்.

### ஹிற் அண்ட் றண்

தாக்கிவிட்டு ஓடும் புலிகளது கெரில்லா நடவடிக்கைகளை ஈழ மாணவர் பொதுமன்றம் விமர்சனம் செய்தது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலை மறைவு அமைப்பாக இயங்கியது. அதன் உறுப்பினர்கள் ஈழமாணவர் பொதுமன்றம் என்ற பெயரில் பகிரங்கமான அரசியல் வேலைகளில் ஈடுபட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் மத்திய கமிட்டி உறுப்பினராக அப்போதிருந்தவர் குணசேகரன். அவரது பொறுப்பின் கீழ், சிறீதரன், ரமேஷ், தயாபரன், சேகர், செழியன், சிவா, குமார், ஐயா,டேவிற்சன்ஆகியோர் இலங்கையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பின் வேலைகளை 83 இல் முன்னெடுத்துக் கொண்டிருந்தனர்.

இவர்களில் சிறீதரன் தற்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பிலும், ரமேஷ் ஈ.பி.டி.பி அமைப்பிலும் இருக்கின்றனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் மத்திய குழு உறுப்பினராகவும் மக்கள் விடுதலை படைத் தளபதியாகவும் இருந்த டக்ளஸ் தேவானந்தா 83ம் வெலிக்கடை சிறையில் இருந்தார்.

அமரர் க.பத்மநாபா தமிழ் நாட்டில் தங்கியிருந்தார். சுரேஸ் பிரேமச்சந்திரன் இந்திய பிரதிநிதியாக இருந்தார்.

இயக்கம் வளர வேண்டுமானால் தாக்குதல் நடவடிக்கைகள், அரச நிறுவனங்களில் நிதி பறிப்புக்கள்

புளொட் தலைவர் அமரர் உமா மகேஸ்வரன் 'மக்கள் யுத்தம்' என்ற கருத்தை முன்வைத்தார்.


வங்கிகளில் நிதிப் பறிப்பு நடத்தக் கூடாது என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப் சொல்லிக் கொண்டிருந்தது.

மதிய சாப்பாட்டுக்குக்கூட அதன் உறுப்பினர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர்.

### விமர்சனமும்-நட்பும்

வீடு வீடாக நிதி திரட்டுவதில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஒரு சம்பவம்:

யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள வீடொன்றுக்கு நிதி திரட்டச் சென்றார்கள். ஒரு ரூபாய் குத்தியை தூக்கி முகத்தில் எறிந்துவிட்டு, 'வெளியே போங்கள்' என்றார் வீட்டுக்காரர்.



கிட்டு

பிரபா யாழ்ப்பாணம் வந்தது படகு மூலம். ஆனால் செல்லக்கிளி வந்தது விமானம் மூலம்.

பிரிட்டன் கடவுச்சீட்டு ஒன்றின் மூலமாக, பிரிட்டன் பிரஜையாக கொழும்பு விமான நிலையத்தில் வந்திறங்கினார் செல்லக்கிளி.

செல்லக்கிளி வாகனங்களை செலுத்துவதிலும் தாக்குதல் நடவடிக்கைகளிலும் துணிச்சலானவர்.

தனது சகோதரர் செட்டி எனப்படும் தனபாலசிங்கத்தின் கொலைக்கு பிரபாவே காரணம் என்று செல்லக் கிளிக்குத் தெரியும்.

ஆனாலும், இயக்க இரகசியங்களை வெளியிட்ட செட்டி கொல்லப்பட வேண்டியவரே என்பதில் செல்லக்கிளிக்கு கருத்து பேதம் கிடையாது. செல்லக் கிளியின் இலட்சிய பற்றுக்கு இது ஒரு உதாரணம்.

தாக்குதல் நடவடிக்கைக்கு தலைமை தாங்கும் பொறுப்பு செல்லக்கிளியிடம்

வீதியின் இரு புறமும் தயாராக நின்ற கெரில்லாக்கள் தாக்குதலை ஆரம்பித்தனர்.

இராணுவ வீரர்கள் சிலர் 'ட்ரக்' வண்டியின் கீழே பதுங்கிக் கொண்டு சுடத் தொடங்கினார்கள்.

ஒரு தோட்டா புலிகளது தாக்குதல் பிரிவுத் தலைவர் செல்லக்கியின் மார்பில் பட்டது.

செல்லக்கிளி பலியானார். 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நள்ளிரவில் கச்சிதமாகத் திட்டமிட்டு நடத்திய அத் தாக்குதல் கெரில்லா போராட்டத்தில் ஒரு திருப்பமாக அமைந்தது.

தாக்குதலை முடித்துக் கொண்டு கைப்பற்றிய ஆயுதங்களோடு புலிகள் தப்பிச் சென்றனர்.

தாக்குதல் செய்தியை அறிந்து சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தனர் இராணுவத்தினர்.

# ஆளவந்தவரின் அகம்பாவமான அறிவிப்பு!

"இவ்வாறு நிதி திரட்டி இயக்கத்தை கட்டியெழுப்ப முடியாது. அனுமதி தாருங்கள். நிதி எடுத்துக் காட்டுகிறோம்" என்று கேட்டனர் உறுப்பினர்கள். ஆனால் அனுமதி கொடுக்கவில்லை தலைமை.

பிரசுரங்கள் வெளியிடவும், பத்திரிகை அச்சிடவும் பணம் வேண்டுமே பலரிடம் கடனாகக் கேட்டுப் பெற்றுக் கொண்டனர்.

அவ்வாறு கடன் கொடுத்தவர்களில் ஒருவர் பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் இராஜநாயகம்.

புலிகளது நடவடிக்கைகளை ஈ.பி.ஆர்.எல்.எஃப். கடுமையாக விமர்சித்தது. அதேவேளை இரண்டு அமைப்பு உறுப்பினர்களும் பரஸ்பர நட்பும், மதிப்பும் கொண்டிருந்தனர் இது ஆரம்ப காலகட்டத்தில் நிலவிய புரிந்துணர்வுக்கு எடுத்துக்காட்டாகும்.

பாண்டி பஜார் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னர் புளொட் தலைவர்கள் உமாமகேஸ்வரன், கண்ணன் ஆகியோர் சென்னையில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். அலுவலகத்தில் தங்கியிருந்தனர்.

தங்கத்துரை ஒரு முறை காயமடைந்தபோது உமாகேஸ்வரனது யாழ்ப்பாண வீட்டில் தங்கி சிகிச்சை பெற்றார். இவையெல்லாம் இன்று காணமுடியாத நட்புறவுகள்.

### புலிகளின் கருத்து

'ஹிற் அண்ட் றண்' நடவடிக்கைகள் குறித்து எழுந்த விமர்சனங்களை புலிகள் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை.

"எந்த எதிரி எம்மைப் போராட நிர்ப்பந்தித்தானோ அந்த எதிரி மூலமே எம்மை பலப்படுத்திக் கொள்வது" என்பதுதான் புலிகளது கருத்து.

படையினர் பொதுமக்களை தாக்கும் போது அவர்கள் ஆயுதப்போராட்டத்தை ஆதரிப்பர். கெரில்லாக்களை சுற்றித் திரளுவார்கள்.

கெரில்லாக்களது துப்பாக்கி வேட்டுக்கள் மக்களை தட்டி எழுப்பும். கெரில்லா நடவடிக்கைகளின் விளைவுகள் மக்களை அணிதிரட்டும். என்பதே புலிகளது நம்பிக்கையாக இருந்தது.

கந்தர்மடம் தாக்குதலை அடுத்து பாரிய தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிட்டனர்.

பிரபாகரனது நேரடியான பங்களிப்போடு தாக்குதலுக்கான திட்டம் வகுக்கப்பட்டது.

### மீண்டும் செல்லக்கிளி

புலிகளில் இருந்து விலகிப்போய் பம்பாயில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர் செல்லக்கிளி.

பாண்டி பஜார் துப்பாக்கி சூட்டு

ஒப்படைக்கப்பட்டது.

செல்லக்கிளியிடம் பொறுப்பை ஒப்படைத்த பிரபாகரன் தாக்குதல் நடவடிக்கையில் தானும் கலந்துகொள்ள முன்வந்தார்.

### அவசரகாலச் சட்டம்

கந்தர்மடம் தாக்குதலை அடுத்து ஜே.ஆர். அரசு அவசரகாலச் சட்ட விதிகளை அமுலுக்கு கொண்டுவந்தது.

'பயங்கரவாதிகள்' என்று சந்தேகிக்கப் பட்டவர்களை சுட்டுத்தள்ளவும், கொல்லப்பட்டவர்களை நீதிமன்ற விசாரணை இன்றிப் புதைத்து விடவும் இராணுவத்தினர் அதிகாரம் பெற்றனர்.

வவுனியா நகர் இராணுவத்தினர் மூட்டிய தீயில் பற்றி எரிந்தது.

திருகோணமலையில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு நடவடிக்கைகள் காடையர்களால் நடத்தப் பட்டன. இராணுவத்தினர் காடையர்களுக்கு உதவினார்கள்.

### ஜே.ஆர்.ஆணவம்

இந்தச் சம்பவங்களின் பின்னர் பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்றுக்கு ஜே.ஆர். ஜயவர்த்தனா பேட்டியளித்தார். அவர் சொன்னது இது:

**"தமிழர்களின் உயிரைப் பற்றியோ, தமிழர்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியோ**

வரும்போதே சகல திசைகளிலும் கண்மூடித்தனமாக சுட்டுக்கொண்டே வந்தனர்.

திருநெல்வேலிப் பகுதியில் இருந்த வீடுகள் சிலவற்றின் மீதும் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தப்பட்டது.

வீடுகளுக்குள் புகுந்து கண்மூடித்தனமாகச் சுட்டனர். தமிழர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

### வெடித்தது கலவரம்

ஜூலை 24ம் திகதி விடிந்தபோது திருநெல்வேலி பகுதியில் மரண ஒலங்கள்தான் கேட்டுக் கொண்டிருந்தன.

நாடெங்கும் திருநெல்வேலி தாக்குதல் செய்தி பரவியது. அதனோடு சேர்ந்து இனக்கல வரமும் வெடித்தது.

முன் எப்போதும் கண்டிராத அளவில் தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் பேயாட்டம் நடத்திக்கொண்டிருந்தன.

கொழும்பில் தமிழர்கள் கொல்லப்பட்டனர். வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

வெலிக்கடை சிறைக்குள் இருந்த போராளிகளுக்கு எதிராக ஒரு சதித் திட்டம் உருவாகியது.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# கொப்பன் ஹேகனில் லோரன்ஸ்- சந்திரிகா

# சமாதான- சகவாழ்வுக்கு ஏற்புடைய சமஷ்டி ஆட்சிமுறை!

அலசுவது- இராஜதந்திரி

உலகத் தலைவர்கள் பலரும் பங்குபற்றிய உலக சமூகவியல் உச்சி மகாநாட்டில் இலங்கையின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் கலந்து கொண்டிருந்தார்.

டென்மார்க்கின் தலைநகரான கொப்பன் ஹேர்கனில் இந்த உச்சி மகாநாடு இடம்பெற்றிருந்தது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இதனை ஒழுங்கு செய்திருந்தது.

உலகில் இன்று பலபாகங்களிலும் பல்வேறு வடிவங்களிலும் சமூகவியல் பிரச்னைகள் பூதாகரமாகத் தலைதூக்கியுள்ளன. வறிய நாடுகளில் மட்டுமல்ல செல்வந்த நாடுகளில் கூட பெருமளவில் சமூகவியல் சார்ந்த பிரச்னைகள் தலைதூக்கியுள்ளன.

அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும், வறிய நாடுகளுக்குமிடையிலான இடைவெளி பெரிதாக இருக்கக் காணப்படுகின்றது. சகல மூலவளங்களையும் ஒரு நாடுகொண்டிருந்த போதிலும் அந்நாட்டின் உள்நாட்டுப் பிரச்னைகள், குறிப்பாக போர் மற்றும் அரசியல் பூசல்கள் காரணமாக அந்நாடு காத்திரமான அபிவிருத்தியை அடைய முடியாதிருக்கின்றது.

இதேவேளை கைத்தொழில் ரீதியாக முன்னேறி செல்வந்த நாடாக ஒரு நாடு திகழ்ந்த போதிலும் அந்நாட்டில் சுற்றாடல் பாதிப்பு, மற்றும் இன்னோரன்ன காரணங்களால் சமூகவியல் பிரச்சனைகள் தலைதூக்கியிருக்கக் காணப்படுகின்றன.

எனவே உலகில் இன்று அனைத்து நாடுகளுமே பல்வேறு காரணங்களை முன்னிட்டும் பூதாகரமான சமூகவியல் பிரச்சனைகளை எதிர்நோக்கியிருக்கின்றன.

இலங்கையும் சமூகவியல் சார்ந்த காரணங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டு உறுதியான வளர்ச்சியையோ, அல்லது சமாதான- சகவாழ்வையோ கொண்டிருக்க முடியாத நிலையில் இருக்கின்றது.

இலங்கை ஒரு சிறியநாடு; ஆயினும் கணிசமானளவு மூலவளங்களைக் கொண்டிருக்கின்றது. ஆனால் இந்த மூலவளங்களின் பயனை முழு அளவில் பெறமுடியாது ஆரோக்கியமான அபிவிருத்தியையும் காணமுடியாத நிலையிலேயே இலங்கையின் சமூகவியல் காரணிகள் விளங்குகின்றன.

இனக்கலவரங்கள், தீவிரவாதப்பிரச்னைகள், பயங்கரவாத நடவடிக்கைகள் என்பவற்றினால் முழுநாடுமே பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் இலங்கையின் சமூக அமைப்பில் தோன்றியுள்ள பாதிப்புகளுக்கு கடந்த ஒரு தசாப்த காலமாக நிலவி வரும் வடக்கு, கிழக்குப் பிரதேச நெருக்கடி ஒரு பிரதான காரணமாக விளங்குகின்றது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் யுத்த நெருக்கடிகள் ஏற்படுத்தியுள்ள வடுக்கள் ஆழமானவையாக இருக்கின்றன.

யுத்த நிலபரங்களால் கொடிய மனிதாபிமானப் பிரச்னைகளை வடக்கு, கிழக்குப் பிரதேசம் எதிர்நோக்கியிருக்கின்றது. அகதிகளாகவும், அநாதைகளாகவும் இலட்சக்கணக்கானவர்கள் தமது சொந்த-பந்தம், சொத்து-சுகம் என்பவற்றைப் பறிகொடுத்திருக்கக் காணப்படுகின்றனர்.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே பாரிய மனிதாபிமானப் பிரச்னைகள் புடைத்தெழுந்திருக்கின்றன.

இங்கு கடந்த ஒரு தசாப்தகால யுத்தம் ஏற்படுத்தியுள்ள விளைவுகள் சமூகவியல் ரீதியாக இலங்கையின் ஆட்சியாளருக்குப் பெரும் சவால்களை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த ஆண்டுகளில் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தை முற்றிலுமாகப் புறக்கணித்து விட்டிருந்தனர். அங்கு நிலவிய யுத்தத்தை நிறுத்தி ஒரு உறுதியான அரசியல் தீர்வைக்காண எந்த வகையிலும் அன்றைய ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டவில்லை.

இதனால் வடக்கு, கிழக்கு நிலவரம் பல்வேறு வகையிலும் மோசமான பாதிப்புக்களைக் கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வந்தவுடன் வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்க்கும் விடயத்துக்கு முன்னுரிமை அளிக்கும் தோரணையில் தமது சமரச நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தார். ஆனால் அந்த சமரச முயற்சிகள் எதிர்பார்த்ததைப்போல வேகநடை போடக்காணப்படவில்லை.

வடபகுதி மீது போடப்பட்டிருந்த பொருளாதாரத்தடைகள் பலவற்றை சந்திரிகா அரசு நீக்கிவிட்டுள்ளதாக அறிவித்துள்ள போதிலும், வடக்கே பொருள் தட்டுப்பாடு நீங்கியமைக்கான அறிகுறிகள் தென்படவில்லை.

எனவே இலங்கை பாரிய சமூகவியல் பிரச்னைகளால் சூழப்பட்டு மனிதாபிமானம் மடிந்துபோன நிலையில் வடபகுதி காணப்படுகின்றது.

கொப்பன் ஹேர்கன் மகாநாட்டில் பங்குபற்றிய ஜனாதிபதி சந்திரிகா, உலகளாவிய ரீதியில் சமூகவியல் சார்ந்த பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

இருந்தபோதிலும் தமது சொந்த நாட்டில் குறிப்பாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நிரந்தர அமைதிக்கு வழியமைத்து அப்பிரதேசங்களில் கடந்த ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக சீர்குலைந்துபோயுள்ள மானிட மேம்பாட்டுக்கான அடிப்படை அம்சங்களை சீர் செய்ய வேண்டியது ஜனாதிபதி சந்திரிகாவின் தலையாய கடமையாகின்றது.

இந்நிலையில் உலகுக்கு உபதேசம் செய்யும் முன்னர் உள்நாட்டில் அனைத்தையுமே சீர் செய்ய வேண்டியது சந்திரிகாவின் பொறுப்பாகின்றது.

இலங்கையின் இன்றைய சந்ததியினர் 21ம் நூற்றாண்டின் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய ஆரோக்கியமான சமூகவியல் சூழ்நிலைகளை கட்டியெழுப்புவதற்கு சந்திரிகா உடனடியாகவே செயலில் இறங்க வேண்டியது அவசியமானதாகின்றது.

இலங்கையை 21ம் நூற்றாண்டினுள் கொண்டு செல்லும் பெரும் பொறுப்பு ஜனாதிபதி சந்திரிகாவையே சார்ந்திருக்கின்றது.




இந்நிலையில் இலங்கையில் நிலவும் இனப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வொன்றை எட்டுவதன் மூலமே இலங்கையில் ஆரோக்கியமான சமூகவியல் சூழலையும் கட்டியெழுப்ப முடியும்.

கொப்பன் ஹேர்கன் மகாநாடு வேறொரு விதத்திலும் முக்கியம் பெற்றிருக்கக் காணப்படுகின்றது. இம்மகாநாட்டுக்குச் சென்றிருந்த வேளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தரான திரு.லோரன்ஸ் திலகரையும் ஜனாதிபதி சந்திரிகா கொப்பன் ஹேர்கனில் சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பு இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமானதாகவே இருக்கின்றது.

இலங்கையில் இதுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தவருக்கும், அரச தரப்பினருக்குமிடையே மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் குறித்து எதுவும் தெளிவற்றிருந்த வேளையிலேயே சந்திரிகா-லோரன்ஸ் சந்திப்பு கொப்பன் ஹேர்கனில் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை திரு.லோரன்ஸ் திலகர் ஜனாதிபதி சந்திரிகாவிடம் தெளிவுபடுத்தியுள்ளார்.

விரிவான அதிகாரப் பரவலாக்கம், அதாவது சமஷ்டி அமைப்புடன் கூடிய தீர்வுத்திட்டமொன்றை இலங்கை அரசு இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக முன்வைக்கும் பட்சத்தில் தனிநாட்டுக் கோரிக்கையை மறுபரிசீலனை செய்யத்தயாராக இருப்பதாக திரு.லோரன்ஸ் திலகர் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கூறியிருந்தார்.



'சமஷ்டி' அமைப்பென்பது ஜனநாயக நடைமுறைகளின் உன்னத வடிவமைப்பையே பிரதிபலிக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா கொப்பன் ஹேர்கன் மகாநாட்டில் சமூகவியல் பிரச்னைகள் பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார். ஆனால் இன்று உலகில் சமூகவியல் பிரச்னைகளின் பின்னணியில் இன, மத, பிரதேச ரீதியான குரோதங்களே முனைப்படைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

உலகில் ஒவ்வொரு இனமும் தனது மொழி, தனது பிரதேசம், தனது சமூகம், தனது அடிப்படைத்தேவைகள் என்பன பாதுகாக்கப்பட வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றது.

இவ்வகையில் இந்த எதிர்பார்ப்புக்கு ஏற்ற விதத்திலேயே சமஷ்டி அமைப்பு விளங்குகின்றது.

பல்லின மற்றும் பிரதேச வேறுபாடுகளுடன் கூடிய ஒரு நாட்டில் சமஷ்டி அமைப்பு முறையானது வலுப்பெறும் பட்சத்தில் அந்நாட்டின் பல்வேறு பிரச்னைகளும் பெருமளவில் ஒய்ந்துபோகும் சூழ்நிலைகளே உருப்பெறுகின்றன.

ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சர்லாந்து, இந்தியா, ஜேர்மனி போன்ற நாடுகள் இத்தகைய சமஷ்டி முறையிலான ஆட்சிமுறைக்கு நல்ல உதாரணங்களாக விளங்குகின்றன.

எனவே இலங்கையின் அரசியல் நடைமுறையிலும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாகவும், அம்மக்களின் பரம்பலைப் பெருமளவு கொண்டிருப்பதாலும் ஒரு சிறந்த சமஷ்டி நிர்வாக அமைப்பு முறைக்கு உகந்த சூழ்நிலைகளைக் கொண்டிருக்கக் காணப்படுகின்றது.

சமஷ்டி நிர்வாக அமைப்பென்பது தமிழ் பேசும் மக்களால் இன்று நேற்று முன்வைக்கப்பட்டதொன்றல்ல.

இலங்கையின் மூத்த தமிழ் அரசியல் வாதிகளால் சமஷ்டிக் கோரிக்கை மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்டிருந்தது.

முதுபெரும் தமிழ் அரசியல் பிரமுகரான அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தமது பாராளுமன்ற நாட்களில் ஒரு தடவை உரை நிகழ்த்தியபோது 'சமஷ்டி அமைப்பு முறையை கொடுக்கத் தயங்கினால், தனிநாட்டுக் கோரிக்கைக்கான ஒரு போராட்டத்தை சந்திப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்' என்று தெரிவித்திருந்தார்.

ஆனால் அன்றைய ஆட்சியாளர்கள் அமரர் செல்வநாயகத்தின் தீர்க்கதரிசனமான அப்பாராளுமன்ற உரையின் தாற்பரியத்தை நன்கு கிரகிக்கத்தவறியிருந்தனர்.

அன்று இலங்கையின் எதிர்கால நலன்கருதி சமஷ்டி முறையிலான அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டிருக்குமானால் இன்று ஆயிரக்கணக்கில் 'மனித வேள்வி' இடம்பெறுவதைத் தவிர்த்திருக்கமுடியும்.

இந்நிலையில் சமஷ்டி நிர்வாக முறையின் அவசியம் லோரன்ஸ் திலகர் மூலமாக சந்திரிகாவிடம் மீண்டும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

திரு.திலகர் வெளியிட்ட இக்கருத்தின் மூலம் புலிகளின் நிலைப்பாட்டை ஜனாதிபதி சந்திரிகாவினால் நன்கு நாடிபிடித்தறிந்திருக்க முடியும்.

எனவே உலக சமூகவியல் மேம்பாடு பற்றி கொப்பன்-ஹேர்கனில் பிரஸ்தாபித்த ஜனாதிபதி சந்திரிகா, இலங்கையின் 21ம் நூற்றாண்டுப் பிரவேசத்துக்கும், சமாதான சகவாழ்வுக்கும் இனப்பிரச்னைத் தீர்வே அடிப்படை அம்சமாக அமைந்துள்ளதென்பதனை உணர வேண்டியவராகின்றார்.

இந்நிலையில் கொப்பன் ஹேர்கனில் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் ஒரு நல்ல தீர்வுத் திட்டத்தை நோக்கி வேகமாக நகருவதே ஜனாதிபதி சந்திரிக்காவின் அடுத்த கட்டப் பணியாக விளங்கிநிற்கின்றது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# ஹிட்லரின் காதலிகள்



ஹிட்லர், ஈவா-மாலை விருந்தின்போது

## சர்வாதிகாரியின் மறுபக்கம்

தருவது-ரசிகன்

உலகத்தை நடுங்கவைத்தவன் ஹிட்லர். பூமியில் ஒரு நரகத்தை உருவாக்கியவன். இரக்கமில்லாதவன் என்றெல்லாம் ஹிட்லர் பற்றி நமக்குத் தெரியும்.

ஹிட்லரின் இன்னொரு பக்கம் பற்றி பரவலாகத் தெரியாது.

"ஜோர்மன் நாடுதான் எனது மணப்பெண்" என்று சொன்ன ஹிட்லர் காதல் விவகாரங்களில் கில்லாடியாக இருந்தான் என்று சொன்னால் நம்புவது கஸ்டம்தான்.

இப்போது ஹிட்டலரின் ருசிகரமான காதல் லீலைகளை புரட்டிப் பார்க்கலாமா?

ஒல்லியான உடல். எதையாவது சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு. விழிகளில் தீட்சண்யம். அலட்சியமாக உடை அணிந்திருப்பான். அவன்தான் இளைஞன் ஹிட்லர்.

ஒருநாள் உலகையே மிரட்டும் சர்வாதிகாரியாகப் போகிறான் என்று தெரியாமல் அவனை,

"ஓநாய் குட்டியே இங்கே வா"

என்றுதான் அழைப்பாள் ஹெலன் செபஸ்ரியன்.

ஹெலன் செபஸ்ரியன் அழகி. கோடீஸ்வரர் காள் செபஸ்ரியனின் துணைவி. ஹெலனிடம் பணமிருந்தது. கட்டான உடலில் இளமை வேகம் இருந்தது.

அதனால் அவளுக்கு இளைஞன் ஹிட்லரை பிடித்திருந்தது.

ஹிட்லருக்கு ஹெலன் சூட்டிய செல்லப் பெயர்தான் 'ஓநாய் குட்டி'.

ஹிட்லர் ஹெலனின் காலடியில் அமர்ந்து கொள்வான்.

அவனது தலையை தனது மடியில் சரித்துக்கொண்டு முடியைக் கோதிக் கொடுப்பாள் ஹெலன்.

ஹெலனின் விருப்பத்தின்படி ஹிட்லர் இசைவாக நடப்பான்.

மெய் மறந்து போவாள் ஹெலன்.

ஹெலனுக்குத் தேவை சுகம்!

ஹிட்லருக்குத் தேவை பணம்!

அரசியலில் ஈடுபட்டு பெரிய ஆளாக வரவேண்டும் என்ற கனவு ஹிட்லருக்கு.

"ஹெலன் சீமாட்டியவர்களே எனக்குக் கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது."

"என் அருமை ஓநாய் குட்டியே! நான் சொல்வதையெல்லாம் நீ கேட்கிறாய். நீ கேட்பதை நான் தரமாட்டேனா? இந்தா இது போதுமா?"

தேவையான பணம் கிடைக்கும். ஹெலன் அழகிதான். வயதுதான் அதிகம். அதனால் ஹெலன் மீது ஹிட்லருக்கு சலிப்பு ஏற்பட்டது.

ஹெலன் உடனே ஒரு திட்டம் போட்டாள்.

தனது சிநேகிதியும், கோடீஸ்வரியுமான எல்ஸா புரூக்மன் என்பவளை ஹிட்லருக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

மியூனிச் நகரில் பிரபல புத்தக வெளியீட்டாளரின் இளம் மனைவிதான் எல்ஸா.

ஹிட்லருக்கு எப்போதும் பெரிய மார்புகள் உள்ள பெண்களைத்தான் பிடிக்கும். எல்ஸாவையும் பிடித்தது.

எல்ஸாவை வைத்து இன்னொரு திட்டமும் ஹிட்லரின் மூளையில் உருவானது.

"எல்ஸா எனக்கொரு ஆசை ."

ஹிட்லரின் அணைப்பில் இருந்த எல்ஸா,

"என்னவென்றாலும் சொல்லு டியர். தயங்காதே."

"வார வெளியீடு ஒன்றை வெளியிட்டு எனது கட்சியின் இலட்சியத்தை ஜெர்மன் மக்களுக்கு சொல்ல வேண்டும்."

"சொல்லு... நன்றாகச் சொல்லு."

"நீ தான் அதற்கு பண உதவி பண்ண வேண்டும்."

"ப்பூ...... இவளவுதானே!"

எல்ஸா உதவி செய்தாள். அது மட்டுமல்ல ஃபின்னிஷ் காகித ஆலையின் உரிமையாளர் மனைவியான செற்றுட் வொண் ஷீடில்ஸ் என்பவளையும் ஹிட்லரிடம் அறிமுகம் செய்து வைத்தாள்.

"காகிதம் இலவசமாக தரப்படும் எனக்கு வேண்டியதை நீ தந்தால் மட்டும்!"

என்றாள் கோடிஸ்வரி ஷீடில்ஸ். ஹிட்லர் ஷீடில்ஸ் விருப்பத்தை நிறைவு செய்தான். பல வருடங்களுக்கு தேவையான காகிதம் இலவசமாகவே கிடைத்தது.

ஹெலன், எல்ஸா, ஷீடில்ஸ் மூவரும் தமக்குள் பேசி ஒரு உடன்பாடு செய்து கொண்டனர்.

எந்த தினத்தில் ஹிட்லர் எவனோடு இருப்பான் என்று முறை வகுத்து ஹிட்லரை ஆட்டிப்படைத்தனர் மூன்று சீமாட்டிகளும்.

ஹெலனும் எல்ஸாவும் ஹிட்லரின் கட்சிக்காக இரண்டரைக் கோடி தங்க மார்க் (ஜெர்மன் நாணயம்) அள்ளிக் கொடுத்தனர்.



கட்டில் உழைப்பால் பெற்ற பணத்தில் முதல் தரமான 'மேர்சி டெஸ் பென்ஸ்' கார் ஒன்றை வாங்கினான் ஹிட்லர்.

100 மார்க் வாடகையில் அழகிய பங்களா ஒன்றிலும் குடியேறினான் ஹிட்லர். அதன் வாடகைப் பணத்தை ஹெலன் செலுத்தினாள்.

ஒரு நாள் ஹெலன் தன்னை மறந்திருந்த நேரத்தில் ஹிட்லர் கேட்டான்,

"எத்தனை நாள்தான் வாடகை பங்களாவில் நான் குடியிருப்பது?"

"ஓநாய் குட்டியே! உனக்கேன் கவலை. சொந்தமாக ஒரு மாளிகையே கட்டித் தருகிறேன் பார்."

சொன்னதைச் செய்தாள் ஹெலன். புது மாளிகையில் குடியேறிய ஹிட்லர் ஒரு அழகியைக் கண்டான். காதலித்தான். அவள் பெயர் ஜெலி. ஹிட்லரின் வக்கிரம் தாங்காமல் ஜெலி தற்கொலை செய்துகொண்டாள்.

ஹிட்லருக்கு இன்னொரு காதலியும் இருந்தாள். அவள் பெயர் ஈவா ப்ரான்.

ஹிட்லரின் நண்பன் ஒருவன் மூனிச் நகரில் புகைப்பட ஸ்ரூடியோ ஒன்று வைத்திருந்தான்.

அங்கே போயிருந்தான் ஹிட்லர். உயரத்தில் இருந்த ஷெல்ஃபில் வைக்கப்பட்டிருந்த பைல்களை எடுக்க ஏணியில் நின்றுகொண்டிருந்தாள் ஒரு இளம் பெண்.

குட்டையான ஸ்கட் அணிந்திருந்தாள். வெண்மையான அவளது கால்களை ஹிட்லர் இரசித்துக்கொண்டிருந்தான்.

அவன் சென்றதும் தனது முதலாளியிடம் அப் பெண் கேட்டாள்:

"வேடிக்கையான மீசையோடு என் கால்களை வெறித்துப் பார்த்த அந்த மனிதர் யார்?"

"அவரைத் தெரியாதா? அவர்தான் அடால்ஃப் ஹிட்லர்."

இப்படித்தான் ஹிட்லர்-ஈவா சந்திப்பு ஆரம்பித்து காதலாக மலர்ந்தது.

ஈவாவுக்கு ஹிட்லர் கொடுத்த முதலாவது காதல் பரிசு சிறு மலர் செண்டு. அதில் தனது கையொப்பமிட்ட அட்டை ஒன்றை செருகி வைத்திருந்தான் ஹிட்லர்.

ஈவாவை காதலித்துக்கொண்டே பல பெண்களோடு நெருக்கமாய் இருந்தான் ஹிட்லர்.

வக்கிரமான செக்ஸ் விடயங்களில் ஹிட்லர் ஈடுபாடுடையவன் என்ற செய்தி பத்திரிகைகளிலும் வெளிவந்து கொண்டிருந்தது.

1932 டிசம்பரில் நடந்த தேர்தலில் ஹிட்லருக்கு தோல்வி கிடைத்தது.

காதலி ஈவாதான் தனது அணைப்பில் ஆறுதல் கொடுத்தாள்.

ஜனவரி 30இல் ஹிட்லர் ஜெர்மனியின் 'சான்சலர்' பதவி பெற்றான். ஜெர்மன் ஒரு சர்வாதிகாரிக்கு சிம்மாசனம் கொடுத்தது.

பதவிக்கு வந்த ஹிட்லர் இரண்டாண்டுகள் காதலி ஈவாவை மறந்திருந்தான்.

அந்த கால கட்டத்தில் ஜெர்மனியின் கவர்ச்சி கதாநாயகி நடிகை றெனேட் முல்லருடன் ஹிட்லர் கட்டில்வரை சென்றான்.

1939 முதல் 42வரை ஹிட்லர் வெற்றி மேல் வெற்றி பெற்றான்.

ஹிட்லர் உலகை அச்சுறுத்திய காலம் அது.

ஈவா மீண்டும் ஹிட்லரோடு சேர்ந்தாள்.

1945 பெப்ரவரியில் ஹிட்லரும் ஈவாவும் பாதுகாப்பான பங்கரில் (பாதாள மாளிகை) குடியேறினார்கள்.

1945 ஏப்ரல் 29ம் திகதி இரவு 2 ½ மணிக்கு ஹிட்லர்-ஈவா திருமணம் நடைபெற்றது.

அடுத்த நாள் காலை இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியும் அவனது காதலியும் கொல்லப்பட்ட செய்தி ஹிட்லருக்கு வந்து சேருகிறது.

தன் கதியை நினைத்துப் பார்க்கிறான் ஹிட்லர்.

ஈவாவின் விலை உயர்ந்த ஆடை அணிகள் பங்கரில் இருந்த பெண்களுக்கு கொடுக்கப்படுகிறது.

**"என் நாய்கூட எதிரிகளிடம் சிக்கக்கூடாது."**

வெறிகொண்டவனாக தனது நாயையும் அதன் குட்டிகளையும் சுட்டுக் கொல்கிறான் ஹிட்லர்.

ஹிட்லரின் படிப்பறைக்குள் கருப்பு உடையில் ஈவாவும்- ஹிட்லரும் நுழைகின்றனர்.

1945 ஏப்ரல் 30 மாலை 3.45மணி.

துப்பாக்கிச் சத்தம் கேட்டு வேலைக்காரர்கள் ஓடிச்சென்று பார்க்கிறார்கள்.

**ஹிட்லரும்-ஈவாவும் தமது நீலமும் வெள்ளையும் கலந்த சோபாவில் அமர்ந்திருக்கிறார்கள்.**

**ஹிட்லரின் நெற்றியில் இருந்து இரத்தம் வடிகிறது.**

**ஈவா சயனைட் குப்பியை கடித்து தின்றிருக்கிறாள்.**

தோற்றப் பொலிவை மீறிய கவர்ச்சியால் ஜெர்மன் பெண்கள் பலரின் கதாநாயகனாக இருந்தவனின்,- ஆதிக்க வெறியால் உலகை யுத்த களமாக்கியவனின் கதை தற்கொலையில் முடிந்த செய்தி உலகின் செவிகளில் விழுந்தது.

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய்

# மருத்துவ விந்தைகள்

## பல் உடைந்தால் என்ன செய்யலாம்?

விபத்து அல்லது விளையாட்டு, சண்டை, அடிதடிகளின்போது சில சமயங்களில் பற்கள் உடைந்து விடுவது வழக்கமாகும். அவ்வாறு உடைந்துவிடும் பற்களில் அநேகமானவை முன் நிரையில் ஒன்றில் கீழ் அல்லது மேல் வரிசைப் பற்களாகவே இருப்பது வழக்கமாகும்.

முகம் அழகாகவும் மிடுக்காகவும் காட்சியளிப்பதற்கு மனிதர்களிடமுள்ள முன் வரிசைப் பற்களே முக்கிய காரணமாகும். இவ்வாறு அமையப்பெற்றுள்ள பற்களில் ஒன்றோ, சிலவைகளோ இல்லையென்று போன பின்பு ஏற்படும் மனத் தாக்கத்தை சலித்துக்கொள்வது மிகச் சிரமமான காரியமாகும்.

இக் குறையை நிவர்த்தி செய்து கொள்வதற்கு சிலர் செயற்கை பல்லைக் கட்டிக்கொள்ள விரைகின்றனர். செயற்கை பல்லைப் பொறுத்தவரை இன்றைய சூழ்நிலையில் அவற்றை குறைந்த செலவில் செய்துகொள்ள முடியுமென கூறுவதற்கில்லை. அத்துடன் அவற்றை வாழ்நாள் முழுவதும் பேணிப் பாதுகாத்து பாவனை செய்வதும், ஒரு பிரச்சனைக்குரிய விடயமாகும்.

எனவே விபத்தில் உடைந்துவிடும் பற்களை மீளப் பொருத்திக்கொள்ள



விழைவதே பொருத்தமான முயற்சியென கூறவேண்டியுள்ளது. உடைந்த பற்களை மீளப் பொருத்தப்படும் சத்திர சிகிச்சையானது பி.டி.எஸ்.என்ற பட்டம் பெற்றுள்ள அனைத்து பல் வைத்திய நிபுணர்களாலும் மேற்கொள்ளக்கூடிய சிகிச்சை முறையாகும். நம் நாட்டைப் பொறுத்தவரையிலும் கூட இவ்விதம் மீளப் பல் பொருத்தல் சிகிச்சை முறை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இச் சிகிச்சையைப் பொறுத்தவரை உடைந்த பற்களுடன் எவ்வளவு விரைவாக பல் வைத்தியரை அணுகி சிகிச்சை பெற்றுக் கொள்ளப்படுகிறதோ அவ் விரைவின் அடிப்படையிலே இச் சிகிச்சையின் வெற்றியும் தங்கியிருக்கிறது.

பல் உடைந்து ஆகக் கூடிய பட்சம் ஆறு மணித்தியால காலத்திற்குள் உடைந்த பல்லுடன் பல் வைத்தியரை அணுகுவது பிரதானமாகும்.

உடைந்த பல்லைப் பொருத்திக்கொள்ள விளைபவர்கள் குறிப்பாக கீழ்க்காணும் ஆலோசனைகளை வலுவாக கடைப் பிடிப்பது முக்கியமாகும்.

- பல் உடைந்த பின்பு நீரினால் வாயைக் கழுவுவதை தவிர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும்.
- உடைந்த பற்களை வாயினுள் அல்லது பசுப்பால் கொண்ட கிண்ணத்தில் வைத்துக்கொள்ளுதல் முக்கியமாகும்.
- உடைந்த பற்கள் இருந்த பகுதியை விரலால் தடவிப் பார்ப்பதை தவிர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.
- உடைந்த பற்கள் இருந்த புறப் பகுதியை கரங்களினால் கசக்கி விடுதலாகாது.
- பல் வைத்தியரை அணுகும்வரை உடைந்த பற்களை வாயினுள்ளோ அல்லது பசுப்பால் கொண்ட கிண்ணத்திலோ பாதுகாப்பாக கொண்டு செல்லுதல் அவசியமாகும்.

## 'டிப்ஸ்'



வாரத்தில் வேலை செய்யும் நாட்களில், தினம் ஒரு மணி நேரம் முன்னதாகக் காலையில் எழுந்துவிடும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். ஓர் ஆண்டு காலத்தில் இவ்விதம் ஒரு மாதம் உங்களுக்குக் கூடுதலாகக் கிடைத்துவிடும்! இரவுகளில் விழித்து வேலை செய்வதைவிட, விடியற்காலையில் ஒரு மணி நேரம் முன்னதாக எழுந்திருப்பது உங்கள் அறிவுக் கூர்மையையும், சுறுசுறுப்பையும் தூண்டும்!

நீங்கள் போய்ச் சேரவேண்டிய இடத்துக்குப் புறப்படும்போது 15 நிமிடங்கள் முன்னதாகப் புறப்படுங்கள். நிதானமாக, 'டென்ஷன்' இல்லாமல் போய்ச் சேரலாம்! பஸ் அல்லது பிறவாகனங்களில் போனால் அரைமணி நேரம் முன்னதாகப் புறப்பட்டு விடுங்கள். முன்னதாகக் கிளம்பி-நிதான மாகப் பிரயாணம் செய்து சற்று முன்பே போய்ச் சேருவது உங்களுக்கு அமைதியைக் கொடுக்கும்!

## இருதய நோய்க்கு ஒரு புதிய கண்டுபிடிப்பு

இருதய நோய்த் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு கொலஸ்ட்ரோல் தவிர்ந்த விட்டமின் 'ஈ' அடங்கப் பெற்றுள்ள ஆகாரங்கள் பொருத்தமானவை யென முன்பு வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யப் பட்டு வந்தது.

எனினும் சமீபத்தில் ஐரோப்பியாவைச் சேர்ந்த மருத்துவர்களுடன் இணைந்து இஸ்ரேல் மருத்துவ நிபுணர்கள் நடத்திய மருத்துவப் பரிசோதனை யொன்றின் மூலம் இருதய நோய்த் தவிர்ப்பு முயற்சியில் விட்டமின் ஈ வகுத்து வரும் பங்கைவிட கரெட் தண்டும், மஞ்சள் நிறமுடைய காய்கறிகளுடன், பச்சை நிறமுடைய கீரை வகைகளுமே முக்கிய பங்கை வகித்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் விட்டமின் 'ஈ' நிறைந்த உணவுவகைகளை உட்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை பொறுத்தவரை வேறு சில அனுகூலங்கள் ஏற்படுகின்றன். எனினும் விட்டமின் 'ஈ" ஜீவ பதார்த்தத்தின் மூலம் இருதய நோயைத் தவிர்த்துக்கொள்ள முடியுமென்று கூறும் கருத்து நம்பகமற்ற கூற்றாகுமென்று இப் பரிசோதனை யாளர்கள் மறுதலித்துக் கூறியுள்ளதாக தெரியவந்துள்ளது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## என்னாலும் முடியும்



"குரங்கு மட்டும்தான் மரத்தில் தாவும் என்று நினைத்தீர்களா? தப்பு. மகா தப்பு! நானும் தாவுவேன்" என்று சொல்கிறாரோ இந்த நாயார். நியூயோர்க்கில் 'கிளிக்' செய்யப்பட்ட காட்சி இது. கூடைப் பந்தாட்ட வீரர் இதன் எஜமான். எஜமான் அடித்த பந்து மரக்கிளையில் மாட்டிக் கொண்டதைக் கண்ட நாயார் எஜமான் விசுவாசத்தில் மரத்தில் தாவிய போதுதான் 'களிக்'.

## பணம் படைத்த மனதில் பகட்டான ஆசை

படத்தைப் பார்த்ததும் லொறியை கட்டிடத்தின் மேலே நிறுத்தி இருக்கிறார்கள் என நீங்கள் யூகித்து இருந்தால் அது தவறு! லொறி வடிவில் கட்டப்பட்ட தண்ணீர் தொட்டிதான் அது. பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்தும் இதனை தமிழ்நாட்டில் திருநெல்வேலி றோட்டில் உள்ள வீடொன்றின் மேல் அமைத்துள்ளனர். மனம் உண்டானால் இடமுண்டு என்பது பழமொழி. பணம் உண்டானால்தான் வித்தியாசமான கட்டிங்கள் எழ இடமுண்டு .

எல்லோரும் அண்ணாந்து பார்த்து வியக்கட்டும் என்று வீட்டு உரிமையாளருக்கு ரொம்பத்தான் ஆசையாக்கும்.



## தகவல் பெட்டி

## வீட்டில் விசேஷம்



அமெரிக்க கலிபோர்னிய மாநிலத்திலும் வீடற்றவர் பிரச்சனை விசுவரூபம் எடுத்திருக்கிறது. நம் நாட்டில் என்றால் வாக்குறுதிகளை வீசியே காரியத்தை முடித்துவிடுவார்கள் கலிபோர்னியாவில் கரிசனையோடு யோசித்து உடனடி நிவாரணம் செய்திருக்கிறார்கள். படகு செய்யப்பயன்படும் பைபர் கண்ணாடி இழையால் உறுவாக்கப்பட்டவைதான் இந்த வீடுகள். ஆனாலும் வசதிகளுக்கு குறைவில்லை. உள்ளே குளியலறை, கழிவறை எல்லாம் உண்டு.

## வருக – வணக்கம் – வருக

அவுஸ்திரேலியாவில் உள்ள மிருகக்காட்சிசாலைக்கு சென்றவர் காலில் தாவி விட்டார் இந்த கோலார் இனக் கரடியார். வயது 9 மாதம் மட்டும். கோலார் இனக் கரடிகள் தண்ணீரில் வாழக்கூடியவை என்பது தெரியுமல்லவா. இந்தக் குட்டிக் கோலார் பார்வையாளர்களைக் கவர்ந்திழுத்துவிடுகிறாராம்.



## ரசனையுள்ள எஜமான்

புள்ளித் தோல் நாய் வளர்க்கும் வீட்டு உரிமையாளருக்கு கலை உணர்வு அதிகம். அதனால் நாயின் தோலுக்கு ஏற்ற வர்ணத்தில் நாயாருக்கு கூடு தயாரித்து விட்டார். இங்கிலாந்தில் வசிக்கும் பிரட்லி என்பவர் தான் அந்த மிருகாபிமான கலா ரசிகர்.



## நடையா? இது நடையா?

கைவீசம்மா கைவீசு என்று நடைபழக்க நம் அம்மாக்களால் மட்டும் தான் முடியுமா என்ன? கரடிக் குட்டிகளை பாசத்தோடு நடை பயில வைக்கிறார் பாருங்கள் கரடித்தாய். தாய்மை ஒரேவிதம்.



www.padippakam.com
நன்றி நூலகத்திட்டம்



மனிஷா கொய்ராலா-ஜாக்கி ஷெரப்
படம்-ராம்ஷாஸ்திரா

## சரணாவின் சபதம்

'சதிலீலாவதி' படத்தில் கமலின் ஜோடியாக நடித்தார், கோவை சரளா. படமும் பிரமாத வெற்றி. சரளாவின் பெயரும் புகழ் பெற்றுவிட்டது.

கமலோடு நெருக்கமான காட்சிகளில் நடிக்கும் போது முதலில் பயமாக இருந்ததாம். போகப்போக சரியாகிவிட்டதாம். கமல் பக்குவமாக சொல்லிக் கொடுத்து நடிக்கவைத்தாராம்.

இனிமேல் நகைச்சுவை நடிப்பை குறைத்து குணசித்திர வேடங்களில் நடிக்க வேண்டும் என்று சபதம் எடுத்திருக்கிறார் சரளா. கதாநாயகியாக மட்டுமே நடிப்பேன் என்று சபதம் செய்யாமல் விட்டது புத்திசாலித்தனம்.



## கார்த்திக் திருந்துவாரா?

கார்த்திக் நடித்து வெளிவந்த சமீப காலப் படங்கள் அடுத்தடுத்து பெட்டிக்குள் சுருண்டன.

இப்போது 'முத்துக் காளை' என்னும் படம் திரைக்கு வந்து சிறப்பாக இருப்பதோடு கார்த்திக்கின் நடிப்பும் பாராட்டப்படுகிறது. வெளிப்புற படப்பிடிப்புக்களில் நடிகைகளோடு கும்மாளம் என்று கார்த்திக் பற்றி பரவலான கிசு-கிசு.

அது மட்டுமல்லாமல் ஒப்புக் கொண்ட படத்தை ஒழுங்காக கொடுப்பதில்லையாம் என்றும் புகார்கள்.

இவற்றையெல்லாம் கார்த்திக் மறுத்தாலும் கூட மறுப்பில்லை. 'முத்துக் காளை' பெற்றுள்ள வரவேற்பு கார்த்திக்கை மீண்டும் ... வரச்செய்ய வேண்டுமானால், கார்த்திக் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டியிருக்கும். செய்வாரா கார்த்திக்?

## பல்லவி அழுகிறார்

நடிகை பல்லவி அண்ணன் என்று அழைத்து ... கொண்டிருந்த அவரது மனேஜர் பல லட்சம் ... சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டாராம். இடிந்து போயிருக்கிறார் பல்லவி. பணம் போன சோகம் ... பல்லவியின் அப்பாவும் இறந்து போனார் ...

# சினிவிசிட்

## கிசு-கிசு நியூஸ்

### இனிக் குடிக்கமாட்டார்?

மனிஷா கொய்ராலாவுக்கு சிவப்பு லேபில் போட்ட 'வைன்' என்றால் கொள்ளை ஆசை. விருந்துகளின் போது உற்சாகமாக உள்ளே தள்ளுவார். இப்போது ஒரு சபதம் எடுத்திருக்கிறார் மனிஷா. இனிக் குடிக்க மாட்டாராம். சபதத்தை நிறைவேற்ற விருந்துகள், கேளிக்கைகள் எதற்கும் செல்லாமல் தவிர்த்து வருகிறாராம். நல்லது தான். இது எத்தனை நாளைக்கோ? 'இந்தியன்' படத்தில் கமலின் ஜோடியாகவும் மனிஷா நடிக்கிறார் என்பது தெரிந்தது தானே.

### ரஜனியோடு மீனா

பாலசந்தர் தயாரிக்க கே.எஸ். ரவிக்குமார் இயக்கும் படத்தில் ரஜனிகாந்த் நடிப்பது தெரிந்த செய்திதான். ரஜனியோடு மீண்டும் நடிக்கிறார் மீனா. அரவிந்த சாமியும் 'தளபதி' படத்தின் பின்னர் மீண்டும் ரஜனியோடு நடிக்கிறார்.

'வேலன்' என்று படத்திற்கு பெயரிடலாமே என்று யோசிக்கிறார்கள். வெளிநாட்டு சுற்றுப்பயணத்தை முடித்து ரஜனி வந்த பின் பெயர் முடிவாகும்.

## மினிசினி

பிரபு - மோகன்லால் மலையாளத்தில் இணைந்து நடிக்கும் படத்திற்கு 'காலாபாணி' என்று பெயரிடப் பட்டுள்ளது. அந்தமான் தீவுகளில் படமாகும் இந்தப் படத்தை பிரபல மலையாள இயக்குநர் சங்கீத சிவன் இயக்குகிறார்.

தெலுங்கில் தற்போது அதிகமான படங்களில் நடித்து வரும் சிவரஞ்சனி அடிக்கடி தமிழ்நாடு வந்து போகமுடியாது என்று ஆந்திராவிலேயே புதிய வீடொன்று வாங்கத் திட்டமிட்டுள்ளார்.

பவித்திரன் இயக்கத்தில் 'திருமூர்த்தி' படத்தில் லொறி டிரைவராக நடித்து வரும் விஜயகாந்த், இந்தப் படத்தில் ஒரு காட்சியில் பெண் வேடமிட்டு நடித்துள்ளார்.

இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானுக்கு திருமணம் நடந்தது பழைய செய்தி. புதிய செய்தி, மற்றொரு இசையமைப்பாளரான சௌந்தர்யனுக்கும் விரைவில் திருமணம் நடக்கவிருக்கிறது.

'தேவதாஸ்' புகழ் நாகேஸ்வரராவின் வாரிசு நாகர்ஜுன் தெலுங்கில் முன்னணி நடிகராக இருக்கிறார். தற்போது நாகர்ஜுன்- அமலா தம்பதியின் மகன் புதிய தெலுங்குப் படமொன்றில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகிறார்.

'முத்துக்குளிக்க வாரியளா' படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு மட்டும் நடித்துள்ள வினோதினி, தற்போது 'இளவரசி' படத்திலும் ஒரேயொரு பாடல் காட்சியில் நடனமாடி நடிக்கிறார்.

டாக்டர். ராஜசேகர் நடிக்கும் '1995 இந்தியன்' படத்தை ரத்னகுமார் என்பவர் இயக்குகிறார். இவர் பாரதிராஜாவின் 'கிழக்குச் சீமையிலே...', 'கருத்தம்மா' போன்ற படங்களுக்கு கதை,திரைக்கதை எழுதியவர்.

இலங்கை - இந்தியக் கூட்டுத் தயாரிப்பான 'இசைப்பயணம்' படத்தில் பிரபல இலங்கை நடிகைகளான சபீதா பெரேராவும்,சனோஜா பிபிலேயும் நடிக்கின்றனர்.

சரத்குமார் நடிக்கும் 'இதயம் பேசுகிறது' படத்தின் பெயரை 'எச்சரிக்கை' என்று மாற்றம் செய்துள்ளனர். 'தாய் மொழி' படத்தை இயக்கிய இளவரசன் இப்படத்தை இயக்கி வருகிறார்.

ஊர்வசி இரட்டை வேடத்தில் நடித்து வரும் 'மாயா பஜார் 1995' படத்தில் இளையராஜாவின் இசையில் முதன் முறையாக சொந்தக் குரலில் ஒரு பாடலைப் பாடியுள்ளார்.

## "காதலனின் காதலியை கத்தியால் குத்துவேன்"

இந்தி திரையுலகில் கவர்ச்சி காட்டி நடிப்பதில் தனி முத்திரை பதித்து வருபவர் ஷில்பா. (உதாரணம் அருகில் உள்ள படம்)

'அதிசயப் பிறவி' படத்தில் ரஜனிகாந்த்துடன் சில காட்சிகளில் நடித்தது மூலம் தமிழ் பட ரசிகர்களுக்கும் ஷில்பா தெரிந்தவர்தான்.

ஷில்பாவிடம் சிலவென்று சில கேள்விகள்:

காதலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

காதல் புனிதமானது. அதன் சுகமே அலாதிதான். அதிலும் அலைபாயும் மனதோடு காதலிக்காமல் எப்போதும் 'ரிலாக்சாக' இருக்கவேண்டும். இதுதான் எனக்குப் பிடிக்கும்.

கிசு-கிசுக்கள் பற்றி?

அவை தான் என் ஜாலியான பொழுது போக்கு.

நீங்கள் திடீரென்று ஆணாக மாறிவிட்டால்?

ஒரு பெண்தான் இந்த உலகின் அனைத்து சுகங்களையும் அனுபவிக்க முடியும். நான் ஆணாக மாற ஒருபோதும் விரும்ப மாட்டேன்.

உங்கள் காதலனை வேறு ஒரு பெண் கவர்ந்தால்?

எனக்கு காதலன் மீது கோபம் வராது. அவனைத் தனது வலையில் விழவைத்த பெண் மீதுதான் கோபம் வரும். என் கையில் ஒரு கத்தி கிடைத்தால் அதைப் பயன்படுத்தி குத்திவிடுவேன்.

ஷில்பா துணிச்சல்காரி தான்.

## இரண்டு ...

'தாயின் மணிக்கொடி' ... விஜயகாந்த் ... விஜயகாந்த் ... சொன்னது ... சேர்ந்திருக்கிறேன்.'

தற்போது பிஸியாக ... ஜோடியாக ... படம் 'தேடி' ... படப்பிடிப்பு ... அழைத்து ... இருந்தாலும் ... நடித்துக் கொ...





திரைப்படத்தில் நடிப்பதற்காக மட்டுமல்ல- நிஜமாகவே- துப்பாக்கியை தூக்கியதால் ஜெயில்- சஞ்சய்தத் சிறையில் இருக்கிறார்.

## 'இந்திரா' ரெடி

கிராமத்துத் தலைவர் நாசர் பிரச்சினையில் கொல்லப்படுகிறார். தந்தையின் இடத்தில் அனுஹாசன் வருகிறார். அவருக்கு பிரச்சினைகள் ஏற்படுகிறது. அரவிந்தசாமிக்கும் அனுஹாசனிற்கும் இடையே சந்திப்பு ... இப்படித்தான் வருகிறது 'இந்திரா' ... கமலின் அண்ணன் மகள் அனுஹாசன் படத்தின் கதாநாயகி. இயக்கம் ... படம் திரைக்கு வர ரெடியாகிறது.

## இரட்டை வேடத்தில் பிரபுதேவா

... பல கோடி ரூபாய்கள் செலவில் ... தயாரிக்கும் படம் மிஸ்டர் ரோமியோ. ... முறையாக இரட்டை வேடத்தில் நடிக்கிறார் பிரபு தேவா. ஜோடிகளாக நடிக்க இருப்பவர்கள் இருவர். ஒருவர் ஷில்பா ஷெட்டி, மற்றவர் மதுபாலா.

## மூன்று காரணம்

இந்தி நடிகர் ஜாக்கி ஷெரப் அடிக்கடி சென்னை வருகிறாராம். இதற்கு மூன்று காரணங்கள். 1. கவுதமி 2. ஷோபனா 3. ஒரு விமான பணிப் பெண். மூன்று பேருடனும் நெருக்கமான நட்பு வைத்துள்ளாராம் ஜாக்கி.

## சந்திரலேகாவில் விஜய்

ரசிகன் பட வெற்றியைத் தொடர்ந்து விஜய் ஓஹோவென்று உயர்ந்து விட்டார். தேவா ஓடிக்கொண்டிருக்கிறது.'வசந்த வாசல்' 'ராஜாவின்பார்வையிலே' 'விஷ்ணு' ஆகிய படங்களில் நடித்து வருகிறார் விஜய். புதிதாக தற்போது ஒப்பந்தமாகியுள்ள படத்தின் பெயர் 'சந்திரலேகா' 'நிலா' படத்தை இயக்கிய நம்பிராஜ் கதை, வசனமெழுதி இயக்கப்போகும் படம் சந்திரலேகா. விஜய குமாரின் மகள் வனிதா கதாநாயகியாகநடிக்கிறார். பல வருடங்களுக்கு முன் வெளிவந்து வசூல் குவித்த'சந்திரலேகா' படத்தின் பெயர் மீண்டும் கைகொடுக்குமோ? பார்க்கலாம்.



சந்திரா-சித்தார்த்
... உதயம் ...



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சிவாஜிக்கு விழா ஏப்ரலில்

'செவாலியர்' விருது பெற்ற சிவாஜிக்கு ஏப்ரல் மாதம் தமிழ் நாட்டில் விழா நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கமலும், ரஜனியும் சக நடிக நடிகைகளோடு இணைந்து விழா ஏற்பாட்டை செய்யவுள்ளனர்.

இந்திய ஜனாதிபதிதமிழக முதல்வர், ஆந்திர முதல்வர் ஆகியோரை அழைக்கவும் தீர்மானித்துள்ளனர்.

# கமல்-அர்ஜுன்-நாசர்

கமலஹாசன் தற்போது எஸ்.பி பாலசுப்பிரமணியம் தயாரிக்கும் தெலுங்குப்படம் ஒன்றில் நடித்து வருகிறார். இப்படத்தை கே.விஸ்வநாத் இயக்கிவருகிறார். இதனை அடுத்து தெலுங்கில் முதல் முறையாகச் சொந்தப்படமொன்றை தயாரிக்கப்போகிறார் கமல். இப் படத்தை ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்கிறார்.

இதில் கமல்-அர்ஜுன் இருவரும் முதல் முறையாக இணைந்து நடிக்கின்றனர். முக்கிய வேடத்தில் நாசரும் நடிக்கப்போகிறார்.

சிவாஜி பற்றி லேட்டஸ்ட் தகவல் : பசும்பொன் படத்தில் சிவாஜி நடித்து வருகிறார். புதிய படங்களில் அவரை நடிக்க வைக்க பல இயக்குநர்கள் அணுகியுள்ளனர். பசும்பொன் முடிய யோசிக்கலாம் என்று கூறிவிட்டாராம் சிவாஜி.

# 95

அஸ்வினி-அனுஹாசன் படம்-இந்திரா

## 'விரலுக்கேத்த வீக்கம்'

குறைந்த பட்ஜெட் படங்களை தயாரிப்பதில் கொடி கட்டிப் பறப்பவர் வி.சேகர். அவர் அடுத்து தயாரிக்கும் படத்தின் பெயர் விரலுக்கேத்த வீக்கம். கதாநாயகன் கதாநாயகி தேர்வு நடைபெற்று வருகிறது. கவுண்டமணி-செந்தில் கூட்டணியும் நடிக்கிறது. இசை, தேவா. ஏப்ரல் மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

## ...வெடி குண்டுகள்

## ... மனம்



நாஸர்-ரேவதி படம்-அவதாரம்

# திரையில் புதிய வெளியீடுகள்

தமிழ் நாட்டில் வெளியாகியுள்ள புதிய படங்கள்:
ஆணழகன்- (பிரசாந்த்-சுனேஹா)
உதவும் கரங்கள் (ஜீடி ரமேஷ்-ராதிகா)
தொண்டன் (முரளி- ரோகிணி)
தங்க பாண்டி (பாலகிருஷ்ணா-ரவீனாராண்டன் -ரம்யா கிருஷ்ணன்)
ராஜா எங்க ராஜா (கவுண்டமணி-ரம்யா)
பம்பாய் (அரவிந்தசாமி-மனிஷாகொய்ராலா)

# கமலின் படத்தில்

துறைமுகம் படத்தை பெரிதும் எதிர்பார்த்திருக்கிறார் அருண்பாண்டியன். இன்னொரு சந்தோசமான செய்தியும் சொல்லுகிறார். கமல் தனது படமொன்றில் நடிக்கவைப்பதாக கூறியுள்ளாராம்



மாஸ்டர் அருண், எஸ்.வி.சேகர், ரோஜனி படம்-எங்கள் தங்க மகன்

# 'நெப்போலியனாக நெப்போலியன்'

'ராமன் எத்தனை ராமனடி' படத்தில் ஒரு காட்சியில் 'சத்ரபதி' சிவாஜியாக நடித்தார் சிவாஜிகணேசன்.

அது போல் தற்போது 'என் பொண்டாட்டி நல்லவ' படத்தில் நெப்போலியனாக ஒரு காட்சியில் நடிக்கிறார் நடிகர் நெப்போலியன்.

தனது பெயரோடு தொடர்பு கொண்ட பாத்திரத்தில் நடிக்கும் அதிஸ்டம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

(முகப்பில்) கார்த்திக் படம்-லக்கி மேன்

ஷோபனா படம்-துறைமுகம்



இந்துமதி-ராஜசேகர் படம்-இளவரசி



# விட்டுக்கொடுத்தார் சங்கவி!

'சங்கவி' என்றாலே கவர்ச்சியான சங்கதி என்று அர்த்தமாகி விட்டது. 'அன்பு மகன்' படத்தில முதலிரவுக் காட்சி. ஒரு டவலை மட்டுமே உடம்பில் சுற்றிக்கொண்டு வரவேண்டும் என்று இயக்குநர் விரும்பினார். விசயம் அறிந்த சங்கவியின் அம்மாவோ "என் மகள் அப்படி நடிக்க மாட்டாள்!" என்று சொல்லியிருக்கிறார். உடனே குறுக்கிட்ட சங்கவி "நடிக்க வந்த பிறகு இப்படியெல்லாம் சொல்வது சரியல்ல. நான் நடிக்கிறேன்" என்று விட்டுக்கொடுப்போடு சம்மதிச்சாராம். இயக்குநர் எக்கச்சக்கமாக நெகிழ்ந்து போனார்.

# ஆரம்பமே ஆட்டம்

சரத்குமார் நடித்து வரும் புதிய படம் 'இதயம் பேசுகிறது' இந்தப் படத்தில் முன்னால் நடிகை ஜோதிலட்சுமியின் மகள் ஜோதி மீனா அறிமுகமாகிறார். பாரதிராஜாவின் படத்தில் நடிக்க காத்துக் கிடந்தார் ஜோதி மீனா. வாய்ப்பு அமையவில்லை. அதனால் ஆடவந்து விட்டார் படத்தின் ஆரம்ப காட்சியே அவரது ஆட்டத்தோடுதான் ஆரம்பமாகிறதாம்.

# ஹொங்கொங்கில் சின்ன வாத்தியார்

பிரபல கிசு-கிசு ஜோடி பிரபு-குஷ்பூ நடித்து வரும் படம் சின்ன வாத்தியார். பிரபு இரட்டை வேடத்தில் நடிக்கும் 'சின்ன வாத்தியார்' படத்தின் சில காட்சிகள் ஹொங்கொங்கில் படமாக்கப் படவுள்ளன. மே மாத வெளியீடாக திரையிடத் திட்டமிட்டுள்ளனர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அட்வைஸ்

# இன்ப வாழ்வுக்கு இனிமையான யோசனைகள்



ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

•விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை யுடன் இருக்க வேண்டும்.

•இருவரும் ஒருயிர் என்று ஆனபிறகு பிடிவாதம்,கர்வம்,வம்பு இவற்றை நீக்கவேண்டும்.

•உறவினர் அல்லது நண்பர்கள் கூடியுள்ள சபையில் தன் கணவனை மனைவியோ அல்லது மனைவியை கணவனோ மட்டம் தட்டிப் பேசுதல் கூடாது. அப்படி பேசுதல் அந்தச் சந்தர்ப்பத்தில் சந்தோசமாகத்தோன்றும். ஆனால் மற்றவர்களுக்கு இகழ்ச்சியாகப் போய்விடும்.

•மற்றவர்கள் முன்பாக உங்கள் மனைவி அல்லது கணவனைப் பற்றி குறை கூறுவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் உங்கள் இருவர் உறவில் மற்றவர்களுக்கு என்ன வேலை?

•உறவு என்பது உங்கள் இருவர் சம்மந்தப்பட்டது தானே? பின்பு நடுவில் ஒருவரை விட்டால் குழப்பத்திற்கு நீங்களே தூது விடுவது போலாகிவிடும்.

•எந்தச் சந்தர்ப்பத்திலும் இருவரும் கலந்தாலோசித்து முடிவைத் தீர்மானிக்க வேண்டும்.

•முடிவினை எடுப்பதற்கு முன் அதன் விளைவுகளை முன் கூட்டியே நினைத்துப்பார்க்க வேண்டும். விளைவு நன்மையாக இருந்தால் மட்டுமே அந்த முடிவைப் பின்பற்ற வேண்டும்.

•எங்கு சென்று வந்தாலும்,அங்கு என்ன நடந்தாலும், யார் யாரைப் பார்த்தேன் என்ன கூறினார்கள் என்பது போன்ற நிகழச்சிகளை ஒருவருக்கொருவர் மறைக்காமல் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

•மறைக்காமல் கூறுவதன் மூலம் உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கும் ஒருவரின் சுயரூபம் வெளிச்சத்திற்கு வரும். அப்பொழுதுதான் அவருடன் பழகுவதைக் குறைத்துக்கொள்ள முடியும்.

•கணவனின் மேல் மனைவியும், மனைவியின் மேல் கணவனும் சந்தர்ப்ப வசத்தால் கூட நம்பிக்கை இழக்கக் கூடாது.

•உறுதியான நம்பிக்கைதான் உயர்வான வாழ்விற்கு அடிப்படையாகும்.

•இருவரில் ஒருவர் கோபமாக இருக்கிறார் எனில், மற்றவர் பணிந்து பேசவேண்டும். இருவரும் கோபமாக பேசிக்கொண்டே போனால் சிறிய நிகழ்ச்சியும், பெரிய பிரச்சினையாக ஆகிவிடும்.

•உங்கள் இருவருக்குள் நடக்கும் பேச்சுவார்தைகள், அந்தரங்க விஷயங்கள், ஒருவரைப் பற்றி மதிப்பிடுவதில் கருத்து வேறுபாடுகள், குடும்பப் பிரச்சனைகள் எதுவாயினும் வெளியில் சொல்வது முறையாகாது. அது உங்கள் சம்பந்தப்பட்டதாகவே இருக்க வேண்டும்.

•நான், எனது என்ற சொற்களைப் பயன்படுத்துதல் கூடாது. நமது, எங்கள் என்ற எண்ணம்தான் வளரவேண்டும். என் குடும்பம், நான் அப்படித்தான் பிறந்து, வளர்ந்தேன் என்ற வாதங்கள் மூலம் கருத்து வேறுபாடுகள் தோன்றி இன்பத்தை இழக்க நேரிடலாம்.

•முன்பு எவ்வாறு இருந்தோம் என்ற நினைவை விடுத்து, தற்போது நல்ல நிலைமைக்கு வரக்கூடிய நல்லவற்றையே சிந்திக்க வேண்டும்.

•உணவு, நடை, உடை,பாவனைகளைக் கணவனுக்குப் பிடிக்கும் விதத்தில் மனைவியும், மனைவிக்குப் பிடிக்கும் விதத்தில் கணவனும் அமைத்துக் கொள்ளவேண்டும்.

•குடும்பத்தின் வரவு-செலவு, மாத பட்ஜெட்கள் போன்ற விபரங்களை இருவரும் சேர்ந்து கவனிக்க வேண்டும். இதன் மூலம் விலைகள், பொருட்களின் தன்மைகள், பயன்படுத்தும் விதங்கள், சேமிப்பு நிலவரம், செலவு முறைகள் பற்றி இருவரும் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும்.

• கணவனின் கருத்தை மனைவியும், மனைவியின் கருத்தைக் கணவனும் அலட்சியப்படுத்தல் கூடாது.அவற்றை ஏற்றுச் செயற்படுத்த வேண்டும். (நல்ல விளைவு தரும் கருத்தை மட்டும்)

• இருவரின் சொந்தங்களுக்கும், உறவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இருவர் என்ற நிலை ஒருவர் என்று ஆன பிறகு சொந்தமும், உறவும் இருவருக்கும் ஒன்றுதானே?

• உண்மை, அன்பு, உறுதியான நம்பிக்கை, உள்ளத்தால் எழுப்பட்ட கவர்ச்சி, இவற்றின் மூலம் கருத்து வேறுபாடுகள், சந்தேக மனப்பான்மை போன்ற பிரச்சனைகளை வெல்லமுடியும்.

# லேடீஸ் ஸ்பெசல்

## இது சமையலறைச் சமாச்சாரம்



எந்த ஸ்வீட் செய்தாலும் கால் தேக்கரண்டி உப்பைச் சேர்த்துக் கொண்டால் இனிப்பு தூக்கலாக இருக்கும்.

புளிப்புச்சுவை அதிகமாகி விட்டால் கவலை வேண்டாம். சிறிது சீனியைச் சேர்த்துச் சரிபடுத்தி விடலாம்.

சுடவைத்த எண்ணையைக் கொஞ்சமாய் மாவில் விட்டுப் பலகாரம் செய்தால், பட்சணம் எண்ணையைக் குடிக்காது.

போளி தட்டும்போது வாழை இலையின் பின் பக்கமாகத் தட்டினால் இலை கூருங்காமல் போளி நன்றாக வரும்.

மீந்து போன பாண் துண்டுகளை வெய்யிலில் உலர்த்திப் பொடி செய்து வைத்துக் கொள்ளுங்கள். உப்புமாவில் தண்ணீர் அதிகமாகி விட்டாலோ, கட்லட் செய்தவற்கோ பயன்படுத்தலாம்.

பண்டிகைக் காலங்களில் செய்யும் பட்சணங்கள் மீந்து விட்டால், அது கெடாமலிருக்க ஒரு கைப்பிடி உப்பைத் துணியில் கட்டி பட்சணம் உள்ள டின்னில் போட்டு வைக்கவும். பிறகு எடுத்துச் சாப்பிடும் போது பட்சணம் புதிதாகச் செய்தது போலவே குணம் மாறாமல் இருக்கும்.

எண்ணெய் பசையுள்ள பாத்திரம், கறை பிடித்த குக்கர் போன்றவற்றை முதலில் எலுமிச்சை தோலால் தேய்த்து விட்டுப் பின் அரப்புத்தூள் கொண்டு தேய்த்துக் கழுவினால் பாத்திரம் பளிச்.

பட்சணம் செய்யும் போது எண்ணெய் பொங்காமலிருக்க ஒருதுளி வினிகர், அல்லது சிறிது புளி சேர்க்கலாம்.

பால் திரிந்து விடும் என்று சந்தேகப்பட்டால் சிறிது சமையல் சோடாவை நீரில் கரைத்து, பாலுடன் கலக்கி, பின் பாலைக் கொதிக்கவிடாமல் சூடு செய்து உபயோகிக்கலாம்.

காய்கறிகளை நன்கு கழுவிய பின் நறுக்குங்கள். இதனால் சத்துக்கள் வீணாகா.

காய்கறி வெட்டும் கத்தி துருப்பிடித்து விட்டால் ஒரு வெங்காயத்துண்டினால் நன்றாகத் தேய்த்து சிறிது நேரம் கழித்து நன்கு துடைத்து விடுங்கள் துரு மறைந்து விடும்.

கருவேப்பிலையை அலுமினியப் பாத்திரத்தில் போட்டுத் தலைகீழாகக் கவிழ்த்து வைப்பதனால் அது காய்ந்து வாடாமல் எத்தனை நாட்களானாலும் பசுமையாக வாசனையுடன் இருக்கும்.

## அழகும் ஆரோக்கியமும்

இஞ்சியின் தோலைச் சீவி, எடுத்து விட்டு சிறுசிறு துண்டுகளாக அரிந்து ஒரு போத்தலில் போட்டு அது மூழ்கும் வரை தேனை ஊற்றி ஊற வைக்க வேண்டும். நன்கு ஊறிய பின் தினசரி காலையில் வெறும் வயிற்றில் ஒவ்வொரு துண்டாகச் சாப்பிட்டு வந்தால் உடம்பு மினுமினுப்பாகும்.

பெண்களே, உங்கள் கால், கை விரல்கள் பஞ்சுபோல் இருக்க வேண்டுமானால் வெதுவெதுப்பான உப்பு கலந்த தண்ணீரில் தினசரி சிறிது நேரம் ஊற வைத்து வந்தால் உங்கள் கை, கால் விரல்கள் உங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும்.

# இயற்கை முறையில் செழிக்கும் அழகு!

விற்றமின்கள், தாதுப்பொருட்கள் நிறைந்த உணவுப் பொருட்களைத் தெரிந்து கொண்டு அன்றாடம் அவைகளை உணவில் சேர்த்துக் கொண்டு வந்தால் இயற்கையான அரோக்கியமான அழகைப்பெறலாம்.

விற்றமின் 'ஏ'ஆரோக்கியமான கூந்தலுக்கும், பிரகாசமான பார்வைக்கும் தேவைப்படுகின்றது. இதற்கு நிறைய பால், பாற்பொருட்கள், மீன், முட்டை, கீரைவகைகள், தக்காளி, பப்பாளி, கரட் முதலியவற்றை நம் உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## தோல்.

தோல் பாதுகாப்பிற்கு விற்றமின் பி தேவைப்படுகிறது. 'பி' குறைவினால் சருமம் வறண்டு காணப்படும். கூந்தலும் உதிரும். விற்றமின் 'பி' அதிகமுள்ள



உணவுப்பொருட்களான, தானியவகைகள், பருப்புவகை, கீரைவகை, மாமிசம், மீன் ஆகிறவற்றைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

## தசைகள் கட்டாக இருக்க.

விற்றமின் 'சி' அதிகமாக உள்ள உணவுப்பொருட்களான காய்கறிகள், பழங்கள் முக்கியமாக ஒரேஞ்ச், பாசிப்பருப்பு போன்றவற்றைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

## உடல் உறுதிக்கு.

உறுதியான பற்களுக்கும், எலும்புகளுக்கும் விற்றமின் 'டி' தேவை. மீன், பால், வெண்ணெய், முட்டை முதலியவற்றில் 'டி' சத்து உள்ளது.

## தோல் சுருக்கத்தைத் தவிர்க்க.

விற்றமின் 'ஈ' தேவை. இரத்த ஓட்டத்தைச் சீராக்கவும் உதவுகிறது.

கோதுமை, முட்டை, பால், தானியங்களில் அதிகமாக 'ஈ' சத்து உள்ளது.

சத்தள்ள உணவுப் பொருட்களைத் தேர்ந்தெடுத்து உட்கொண்டாலே ஆரோக்கியமான அழகு நம்மிடம் மிளிரும். அழகு சாதனப் பொருட்கள் நாளடைவில் தோல் சுருக்கத்தை ஏற்படுத்தி வயதான தோற்றத்தை ஏற்படுத்த வாய்ப்புண்டு. இயற்கை நமக்களித்துள்ள பொருட்களைத் தேர்ந்தெடுத்து இயற்கை அழகைப் பெற்று இனிதாற வாழலாமே.

## கூந்தல் அலங்காரம்



படத்தில் இருக்கும் கூந்தல் அலங்காரம் செய்யும் முறை:-

முதலில் தலை முடியை நன்றாக வாரிவிட்டு முன்பக்கம் உள்ள முடியை பின்புறமாக சீவ(Back Combing) வேண்டும். பின்பு நடுவில் மேலே சிறிதளவு கூந்தலை எடுத்து பின்ன வேண்டும். ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் சிறிது தலைமுடியை எடுத்து அதனுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறாக எல்லா முடியும் சேர்ந்த பின்னர் கடைசிவரை பின்னி அதை மடித்து ஹேர் பின்னோ சிறிய கொண்டை ஊசியோ உபயோகித்துப் பொருத்தலாம். இதன் பின்னர் படத்தில் உள்ளது போல பூக்களோ அல்லது மணி வைத்த கொண்டை ஊசிகளையோ ஆங்காங்கே சொருகி விடலாம். பார்ப்பதற்கு மிகவும் நன்றாக இருக்கும். இந்த அலங்காரம் எளிதானது.

## கர்ப்பமா? இல்லையா?

ஒவ்வொரு பெண்ணும் தான் கர்ப்பமடைந்து விட்டேனா என்பதை பிறர் மூலமாகவோ அல்லது மருத்துவர் மூலமாகவோ மட்டுமே தெரிந்து கொள்ள முடியும் என்றில்லை. சில அடிப்படை அறிகுறிகளை வைத்து கர்ப்பமா இல்லையா என சுலபமாக அறிந்து கொள்ளலாம்.

*அவை:*

*1. மாதவிலக்கு தவறிப் போகும். குறிப்பிட்ட நாளுக்கு மேல் இரண்டு வாரம் வரை தள்ளிப் போகும்.*

*2.காலையில் கண் விழித்தவுடனேயே உற்சாகம் இல்லாமல் சோர்வாய் இருக்கும்.*

*3. இலேசாக தலைசுற்றல் இருக்கும்.*

*4. மார்பகங்கள் பெரிதாக நிமிர்ந்து நிற்கும். ஒரு கனமான உணர்வு இருக்கும்.*

*5. உடம்பில் எடை அதிகமானாற் போல் ஓர் உணர்வு தோன்றும்.*

என்னங்க..இந்த அறிகுறியெல்லாம் உங்க உடம்பிலே இருக்கா? முதல்ல கையை கொடுங்க.. வாழத்துக்கள்! போங்க. கடைக்கைப் போய் எல்லோருக்கும் ஸ்வீட் வாங்கிக் கொடுங்க. ஆமாங்க நீங்க நிச்சயமாக தாயாகப் போறீங்க....!

## சூப்பர் ஜோடி

இந்திய கிரிகெட் உலக இளம் புயல் டெண்டுலகர் அஞ்சலி மேத்தா என்னும் அழகியை காதலித்து வருகிறார். திருமண நிச்சயதார்த்தமும் முடிந்து விட்டது. ஆனால் திருமணம் மட்டும் தற்போதைக்கு கிடையவே கிடையாதாம்.

அடுத்த வருட உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி முடிந்த பின்தான் திருமணம் செய்து கொள்ள நினைத்திருக்கிறார் டெண்டுல்கர்.

அதற்கு முன்னரே டெண்டுல்கரை திருமணக் கோலத்தில் பார்க்க அவரது உறவினர்கள் ஆசைப்படுகின்றார்களாம்.

அஞ்சலி மேத்தா டாக்டர் தொழில் பார்த்து வருகிறார். இருவரும் தமது காதல் மனிதக் காதல் அல்ல என்கின்றனர். அதாவது தெய்வீகக் காதலாம்.



காதலோ-திருமணமோ 'தனது விளையாட்டைப் பாதிக்காது' என்று சொல்லுகிறார் டெண்டுல்கர்.

"நான் அஞ்சலி விஷயத்தில் தலையிட மாட்டேன். அவளும் என் விஷயத்தில் தலையிடமாட்டாள்." என்றும் உத்தரவாதம் சொல்லுகிறார் இளம்புயல்.

## சூப்பர் வாரிசு

படத்தில் இருக்கும் சிறுமி யார் தெரியுமா? சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் இரண்டாவது மகள். பெயர் சவுந்தர்யா.

பேச்சு-பார்வை-ஸ்டைல் எல்லாம் ரஜனியைப் போலவே இருக்கிறதாம்.

சவுந்தர்யாவை நடனம் கற்றுக்கொள்ள வைத்திருக்கிறார் அம்மா லதா.

அப்பா ரஜினி சவுந்தர்யாவுக்கு கராத்தே பயிற்சி பெற ஏற்பாடு செய்துள்ளாராம்.

பிரபல கராத்தே வீரர் உசைன் சவுந்தர்யாவுக்கு கராத்தே கற்றுக்கொடுத்து வருகிறார்.



பரிசுக் கூப்பன்
மகளிர் மட்டும்
இல 6

மகளிர் மட்டும்
—பரிசுப் போட்டி—

முதல் அதிஷ்டசாலிக்கு
தங்க நகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.



# தேன் கிண்ணம்







## காதலிக்கு ஒரு மடல்!

கன்ன இடுக்குகளில்
கைவிரல் அடுக்கி,
உன்
'எண்ண' இடுப்பில்
என்னை இடுக்கி,
காதலிக்க
காத்திருக்கும்
காதலிக்கு...!

□□

முந்தானைக்குள்
முகம் புதைத்து—நம்
கதிபற்றியே
சிந்தித்து,
நித்தமும்—நம்
விதிபற்றியே
நித்தித்து
சிந்தாத
கண்ணீர் குறையாய்
இருப்பாயே...!?

□□

உன்னை சந்திக்காததில்
கோடி வதைகளில்
வாடி,
சிதைகிறேன்; என்று
சிந்தைக்குள்ளேயே
சின்னக்கவிதைகளும்
எழுதியிருப்பாய்...!

□□

எத்தனை நாளைக்கு
கனவுகளை
மூட்டை கட்டி,
மூட்டைப் பூச்சியா,
முட்டைக் கோழியா,
காத்திருக்க என்று
மூளையைக் கடைந்து
கொண்டிருப்பாயே...!

□□

நானும் அப்படித்தான் காதலி...!
நிலவோடு மட்டுமே
நிலவரம் பேசி
உன்
கலவரத்தை எண்ணி,
கண்ணீர்
விட்டுக்கொள்கிறேன்!

எஸ். முஸ்தாக்-குருநாகல்.

## நீ எனக்கு வாழ்க்கையில்லை

இவன்
சதிகாரன் என்று
வானம் பூமியில்
இடிந்து விழும் வரை
நீ—
மூச்சிவிடாமல் கத்தலாம்

•

நம் சந்திப்புக்கு
சாட்சியாகயிருந்த
அந்த இரவும் நிலவும்
உன்—
விழிகளுக்குள்ளிறங்கி
சோகம் விசாரிக்கலாம்

•

மேகமுகடுகளில்
உயிர்க்கும் பனித்துளி
உன்—
மடிக்குள் விழுந்து
ஆறுதல் கூறலாம்...

•

நட்சத்திரங்களும்
காற்றும் வந்து
உன்—
தோள்களில்குந்தி
அழுதுவிட்டுப்போகலாம்....

•

உன்—
ஆத்திரம் தீரும்வரை
இரக்கமில்லாத – என்
ஈரல்குலையை கிழித்து
துண்டு துண்டாக நீ.....!
நாய்க்குப் போடலாம்....

•

எனக்கு—
கவலையில்லை....

•

காதலோடும்
கண்ணீரோடும்
வாழ்க்கை
முடிந்து போவதுமில்லை....

•

வரம்புகளற்றது வாழ்க்கை
நரம்புகளால்
நடப்பது வாழ்க்கை

உடம்புகளால்
உழைப்பது வாழ்க்கை
உயிர் கொண்டு
உணர்வுகளால்
உருகுவது வாழ்க்கை

•

நீயும் நானும்
இணைவதல்ல வாழ்க்கை...

பொத்துவில் ஏ. மஜீத்

## "காதலி மறந்த போதும்"

தென்றல் வந்த
திசையெல்லாம்
உன் சேதிசொல்லிச்
சென்றது!
நீ நலமாய்
இருக்கிறாயாம்!
அதனால்....
நான் மகிழ்ந்துபோன
நிமிடங்களை
எப்படி உணர்த்துவேன்
உனக்கு!
நீ சந்தோசிக்கும்
போதுதான்
என் சுவாசம்
சத்திகரிக்கப்படுகின்றது!

நான் சந்தோசமாய்
இருக்கிறேன்;
நீ நலமோடு
வாழ்வதால்!

ஹெந்தளை நவா.

## பண்தமிழாய்ப் பார்த்திருப்பேன்!

கட்டுடலைத் தொட்டணைத்து காலமெல்லாம் அருகிருக்க
கட்டி உற வாடுதடி நெஞ்சம் – உன்
வெட்டுவிழிப் பார்வையினால் கொட்டுந்தேன் போதையினால்
தொட்டில் போடச் சொல்லுதடி மஞ்சம்.

சிட்டெனவே நாம்பறந்து வெட்டவெளி தனில்திரிந்து
தொட்டுக் கொள்ள வேண்டுமடி மேனி – நீ
எட்டி நின்று விழிவீசி கிட்டவந்து கதைபேசி
கட்டிக்கொள்ள ஓடிவா என்ராணி.

கண்வெளுப்பு இதழ்மேவ மென்விழிகள் சிவப்பேற
பண்ணிசைக்க வரவேண்டும் தேவி—நிலாத்
தண்ணொளியே துகிலாக கண்ணொளியே விளக்காக
பின்னிடவே துடிக்குதென்றன் ஆவி.

சின்ன இடை மின்னலிட பொன்னிதழ்கள் தேகந்தொட
உன்னிடத்தில் நான்தொலைப்பேன் என்னை – அந்த
வெண்ணிலவின் குளிரெடுத்து வண்ணமயில் எழில் தொடுத்து
பண்தமிழாய்ப் பார்த்திருப்பேன் உன்னை!

க. கோணேஸ்வரன்.

## அளான அவஸ்தைகள்

ஏது
புரியாமல்
எனக்குள்
ஏன் இது?

கும்பிமணலில்
குச்சிக்
குடில்கள் கட்டி
விளையாடியவள்.
தாவணி
பாவாடையோடு
வந்து
தாவியணைத்தவள்.

இப்போதெல்லாம்
பூமியை நோக்கி
நடக்கிறாள்
புதிய வதனம்
போர்த்துக் கொண்டு.

மல்லிகை
இப்போது எனக்குள்
மணக்கிறது
இதயம்
எதை எதையோ
சுமந்து
கனக்கிறது.

இனி—ஒரு
இமைப் பொழுதுகூட
உன் பிரிவுக்கு
பிரியப்படாது—என்
இதயம்.

ஓ.. என்
பிரியசகியே
மௌனத்தை கலை
உதயத்தில் வந்து
வார்த்தைகளை
உதிர்த்து.

நினைவு முகத்தில்
முக்காடு போடும்
நாண மேகத்தை
நகர்த்து.

வாசல்
வானத்தில்—ஒரு
வட்டநிலாவாய்
தரிசித்தவன்
பாதி
பரிணமிப்புக்கே
பாதையோரம்
பாவிநான்
தவித்துக்
கிடக்கிறேன்.

வா...
சாவுக்குள்
வாழும் நாம்
வாழ்வுக்குள்
சாவோம்.

நிவேப்பிரியன்
பொத்துவில்-03.





## வாழ்கிறேன் வாழ்வதற்காக அல்ல

பேனையில் மை
காய்ந்து போன
பின்புதான் – நான்
எழுதுகிறேன்

□□

பாதங்களின்
பலவீனத்திற்காக
எனக்கொரு கூட்டாளி
கரங்களில்.....

□□

நிரந்தர
நிம்மதியை
நிதானமாய் தேடிச் செல்ல
காலம் எனக்குத்தந்த
புதிய வேடம்
முதுகுக் கூனல்

□□

வார்த்தைகளுக்கு
வழு இல்லை—என்
வயதானதால்

□□

என்
பாவாத்மாவினால்
பறிகொடுக்கப்பட்ட
நேய உணர்வுகளை
நேசித்தவள் கூட
வெறுப்பாய்....
நெருப்பாய்...

□□

உறவுகளை
துறக்கச் சொல்கிறது மனது
உண்மையான
உறவுகள்
ஊனமாய் போனதற்காக

□□

உறக்கத்தை
மறக்கச் சொல்கிறது கண்கள்
மரணத்தின்
வருகையை வரவேற்பதற்காக

□□

வாழ்வின்
வடிவத்தை
நிர்வாணமாகக் கண்ட
சந்தோசத்தில்
வாழ்கின்றேன்
வாழ்வதற்காக அல்ல.

□□

கதிர்-பிடியகந்தை.

## கத்தரித்த கடி ஜோக்ஸ்

ஒருவர்: அந்த நீர்வீழ்ச்சியையே ரெண்டு மணிநேரமா அசையாமல் ஆசையாய் பார்த்துக்கிட்டிருக்கிறீர்களே நீங்க ஓவியரா இல்லை கவிஞரா?

மற்றவர்: நான் பால் வியாபாரம் செய்கிறவனுங்க.

□□

திருடனின் மனைவி: பையனை ஏன் இப்படிப் போட்டு அடிக்கிறீங்க?

திருடன்: அந்த வீட்டில போய் சுருட்டிக்கிட்டு வாடான்னு சொன்னா, தரையில விரிச்சிருந்த பாயைச் சுருட்டிக்கிட்டு வந்திருக்கான்.

□□

நோயாளி: நான் எதைச் சாப்பிட்டாலும் வாந்தியா வெளியில வந்துடுது டாக்டர்.

டாக்டர்: அதுக்கத்தான் மாத்திரை கொடுத்திருந்தேனே?

நோயாளி: அதுவும் வாந்தியா வெளியே வந்துடுச்சு டாக்டர்.

□□

அவர்: பல்லை உடைப்பேன்னு ரெண்டு பேர் ரோட்டில நின்னு சண்டை போட்டாங்க.

இவர்: இதில என்ன அதிசயம்?

அவர்: ரெண்டு பேருமே பல்லுப்போன கிழவர்கள்.

□□

ஒருவர்: சாப்பிடப்போகும் முன் நான் கடவுளைக் கும்பிட்டு விட்டுத்தான் சாப்பிடுவேன்.

மற்றவர்: எனக்கு எந்தப் பயமும் இல்லை. என் மனைவி நல்லாவே சமைப்பா.

□□

□ உங்களை மாதிரியே ஒரு ஆளை நேற்று நான் கடை வீதியில் பார்த்தேன்.

• அப்படியா?

□ நீங்கதான்னு நினைச்சு, உங்கிட்ட கடன் வாங்கிய பணத்தை அவரிடம் கொடுத்திட்டேன்.



## இந்த வாரம் உங்கள் பலன்

(26.03.95 முதல் 01.04.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், புதன் |
| மேடம் | - கேது |
| கர்க்கடகம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - வெள்ளி, சனி |

சந்திரன்-மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நட்டம், கடன்படல். | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உறவினர் எதிர்ப்பு, மனப்பயம். | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, செல்வாக்கு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | வீண் சந்தேகம், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |
| சனி- | கடன்படல், செல்வாக்கு இழப்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | கடன் தொல்லை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, வெளிநாட்டுப் பயணம். | பி.ப. 2 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, மனப் பயம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, கௌரவம். | காலை 7 மணி |
| சனி- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் சகாயம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், பொருள் இழப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், செல்வாக்கு. | காலை 7 மணி |
| புதன்- | உறவினர் கலகம், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | தெய்வானுகூலம், காரியசித்தி. | காலை 9 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, பணத்தடை. | பகல் 12 மணி |
| சனி- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், பணவரவு. | காலை 7 மணி |
| வியாழன்- | புதிய இடச் சேர்க்கை, கௌரவக் குறைவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | மனமகிழ்ச்சி, காரியசித்தி. | பகல் 12 மணி |
| சனி- | துன்ப நிலை, மனக்கலக்கம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துன்பம் நீங்கும், கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | செல்வாக்கு அதிகம், மனத் தைரியம். | பகல் 12 மணி |
| புதன்- | உயர்ந்தநிலை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், வீண் குறைகேட்டல். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், பொருள் நட்டம். | பி.ப. 2 மணி |
| சனி- | உறவினர் பகை, வீண் மனஸ்தாபம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| திங்கள்- | உறவினர் கலகம், மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- | அந்நியர் பகை, பொருள் இழப்பு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | செல்வாக்கு மேன்மை, மனத் தைரியம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | வீண் குறை கேட்டல், கலக்கம். | காலை 7 மணி |
| சனி- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்தநிலை, வெளியிட வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | பொருள் நட்டம், மனக் கவலை. | காலை 6 மணி |
| புதன்- | துன்பம் மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண் குறை கேட்டல், மனக்கலக்கம். | காலை 7 மணி |
| வெள்ளி- | முயற்சி பலிதம், பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ச்சிநிலை, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | வீண் துயர், செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- | பணக் கஷ்டம், கடன்படல். | காலை 7 மணி |
| புதன்- | பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | உறவினர் கலகம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | வீண் பிரயாணம், பொருள் இழப்பு. | காலை 7 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், மனக்கலக்கம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | தொழில் விருத்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- | பெரியோர் பகை, வெளியிட வாழ்க்கை | காலை 7 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், கௌரவம். | காலை 7 மணி |
| சனி | மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முயற்சித்தடை. | காலை 7 மணி |
| புதன்- | துயர் நீங்கும், மனக்குறை அகலும். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | செல்வாக்கு மேன்மை, பயனுள்ள செயல். | பி.ப. 1 மணி |
| சனி- | காரியத்தடை, மனக்கலக்கம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | எதிர்பார்த்த நன்மை, புதிய முயற்சி. | காலை 6 மணி |
| வியாழன்- | வீண் குறை கேட்டல், மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, கௌரவம். | காலை 7 மணி |
| சனி- | துயர் நீங்கும், புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, பணவரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- | வீண் மனக்கஷ்டம், பகை. | காலை 7 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- | கடன்படல், செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3





## பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள்
வடிவான பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள்
களிப்பூட்டும் பூக்கள்
□□
மனதைக் கவரும் பூக்கள்
மணம் கமழும் பூக்கள்
தேன் வடியும் பூக்கள்
தேனீக்கள் மொய்க்கம் பூக்கள்
□□
வெள்ளை மல்லிகைப் பூக்கள்
வெண்மையை உணர்த்தும் பூக்கள்
சிகப்பு ரோஜாப் பூக்கள்
சிங்காரிக்க உதவும் பூக்கள்
□□
வண்டைச் சுமக்கும் பூக்கள்
வசந்த காலப் பூக்கள்
என் வீட்டுப் பூக்கள்
எழில் மிக்கப் பூக்கள்
□□

அனுப்பியவர்-செல்வி.ஏ.பௌசனா நசாக்-சீனக்குடா.

"சாதிகள் இல்லையடி பாப்பா!-குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்த மதி, கல்வி-அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்."

-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை



# இராட்சதக் குழந்தை

**வீ**ரசேனன் அரசவையில் எவ்வளவோ அறிஞர்களும், அறிவாளிகளும், புலவர்களும் நிறைந்திருந்தாலும் புஜபாரக்கிரம பலசாலிகளான மற்போர் வீரர்களையே பெரிதும் மதித்து வந்தான். மற்போர் கலையை வளர்ப்பதன் மூலம் சிறந்த வீரர்களை அவன் உருவாக்கிக் கொண்டிருந்தான். அவர்களில் ஒருவன் தான் மாமல்லன் என்னும் மல்யுத்த வீரன். அவன் அகன்ற மார்பும் திரண்ட தோளுமாய் முறுக்கேறிய உடலுடன் ஆஜானுபாகுவாக இருப்பான்.

அவனே வீரசேனன் மதிக்கத்தக்க சிறந்த மல்யுத்த வீரனாக இருந்தான். வீரசேனன் அவனைப் பிற வீரர்களுடன் மற்போரில் ஈடுபடச் செய்து வெற்றி பெற வைத்து மாமல்லனுக்குப் பொன்னும், பொருளும் பரிசாகக் கொடுத்துக்கொண்டே இருப்பான். அதனால் மாமல்லனுக்கு, தான் ஒரு சிறந்த மல்யுத்த வீரன் என்கிற மமதையும், கர்வமும் உண்டாயிற்று. தன்னை வெல்ல எவருமில்லை என்ற இறுமாப்பு அவனுக்கு ஏற்பட்டது. மனைவியிடம் தன்னை மற்போரில் வெல்ல இனி உலகில் ஒருவன் பிறந்தால்தான் உண்டு என்று அடிக்கடி கூறுவான்.

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பதை பாவம் மாமல்லன் அறியவில்லை.

அடுத்த நாட்டில் பீமனைப் போன்ற ஒரு மற்போர் வீரன் இருந்தான். அவன் பிரம்மாண்டமான வடிவோடிருப்பான். மல்யுத்தம் செய்யும்பொழுது தன்னை எதிர்த்து யுத்தம் செய்கிறவர்களை அவன் புறங்கையாலேயே தாக்கி வீழ்ச்சியடையச் செய்து விடுவான். அவ்வளவு பலசாலி.

தனக்கு நிகர் எவருமில்லை என்று சொல்லிக்கொண்டிருந்த மாமல்லனின் பேச்சு அவன் காதில் விழுந்தது. அவன் பெயர் மார்த்தாண்டன்.

அவன் மாமல்லனைப் பார்த்ததில்லை. ஆனால் அவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்ததால் அவனை மற்போரில் வெல்ல விரும்பினான். ஒரு நாள் அவன் மாமல்லனிடம் சென்று அவனை மல்யுத்தத்திற்கு அழைத்து எந்த நாட்டு மக்களிடம் அவன் பேரும், புகழுமாக இருக்கிறானோ அந்நாட்டு மக்களிடமே அவன் தலைகுனியும்படி செய்யவேண்டுமென்று எண்ணினான். தான் மாமல்லனைச் சந்திக்க வரப்போவதை அவனுக்குச் செய்தியாகச் சொல்லி அனுப்பினான்.

மாமல்லன், மார்த்தாண்டனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான். தன்னை விடப் பலவான் அவன் என்பதை அறிந்திருந்தான் மாமல்லன். மற்போரில் அவன் தன்னை வெற்றி கொண்டு விட்டால் தலைதூக்க முடியாதபடியாகி விடுமே, மன்னன் வீரசேனன் மதிக்கவே மாட்டானே, என்றெண்ணிக் கலங்கினான் மாமல்லன். மனைவி பவளவல்லியிடம் சொல்லிப் புலம்பினான்.

மார்த்தாண்டனுடன் மல்யுத்தம் செய்யாதபடி ஏதாவது செய்ய வேண்டுமே என்று கூறினான். அவன் கூறுவதைக் கேட்ட பவளபல்லிக்கு, தன் கணவனுக்கு ஏற்படும் அவமானமும், தலைகுனிவும் தனக்கு ஏற்பட்டது போலதான் என்று எண்ணினாள். கைக்குழந்தையைத் தொட்டிலில் போட்டு ஆட்டியபடி இரவெல்லாம் யோசித்தாள்.

மறுநாள் மார்த்தாண்டன், மாமல்லனுடன் மற்போர் புரிய வந்து கொண்டிருக்கிறான் என்ற செய்தி வந்தது. அன்றோடு தன் புகழ், பெருமை எல்லாம் மண்ணோடு மண்ணாகி விடுமே என்று வேதனைப் பட்டான் மாமல்லன்.

அவன் மனைவி பவளபல்லி கைக்குழந்தையைத் தன் அம்மா வீட்டிற்குக் கொண்டு போய் விட்டுவிட்டு வந்தாள். பிறகு தொட்டிலை விரித்துவிட்டு அதில் மாமல்லனைக் கை, கால்களைக் குறுக்கிக் கொண்டு படுக்கச் சொன்னாள். தலையில் குழந்தையின் தொப்பியை இழுத்துப் பெரிதாக்கி மாட்டி முகம் தெரியாதபடி மறைத்தாள். பிறகு தொட்டிலை ஆட்டத் தொடங்கினாள்.

அட்டகாசமாக, "எங்கே மாமல்லன்?" என்று கேட்டபடி வந்தான் மார்த்தாண்டன். அவன் உருவமும் குரலுமே பயங்கரமாக இருந்தது. அவனுடன் மற்போரிட்டால் நிச்சயம் தன் கணவன் தோற்று விடுவான் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது பவளவல்லிக்கு.

"அவர் இப்பொழுதுதான் அரசவைக்குச் சென்றார். நீங்கள் சிறிது நேரம் உட்காருங்கள் அவர் வந்துவிடுவார்," என்றாள் அவள்.

உட்கார்ந்த மார்த்தாண்டன் வீட்டினுள் நோட்டம் விட்டான். தொட்டில் பெரிதாகவும், நீளமாகவும் இருந்ததைப் பார்த்தான். இவ்வளவு பெரிய தொட்டிலை அவன் பார்த்ததில்லை.

"தொட்டிலில் படுத்திருப்பது யார்?" என்று கேட்டான் மார்த்தாண்டன்.

"வேறு யார்? என் ஆறுமாதக் கைக் குழந்தை." என்றாள் பவளவல்லி.

'ஆறுமாதக் கைக்குழந்தையா? பெரிய ஆள்மாதிரி வளர்ந்திருக்கிறதே?' என்று யோசனையில் ஆழ்ந்தான். 'ஆறுமாதக் குழந்தை இவ்வளவு பெரிதாக இருந்தால் இதன் அப்பா மாமல்லன் எவ்வளவு பெரியவனாக இருப்பான்? ஒரு கையே பெரிய அடிமரம் போல இருக்கிறதே! தலை பிரம்மாண்டமாக ராட்சசன் தலை போல இருக்கிறதே தகப்பன் மாமல்லன் பெரிய ராட்சசனாக இருப்பான் என்று குழந்தையைப் பார்த்தாலே தெரிகிறதே?' என்று பலவாறாக எண்ணி, தான் வந்திருக்கவே கூடாதோ என்று யோசிக்கத் தொடங்கினான் மார்த்தாண்டன்.

பவளவல்லி இரும்புக் கம்பி ஒன்றை எடுத்து வெட்டுளியால் சிறிது சிறிதாகக் காய்கறிகள் நறுக்குவது போல வெட்டிக் கொண்டிருந்தாள். அருகே ரொட்டி பிசைய மாவு இருந்தது.

"இரும்புத் துண்டுகள் எதற்கு?" என்று கேட்டான் மார்த்தாண்டன்.

"என் கணவரின் பற்கள் மிகவும் கெட்டியானவை. மிகவும் வலுவானவை. அப்பளம் போல இரும்பைக் கடித்து உண்பார். ரொட்டியில் இரும்புத் துண்டுகளைச் சேர்க்கச் சொல்லியிருக்கிறார். அதுதான் இரும்புத்துண்டுகள்!" என்றாள் பவளவல்லி.


"இரும்பு சாப்பிடுகிறவனைப் பற்றி இப்போதுதான் கேள்விப் படுகிறேன்." என்றான் மார்த்தாண்டன்.

"உங்களுக்கு வேண்டுமானால் இது இரும்பாக இருக்கலாம். அவருக்கு இது கரும்பு." என்றாள் பவளவல்லி.

அதைக் கேட்டதும் மார்த்தாண்டனுக்குச் சர்வமும் ஒடுங்கிவிட்டது. மிகவும் வல்லமையும், பலமும் அசாத்திய சக்தியும் உடைய மாமல்லனிடம் மற்போர் புரிந்து தோற்று அவமானமடைவதை விட இப்போதே வந்த சுவடு தெரியாமல் சென்று விடுவது உசிதம் என்றெண்ணி பவளவல்லி சமையலறைக்குள் சென்ற நேரம் பார்த்துப் பூனை போல நழுவி திரும்பிக் கூடப் பார்க்காமல் தன் ஊரை நோக்கிச் சென்று விட்டான்.

மனைவியின் மதியாலும், சமயோசிதப் பேச்சாலும் நேரவிருந்த பெரிய அவமானத்திலிருந்து மீண்ட மாமல்லனின் கர்வம் அன்றிலிருந்து ஒழிந்தது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01.04.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 84
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 81

**பரிசுக்குரியவர்**
க.பார்த்தியன்
விவேகானந்த வித்தியாலயம்- அக்கரைப்பற்று-8.

**பாராட்டுக்குரியவர்கள்**

எம்.எஸ்.நூறுல் சுகைபா
பாத்திமா மகளிர் மகா வித்தியாலம்-புத்தளம்.

அபர்ணா தவேந்திரன்
திருக்குடும்பக் கன்னியர் மடம்-கொழும்பு-4.

ஜெ.பிரிந்திகா- இ.கி.வித்தியாலயம்-மண்டூர்.

பாத்திமா நஸ்ரினா-மாவனல்லை.

ஹெலன் மேரி லியோன்,சேவியர் மகளிர் கல்லூரி- மன்னார்.

ஏ.ஏ.மொஹமட் அஸாம், ஸாஹிரா தேசிய கல்லூரி- புத்தளம்.

வீரையா ஜெயச்சந்திரன், தெஹியோவிற்ற தமிழ் மகா வித்தியாலயம்- தெஹியோவிற்ற.

## வானிலை அறிக்கை



□ **காலநிலை (கிளைமேட்), வானிலை (வெதர்) இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?**
பல மாதங்களாக அதிக குளிர், அதிக வெப்பம், மழை என்று நீடிக்கும் போது அதற்கு காலநிலை என்று பெயர். குறுகிய காலத்திற்குள் இந்த நிலை மாறுபடும் போது அதனை வானிலை என்பர்.

□ **அன்றைய வெப்பநிலை, மழை, அளவுகள் எவ்வாறு பெறப்படுகின்றது?**
விமானம், கப்பல்களில் கருவிகள் பொருத்தப்படுவதன் மூலமும் செயற்கைக்கோள்கள் மூலமும் வானிலை அறியப்படுகிறது. மேகக் கூட்டங்களின் சேர்க்கையை செயற்கைக்கோள் படத்தின் மூலம் அறியலாம்.

□ **வானிலை முன் அறிவிப்பு பல சமயங்களில் தவறாவதேன்?**
உலகில் மூன்றில் இரண்டு பகுதி கடல் நீரால் சூழப்பட்டுள்ளது. தட்பவெப்பநிலை இந்த நீரால் அடிக்கடி பாதிக்கப்படுகிறது. நிமிடத்திற்கு நிமிடம் இவை மாறுவதாலும் கண்காணிக்கப்பட வேண்டிய பகுதி பெரிதாக இருப்பதாலும் வானிலையை மிகத் துல்லியமாகக் கணித்துக் கூற முடியாத நிலை உள்ளது.

□ **வானிலை அறிக்கையில் முக்கியத்துவம் எது?**
புயல், மழை ஆகியவற்றை முன்கூட்டியே அறிவதால் அவற்றிற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க முடிகிறது. கப்பல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து ஆகியவற்றிற்கு இந்த அறிக்கை மிக உதவியாக உள்ளது.

□ **வானிலை அறிக்கைக்கான அகில உலக அமைப்பு எது?**
உலக வானிலை ஆராய்ச்சி மையம்(வேல்ட் மிடிரியலொஜிகல் ஓர்கனைசேஷன்- WMO




### குளிர்கால விடுமுறை

கரடிகள் குளிர் காலத்தில் அரைத்தூக்கமாகச் சுறுசுறுப்பின்றிச் இருக்கும் பழக்கமுடையவை. இந்தச் சமயத்தில் தான் பெரும்பாலான கரடிகள் குட்டிகளை ஈனும். வெய்யில் காலத்தில் சுறுசுறுப்பாக இரை தேட வேண்டியிருப்பதால் இந்த ஏற்பாடு. குளிர் காலத்தில் அரைத்தூக்க நிலையிலேயே குட்டிகளைக் கவனிக்கும். குட்டிகளின் முக்கிய உணவு தாய்ப் பால். தாய்க்கரடிக்கோ குளிர் காலத்தில் பசி எடுக்காது. அதனால் இரை தேட அலையாமல் குட்டிகளைப் பராமரிக்கும்.

## வாரம் ஒரு நாடு

### அவுஸ்திரேலியா



உலகின் 5 கண்டங்களில் சிறியதாக இருப்பினும் இந்தப் பரந்த நிலப்பரப்பு ஒரே நாடாகும். இதனை உலகிலேயே பெரிய தீவு என்றும் வர்ணிக்கின்றனர்.

**அமைவிடம்:** தென்பசுபிக் பிராந்தியம்
**பரப்பளவு:** 7,686,900 சதுரகிலோ மீட்டர். (2,967,900 சதுர மைல்)
**மக்கள் தொகை:** ஒருகோடி 70 இலட்சம்.
**தலைநகர்:** கான்பரா (மக்கள் தொகை 29 இலட்சம்)
**ஏனைய பெரிய நகரங்கள்:**
- **சிட்னி:** (35 இலட்சம்)
- **மெல்போன்:** (32 இலட்சம்)
- **பிரிஸ்பேன்:** (13 இலட்சம்)
- **அடிலெயிட்:** (11 இலட்சம்)
- **போர்த்:** (11 இலட்சத்து 50 ஆயிரம்)

**ஆட்சி முறை:** பாராளுமன்ற ஜனநாயகம். பெரும்பான்மையான மக்கள் இங்கிலாந்திலிருந்து குடியேறியமையினால் முடிக்குரிய குடியேற்ற நாடாக இருந்து அண்மையில் தன்னாட்சி பெற்றாலும் பிரித்தானிய மகாராணியையே தங்கள் அரசியாக அந்நாடு ஏற்றுள்ளது.
**மொழி:** ஆங்கிலம்.
**மதம்:** பிரதானமானது புரொட்டஸ்தாந்து
**தேசிய தினம்:** பெப்ரவரி முதலாம் திகதி.

**பொதுக்குறிப்பு:** அவுஸ்திரேலியாவின் நிலப் பரப்பு மிகவும் அதிகமாக இருந்த போதிலும் மக்கள் தொகை மிகமிக குறைவே. கிழக்கு, தென்கிழக்கு பிரதேசத்தில் கடற்கரையை அண்டியே மக்கள் அதிகமாக நெருங்கி அடித்துக் கொண்டு வாழ்கின்றனர். பெரும்பாலும் நகரங்களில்தான் மக்களின் நெருக்கம் அதிகமாகக் காணப்படும். மத்தியில் சமதரை யாவும் பாலைவனமாகவும் இருக்கிறது. வடபகுதி, மேற்குப் பகுதி யாவும் காடடர்ந்து கிடக்கிறது. இங்கெல்லாம் மக்கள் வாழ்வதில்லை என்பதனால் அபிவிருத்தியும் கிடையாது. போக்கு வரத்தும் இல்லை.

அவுஸ்திரேலியா பூர்வீகக் குடிகள் பெரும்பாலும் இன்றும் புராதன வாழ்க்கை முறையையே அனுசரித்து வருகின்றனர். அவர்களையும் தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கு அரசாங்கம் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

நியூ சவுத்வேல்ஸ், விக்டோரியா, குயீன்ஸ்லாந்து, தெற்கு அவுஸ்திரேலியா, மேற்கு அவுஸ்திரேலியா, மற்றும் தஸ்மேனியா (தெற்கேயுள்ள தனித்தீவு ஆகிய 6 மாநிலங்களைக் கொண்டது இந்நாடு. இவை தவிர 3 உட்பிராந்தியங்களையும் 7 வெளிப் பிராந்தியங்களையும் கொண்டிருக்கிறது.

**பார்க்க வேண்டிய இடங்கள்:**
அவுஸ்திரேலியா சகல வளமும் நிறைந்த நாடு. துரிதமாக வளர்ச்சி கண்டு வருகிறது. நவீனமயமான தொழில்கள் அபிவிருத்தி அடைந்துள்ளன.

நியு சவுத் வேல்ஸ் மாநிலத்தின் தலைநகரான சிட்னி நகரம் அதிக மக்கள் தொகையைக் கொண்டது. பயணிகளைக் கவரக் கூடிய பலதரப்பட்ட அம்சங்களும் இங்கு உள்ளன. நவீனமயமான இந்நகரில் 'சிட்னி ஒப்பரா ஹவுஸ்' என்ற கலாசார மையம் தனிச் சிறப்புவாய்ந்தது. நதிக்கரையின் அருகிலேயே கட்டப்பட்டுள்ள இந்தக் கட்டிடம், கலை அம்சம் பொருந்திய ஓர் அமைப்பாகும். நாடகம், இசை நிகழ்ச்சிகள் போன்றவை இங்கு எப்போதும் நடைபெற்றவண்ணமிருக்கும்.

இதே போல் ஒவ்வொரு நகரிலும் தனிச் சிறப்பம்சங்கள் உள்ளன.

குயீன்ஸ் லாந்துப் பிரதேசத்தில் கடலில் எங்கும் பவளப் பாறைகள் படர்ந்துள்ளன. படகுகளில் சென்று இவற்றைப் பார்வையிடலாம். இதில் கடல் வாழ் பல்லின ஜீவராசிகளின் வண்ண ஜாலங்கள் எவரையும் கவர்ந்திழுக்கும்.

அவுஸ்திரேலியாவுக்கே தனி உடைமையான தாவர மற்றும் உயிரினங்களுமுண்டு. அவற்றில், தன் மடியிலுள்ள ஒருவகைப் பையினிலேயே தன் குட்டியைச்சுமந்து செல்லும் கங்காரு எனும் மிருகமும் ஒன்றாகும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

அந்தி வெய்யில் மங்கிப் போயிருந்தது.

இருளின் சாரல் உலகம் முழுவதும் தெளித்துக் கொண்டிருந்தது. குளக்கரைகளில் ஏற்கெனவே இருந்த இருட்டுக்கு இனியும் கருமை கூடியது.

இனிப் போனால் தீபாராதனை நேரம் கோவிலுக்குப் போய்ச் சேர முடியாதென்றுதான் பத்ரா அப்படிக் குதித்தாளா?

மூழ்கிப் போனவள் வெகுநேரம் வெளியே வராதது சிவசங்கரனைச் சந்தேகப்படுத்தியது. நீர்ப்பரப்பு நிச்சலமானதுமே அவர் வேகமாகக் குளத்தின் படிக்கட்டுகளில் மேலே வந்து கதவைத் திறந்து வெளிப்பட்டார்.

அந்திக் காற்றில் அக்கினி அலை!

ஆகாயத்தின் மேற்கே ரத்தக் குளம்.

ஒன்றுமே புரியவில்லை. எதையும் இலகுவாக எடுத்துக் கொள்கிற முரட்டு இதயத்துக்குள்ளேயும் இப்போது கடுமையாக வலித்தது.

பரபரப்பாக வந்து திண்ணையில் உட்கார்ந்து கொண்டார். எதுவும் தெரியாத பாவனை! நங்கை வரலாம். குளிக்கப் போன மகள் எங்கே? கேட்கலாம். இனி எப்படி அவள் முகத்தை ஏறிட்டுப் பார்ப்பது?

என்ன பதில் சொல்லுவது?

யோசித்துக் கோண்டே நகத்தைக் கடித்துக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்த போது..... தனக்கு எதுவுமே நடக்காத ஒரு பாவனையில் ஈரம் சொட்டச் சொட்ட நடந்து வந்து இல்லத்துக்குள் போனாள் பத்ரா.

அது பத்ரா தானா?

அல்லது அல்லது அவளது ஆவி ரூபமெடுத்து சிவசங்கரனைப் பயமுறுத்துகிறதா?

ஒரே குழப்பம்!

இல்லத்துக்குள் எட்டிப்பார்த்தார்.

பத்ரா போன வழியையே மறுபடியும் கூர்ந்து பார்த்தார். பாதச்சுவடுகளின் ஈரக்கோலம்..... இல்லத்துக்குள் முற்றம் வழியாகப் போயிருக்கிறது!

அவள் ஆவி அல்ல!

சிவசங்கரனை இப்படிக் குழப்புவதற்காகத்தான் நீருக்குள் அவ்வளவு நேரமும் மூச்சடக்கியிருந்திருக்கிறாள்!

இனி அவள் தன்னைச்சோதிக்கலாம்!

அன்று அவள் தாயாரின் கட்டிலிலிருந்து எழுந்துவந்த போது பத்ராவைக் கண்ணாடியில் பார்த்த மனப்பதிவு.

அப்படியே உள்ளுக்குள் இருந்திருக்கிறது. ஊமையாய் உறங்கிக் கொண்டிருந்த உன்மத்தம்.... இன்று அவளைக் குளிக்கிறபோது மறுபடியும் பார்த்த மாத்திரத்தில் மதிமயங்கிப் போய் விட்டது!

மல்லாந்து நீர்மீது கிடந்தவளின் தங்கச் செழுமை ... சந்தனத்தில் கடைந்த சிற்பம் போலிருந்த பெண்மையின் வளைவுகள்...

குளிக்க வந்த சிவசங்கரனைக் குப்புறத் தள்ளிவிட்டது!

உண்மை தான்! ஆனால் அவருடைய உள்ளத்தில், இவள் இனியும் பக்குவம் பெறவில்லை என்று பரிந்துரை செய்த அந்த ஞானோதயம் அந்நேரம் எங்கே போயிற்று!

ஒரு முழுப்பெண்மையை அந்தப் பதினாறு வயது உடலில் பார்த்து இந்த நாற்பது வயதுக்காரன் இச்சை கொண்டது எப்படி?

எந்த நேரமும் 'கர்த்தவ்யம்' என்று, தனது கடமையிலேயே கண்ணாக இருந்தவருக்கு இவளை, தனது இச்சைக்கு உடமையாக்க வேண்டும் என்று எப்படித் தோன்றியது?

சுய பச்சாதாபத்தோடு தனக்குத் தானே மனசோடு புலம்பிக் கொண்டிருந்தார் சிவசங்கரன் திருமேனி.

அப்போது–

பூக்களையும், கற்பூரமும், தேங்காயும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள் பத்ரா.

நெற்றியில் நீறு. நீற்றின் நடுவே ஒருதுளிச் சந்தனப் புள்ளி. தொட்டுச் சார்த்திக் கொண்டு கூந்தலைப் பிரித்துப் போட்டபடி இறங்கிப்போனபோது ஒரு தேவதையே அந்த வீட்டை விட்டுப் போகிற மாதிரித் தெரிந்தது.

தனக்கு எதுவுமே நடக்கவில்லை என்கிற மனோபலம்.

அவள் முகத்தில் எந்தச் சஞ்சலமும் இல்லை.

போனவளையே பார்த்தபடி எழுந்து நின்றிருந்தார் அவர்.

இதைப் பார்த்தபடி வந்து பக்கத்தில் நின்றாள் நங்கை. அவள் காலடி சப்தம் கேட்டதுமே திரும்புகிற திருமேனி... அப்போதும் திரும்பினார். ஆனால் வார்த்தைகளில்லை.

□□

**வெ**கு நேரம் நங்கை என்னென்னவோ கேட்டுப் பார்த்து விட்டாள். எதற்கும் பதில் இல்லை.

செய்யக் கூடாத தவறு ஒன்றினைத் தான் செய்து விட்டதாக சிவசங்கரனின் மனசாட்சி சதா அவரைக் குற்றப் படுத்திக் கொண்டே இருந்தது!

சாப்பாடு கொண்டு வந்து வைத்தாள் நங்கை.

அப்போது கண்களின் ஓரம் கருணையும் பரிவும்: "இனித்திருமேனி.... இல்லத்துக்குள்ளே வந்தே சாப்பிடலாமே! எதுக்காகத் தினமும் இப்படி?"

அவர் அவளை நிமிர்ந்து பார்த்தார்.

"சோறும், சுகமும் உங்களைத் தேடி வந்தால் தான் தீண்டணும்னு ஏதாவது வைராக்கியமா?"

நங்கை அங்கே யாருமில்லை என்கிற தைரியத்தோடு செல்லமாக அவரது கன்னத்தில் தட்டினாள்.

குனிந்து பாத்திரத்தை வைத்தபோது குவிந்து விழுந்த மார்க் குழியை வேண்டுமென்றே மூடாமல் விழியால் அவரை அளந்தாள்.

"ஜுரம் எப்படி இருக்குன்னு கேட்கலியே!"

அப்போதும் மவுனமாயிருந்தார் திருமேனி.

"நாளைலேருந்து நிச்சயம் மூணு நாள் தொந்தரவு இருக்காது! நல்லா குறட்டை விட்டுத் தூங்குங்கோ."

சிவசங்கரன் தலை குனிந்து அமர்ந்திருந்தார்.

எதற்கும் ஓர் எச்சரிக்கை வேண்டும் என்கிற கவனத்தோடு தலையை உள்ளுக்கு நீட்டி மகளைத் துளாவினாள் நங்கை.

"அவ பூஜையிலே இருக்கா! ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டேங்கறீங்களே! என்னாச்சு உங்களுக்கு?"

அவர் தாடையை உயர்த்தினாள் அவள்.

அதற்கு ஆட்சேபணை உடனே கிடைத்தது! வலது புறக்கையால் ஒரே தள்ளு தள்ளினார் திருமேனி.

"ஆ!" அலறி விழுங்கினாள் நங்கை அந்தர்ஜனம்" "...முரட்டு மனுஷா! நாலு நாள் போகட்டும் பேசிக்கிறேன்...." என்றாள் கிசுகிசுப்பாக! அதன் பிறகு அவளும் வெளியே வரவில்லை.

இரவு.

சுவர்க் கோழிகளின் அவலச் சுருதி.... உயருவதும் தாழ்வதுமாக இருட்டைப் பயங்கரப் படுத்திக் கொண்டிருந்தது.

சிவசங்கரன் தூங்கவில்லை.

புரண்டு எழுந்தார்.

காலடிச் சத்தம் கூட கேட்காத பதனமாய் வந்து கதவைத் திறந்து வெளியே இறங்கினார்.

இருட்டு வானம். எந்தவிதத் தொந்தரவுமில்லாது உறங்கிக் கொண்டிருக்கும் யாமம்.

சிவசங்கரன் முற்றத்துக்கு வந்தார்.

பிறகு முன்வாசலுக்கு. அப்புறம் தெருவுக்கு. பின்னர் இருட்டிக்கிடந்த அந்தகாரத்தின் வாயுக்குள்!

□□

**ஆ**காயம் வெளுப்பாக இனியும் ஒரே ஒரு யாமம் தான் பாக்கி. அதற்குள் வழக்கம்போல் நங்கை எழுந்தாள். குளத்துக்குப் போய் நீராடி முடித்தாள். வெளி நடையில் அஞ்சுகிரி நிலை விளக்கு ஏற்றி வைத்தாள்.

திரும்பிப் போகும் போது சிவசங்ரனின் அறைக்கதவைத் தள்ளினாள். உள்ளே அவர் இல்லை!

இவ்வளவு அதிகாலையில் எழுகிற பழக்கம் அவருக்கு இல்லை.

எழுந்தாலும் எங்காவது வயலில் ஏதாவது வேலையிருந்தால் மட்டுமே பரபரப்பாகக் கிளம்பிப் போவது அவர் பழக்கம்!

இன்றைக்கு ஏதாவது வேலை இருந்திருக்குமோ... யோசித்தபடி நங்கை வந்த போது பத்ரா, அறையிலிருந்து ஈரக்கூந்தலுடன் பட்டு உடுத்தி.... கோவிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா இது?"

"கோவிலுக்கு!"

"அதான் தினம் அந்திப்பூஜைக்குப் போயிட்டிருக்கியே!"

"இனி... அதிகாலை பூஜைக்கும் போகணும்மா."

"என்னம்மா சொல்றே?"

பத்ரா புன்னகைத்தாள்.

"....பக்தி வேண்டியது தான்! இருந்தாலும் இப்படி அதிக பக்தி நல்லதில்ல பத்ரா!"

"நாற்பத்தொரு நாளைக்குத்தாம்மா!"

நங்கை அதிசயித்தாள்.

"நாற்பத்தொரு நாளா?"

"ஆமாம்மா ! விடாமல் போகணும்...."

"அதெப்படி பத்ரா முடியும்? அதுவும் வயசுக்கு வந்த போண்ணுக்கு அது சாத்தியமில்லையே!"

"எனக்கு முடியுமம்மா! சொல்லிவிட்டு இறங்கிப்போன மகளை அதிசயத்தோடும் அற்புதத்தோடும் பார்த்தபடி நின்றாள் நங்கை. அவள் திரும்பி வரும்வரை அதே நிலை!

அப்போதும் சிவசங்கரன் வந்து சேரவில்லை!

"என்னம்மா இது? அந்த நம்பூதிரியைக் காணலியே! வழியிலே நீ எங்காவது பார்த்தியா?"

"அதான் சொன்னேனேம்மா..!"

"என்ன சொன்னே?"

"நாற்பத்தி ஒரு நாள் தினமும் அதிகாலை பூஜைக்குப் போறேன்னு சொன்னேனே...."

"இதுக்கும் அந்த நம்பூதிரிக்கும் என்ன சம்பந்தம்?"

பத்ரா சிரித்தாள்.

"இந்த விரதமே விக்கினமில்லாம முடியற நாள்லை, அந்தச் சிவசங்கரன் நம்பூதிரியும் நம்ம வீட்டுக்கு வருவாரும்மா!"

சொல்லிவிட்டு அவள் பூஜை அறைக்குள் போய்க் கதவை அடைத்துக் கொண்டதுமே நங்கை ஸ்தம்பித்துப் போனாள்.

□□

**நா**ட்கள் நகர்ந்தன. நங்கை தினம் தினம் எண்ணிக்கொண்டேயிருந்தாள். அவளுக்கு ஆச்சரியம்...கோவிலில் நுழையக் கூடாத நாட்கள் இதற்கு நடுவே பத்ராவுக்கு ஏன் வரவில்லை என்பது!

பத்ரா சொன்னபடி நாற்பத்து ஒரு நாளும் முடிந்தது!

நாற்பத்தியிரண்டாம் நாள், அதிகாலை பூஜைக்குப் போய்த் திரும்பிய பத்ரா வீட்டுக்குள் நுழையும் போது வாசலில் நங்கை காத்திருந்தாள்.

அம்மாவின் மனசுக்குள் என்னென்னவோ குழப்பங்கள் உண்டு;

ஆனால் எதையுமே அவள் வாய்திறந்து மகளிடம் கேட்கவில்லை. சிவசங்கரன் திருமேனி வீட்டை விட்டுப் போனதுமே.... தன்னுடைய சுறுசுறுப்பு மொத்தத்தையும் இழந்து விட்டாற்போல அம்மாவும் மூடங்கிப் போனாள். அவளது வாயும் அடைத்துப் போயிற்று.

வழக்கம்போல் பத்ரா தனது பூஜை அறைக்குள் நுழைந்தாள்.

இனி வேளியே வர ஒன்றோ இரண்டோ மணிநேரம் ஆகும்.

பூஜை அறையில் நிலை விளக்குமுன் குவித்த கைகளுடன் சம்மணமிட்டு அமர்ந்திருந்தாள் பத்ரா.

பாதிக்கண் மூடிய நிலை.

இதைக் கவனித்ததுமே நங்கை அடுக்களைக்குள் புகுந்தாள்.

வெகுநேரம் ஆயிற்று பூஜை முடிய. எழுந்து கதவைச் சாத்திவிட்டு பத்ரா வெளியே வந்ததுமே முற்றத்தைத்தான் உற்றுப் பார்த்தாள்.

அவள் கண்கள் ஜ்வலித்தன.

அவளுடைய லட்சியம் நிறைவேறப் போகிறது...இத்தனை நாளும் பட்ட மனச் சிரமங்களுக்குப் பரிகாரம்.

உள்ளே வந்து கொண்டிருந்தார் சிவசங்கரன் திருமேனி.

பத்ராவின் வார்த்தை எவ்வளவு சரியாகப் பலித்திருக்கிறது! நங்கை அற்புதமான அற்புதமாய் சிவசங்கரனையும் மகள் பத்ராவையும் பார்த்தாள்.

உச்சி முதல் பாதம் வரை சிவசங்கரனின் பழைய திடகாத்திரம் மாறிப்போயிருந்தது!

நேராக அவர் பத்ராவின் அருகே வந்தார். அப்போது அவர் கண்கள் தழும்பியிருந்தது!

"இந்த நீசனை மன்னிச்சுடு மகளே! அதுக்காகத்தான் வந்தேன். எனக்கு மன்னிப்பு இல்லேன்னு மட்டும் சொல்லிடாதே!"

பத்ராவின் காலில் விழுகிற மாதிரி முன்னேறி வந்தார் அவர்.

அவள் ஒதுங்கிக் கொண்டாள்.

நங்கைக்குப் பதறிப் போயிற்று.

"என்னங்க திருமேனி.... இந்தச் சின்னப் பொண்ணு கால்லே போய் விழப் போறீங்க?"

பத்ரா புன்னகை மாறாமல் நின்றிருந்தாள்.

"அம்மா! நான் ஒரு தப்புப் பண்ணிட்டேன். செய்யக் கூடாத தப்பு."

சிவசங்கரன் கேவி அழுதார். பத்ரா நிற்கவில்லை. உடனே பூஜை அறைக்குள் போய் விட்டாள். நங்கைக்கு எதுவுமே புரியவில்லை! சிவசங்கரனையே உற்றுப் பார்த்தபடி நின்றாள் அவள்.

"சொல்லுங்க திருமேனி! என்ன தப்பு?"

குடைந்து குடைந்து கேட்டாள் நங்கை. வேறு வழியில்லை. சிவசங்கரன் சொல்லி விட்டார்.

செய்ததப்பை, மனப்பூர்வம் தப்பாக உணர்ந்து வெளிப்படுத்துவதே கூட ஒரு பிராயச்சித்தம் தான்!

நங்கையால் அதைக் கேட்க முடியவில்லை!

'அடப்பாவி!' என்று சபிக்கவும் அவளுடைய மனக் குற்றம் விடவில்லை.

"திட்டுங்கம்மா! திட்டுங்க! இல்லே காறி முகத்திலே துப்புங்க!"

நங்கையால் அவரை ஏறெடுத்துப் பார்க்கவும் முடியவில்லை! சட்டென்று உள்ளே போய் விட்டாள்.

குமுறிக் குமுறி அழுதாள்.

□□

**அ**ன்று முழுக்க சிவசங்கரன் அந்த வீட்டு வாசலிலேயே கூனிக் குறுகி ஏதோ ஒரு சாபம் ஏற்ற ஜந்து போலச் சுருண்டு கிடந்தார். அவரது உடல் நெருப்பாகக் கொதித்துக் கொண்டிருந்தது!

அவர் இருந்த போது செதுக்கிச் செதுக்கிச் செழுமைப் படுத்தியிருந்த மனையிடம் மொத்தமும் இதற்குள் புதர்மண்டிப் போயிருந்தது. தன் கால்கள் படாத ஒரு அடி மண்கூட அந்த மனையில் இல்லை! ஆனால் இப்போது? கால் வைக்க முடியாத காடும், புதரும்! பாதம் பட்ட மண் கண்ணுக்கே தெரியவில்லை!

அந்தக் குற்றம் நடந்தபிறகு... இனி இங்கே அடிவைக்கக் கூடத்தான் லாயக்கில்லை என்று போனவர் நம்பூதிரி. ஏதாவது ஒரு கோவில் வாசலில் மீதி ஆயுளைக் கழித்து விடலாம் என்கிற மனோ நிலையில் தான் புறப்பட்டுப் போனார். அப்படியே இருந்தார். ஆனால் என்னவோ ஓர் ஆகர்ஷம். மறுபடியும் ஒரு தடவை வர வேண்டும் என்று தோன்றிவிட்டது.

அப்படித் தோன்றச் செய்தது யார்? தெரியாது! இனி இங்கிருந்து தனக்கு எப்போது மன்னிப்பளிக்கப் போகிறார்கள்? அதுவும் தெரியாது.

போகும்போது...மனசுக்குள் உறுத்துகிற பாவம் மொத்தத்தையும் அதே குளத்தில் மூழ்கிக் கரைத்துவிட்டுப் போக வேண்டும்.

மனசுக்குள் மறுபடியும் ஒரு தோணல்.

எழுந்து நிற்கக்கூட முடியவில்லை. சுற்றுமற்றும் பார்த்தார். தட்டுத் தடுமாறிய படி குளத்துக்குப் போனார்.

பொழுது போய் விட்டது. படித்துறை மொத்தமும் இருட்டு.

என்றாலும் பாபநாசம் செய்ய வந்தவருக்கு அதில் ஒரு பிடிவாதம் அப்போதும் இருந்தது! கதவைத் திறந்து வைத்தபடியே இறங்கினார். குளித்து முடித்துவிட்டு... மனச் சுத்தியோடு படியேறியபோது,

திறந்து கிடந்த வலது பக்கத்துக் கதவை யாரோ இழுத்துச் சாத்தியது போல்.....

அடைத்துக் கொண்டது!

திருமேனி மிரண்டு போனார்.

காற்றில்லை; யாருடைய பிரயத்தனமும் இல்லை!

தானாகவே எப்படி அடைத்துக் கொண்டது? சிவசங்கரனுக்குப் புரியவில்லை!

எனவே தட்டுத்தடுமாறிப் படிகளில் ஏறிக் கதவைத் திறக்க ஒரு முயற்சி எடுத்தார்.

அந்தக் கணத்தில்தான் மறுபடியும் ஓர் அதிர்ச்சி.

அவருடைய கைவிரல்களிலிருந்து கால்விரல்கள் வரை உடலில் மொத்த அவையவங்களும் சட்டென்று நின்று போனது போல் ஓர் உணர்வு.

ஆனால் மூளை மட்டும் உத்தரவு போடுகிறது...

'கால்களை எடுத்து முன்னால் வை..' என்கிறது! முடியவில்லை! உடலின் பாரம்மொத்தமும் பின்னால் இழுக்கிறது!

கண்கள் இருட்டுகின்றன....

கதவு மொத்தமுமாய் நிறைந்து நிற்பது மரப்பலகை அல்ல என்பதும் புரிகிறது....

யாரது? (இன்னும் வரும்)

## எழுதுவது யார்?

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் 'முரசு'க்காக எழுதும் தொடர் இது!

வாசகர்களின் ஊகிப்புத் திறனுக்கு சவால்!


கண்டுபிடிக்கும் வாசகர்களில் பத்து அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான-பரிசுகள் காத்திருக்கின்றன.

தொடர்ந்து வாசியுங்கள் நாம் கேட்கும் போது விடையை எழுதி அனுப்பினால் போதும்.





# 14 மகா சூலம்


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: பி.ராஜ்குமார்
வயது: 19
முகவரி: 148/2, உவர்மலை வீதி, உவர்மலை-திருகோணமலை.
பொழுபோக்கு: வானொலி, பத்திரிகை, நண்பர் தொடர்பு.




பெயர்: எம். அஸ்மி
வயது: 21
முகவரி: 241, தெல்கஸ்தென்ன ரோஸ் கார்டின்ஸ், அக்குறணை.
பொழுதுபோக்கு:பத்திரிகை, புத்தகம், வானொலி.




பெயர்: சில்வெஸ்டர் மேரி
வயது: 17
முகவரி: கெல்சி டிவிஷன், நானுஓயா.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: கே.நிஹாரா
வயது: 17
முகவரி: 391 ஏர், முள்ளிப்பொத்தானை- கந்தளாய்.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எம்.கிருஷ்ணகுமார்
வயது: 20
முகவரி: HOF. STR.136 8044 ZURICH SWITZERLAND.
பொழுதுபோக்கு: கரப்பந்து, ரீ.வீ. பத்திரிகை.



பெயர்: ஐ.அஹமட்
வயது: 27
முகவரி: P.O.BOX-26671 SAFAT.13127 KUWAIT
பொழுதுபோக்கு: பத்திரிகை படித்தல்.

பெயர்: ஆர்.சிவா
வயது: 22
முகவரி: K.K.I.A. P.O.BOX-12507 RIYADH- 11483 K.S.A.
பொழுதுபோக்கு: சினிமா, பத்திரிகை, பாடல்கள் கேட்டல்.

பெயர்: எம்.ஹிஸாம்
வயது: 16
முகவரி: ஜவ்சான் பள்ளி வீதி, 23/1, 5ம் குறுக்குத்தெரு -புத்தளம்.
பொ.போ: பத்திரிகை படித்தல்.

பெயர்: கே.நகுலேஸ்வரன்
வயது: 17
முகவரி: 578, காலி வீதி,கொழும்பு-6.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை

பெயர்: ஏ.ஸவாஹிர்
வயது: 24
முகவரி: 751, பஸ் நிலையம், பிரதான வீதி-கதுறுவெல.
பொ.போ: வழமையானவை.

பெயர்: எஸ்.அன்ரனிதாஸ்
வயது: 20
முகவரி: டச்பார்வீதி,கல்லடி-மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வழமையானவை

பெயர்: எம். அமானுல்லா
வயது: 19
முகவரி: 238, சமகி ஜனபத,எலபடகம,பன்னல.
பொ.போ: வானொலி, பத்திரிகை, பேனாநட்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மக்சீம் கார்க்கி

## 18

மக்கள் அனைவரும் வாயடைத்துப் போய் நின்றார்கள். கலக்கம் நிறைந்த புன்னகையும், அமைதியான வியப்பும் அவர்களிடையே பரவியது. குற்றம் செய்து கொண்டிருக்கும் போது பெற்றோரிடம் அகப்பட்டுக் கொண்ட குழந்தைகளைப் போல் திருகத் திருக விழித்தார்கள்.

மனேஜர் தாயைக் கடந்து சென்றான். செல்லும்போது அவளது முகத்தைத் தனது உக்கிரம் நிறைந்த கண்களால் ஒரு பார்வை பார்த்துவிட்டு, அந்த இரும்புக் குவியலுக்கு எதிரே போய் நின்றான். யாரோ அவனை மேலே ஏற்றுவதற்காகக் கைகொடுத்து உதவ முன்வந்தார்கள். ஆனால் அவனோ அந்த உதவியை நிராகரித்து விட்டு பலத்த வேகத்தோடு, தானே மேலே தாவியேறி சிஸோவுக்கும் பாவெலுக்கும் எதிரே நின்றான்.

"இதெல்லாம் என்ன கூட்டம்? நீங்கள் ஏன் வேலைக்குப் போகவில்லை?"

சில கணநேரம் ஒரே அமைதி நிலவியது. தானியக் கதிர்களைப் போல் மனிதர்களின் தலைகள் ஆடியசைந்தன. சிஸோவ் தன் தொப்பியை எடுத்து வீசினான், தோள்களைச் சிலுப்பினான், தலையைத் தொங்கவிட்டான்.

"என் கேள்விக்குப் பதில் சொல்!" என்று கர்ஜித்தான் மனேஜர்.

பாவெல் அவனுக்கு முன்னால் வந்து நின்று, சிஸோவையும் ரீபினையும் சுட்டிக் காட்டிக்கொண்டு உரத்த குரலில் பேசத் தொடங்கினான்.

"கூலிக் குறைப்பு பற்றிய உங்கள் முடிவை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று உங்களிடம் கோரும்படி உங்கள் மூவரையும் தோழர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்."

"ஏன்?" என்று பாவெலைப் பார்க்காமலேயே கேட்டான் மனேஜர்.

"ஏனென்றால், இந்த மாதிரியான தலைவரி விதிப்பு அநியாயமானது என்று நாங்கள் கருதுகிறோம்" என்று உரக்கக் கூவினான் பாவெல்.

"சதுப்பு நிலத்தைச் சரிபண்ணுவது தொழிலாளர்களது நன்மைக்காக அல்லாமல், அவர்களைச் சுரண்டுவதற்காகச் செய்த காரியம் என்றா நீ கருதுகிறாய்? அதுதானே உன் எண்ணம்?"

"ஆம்" என்றான் பாவெல்.

"நீயும் கூடவா?" என்று ரீபினைப் பார்த்துக் கேட்டான் மனேஜர்.

"நாங்கள் எல்லோருமே அப்படித் தான் நினைக்கிறோம்."

"ஏனப்பா, நல்லவனே! நீயுமா?" என்று சிஸோவைப் பார்த்துக் கேட்டான்.

"நானும்தான். எங்கள் காசை எங்களுக்கு விட்டுக் கொடுப்பதுதான் நல்லது."

சிஸோவ் மீண்டும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, குற்றம் செய்தவனைப்போல் லேசாகச் சிரித்துக் கொண்டான்.

மனேஜர் அந்த ஜனத்திரள் முழுவதையும் மேலோட்டமாகப் பார்த்தான்; தன் தோள்களைக் குலுக்கிக்கொண்டான். பிறகு அவன் பாவெலிடம் திரும்பி, அவனைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே சொன்னான்:

"உன்னைப் பார்த்தால் படித்தவன் மாதிரி தோன்றுகிறது. உனக்குக்கூடவா இந்த நடவடிக்கையால் ஏற்படக் கூடிய நன்மைகளை உணர முடியவில்லை?"

"தொழிற்சாலை நிர்வாகத்தின் சொந்தச் செலவிலே அந்த நிலத்தைச் சீர்பண்ணினால் தான் எங்களுக்கும் அதன் நன்மைகளை உணர முடியும்!" என்று எல்லோரும் கேட்கும்படியாகச் சொன்னான் பாவெல்.

"தொழிற்சாலை தர்ம ஸ்தாபனம் அல்ல! நீங்கள் அனைவரும் இப்போதே வேலை செய்யத் திரும்பியாக வேண்டும். இது என் உத்தரவு!" என்றான் மனேஜர்.

அவன் யாரையும் பார்க்காமல், இரும்புக் குவியலின் மீது அவன் பதனமாகக் கால் வைத்து கீழிறங்கத் தொடங்கினான்.

கூட்டத்தினிடையே அதிருப்திக் குரல்கள் கிளம்பின.

"என்ன இது?" என்று சட்டென்று நின்று சத்தமிட்டான் மனேஜர்.

அமைதியைக் குலைத்து தொலைவிலிருந்து ஒரே ஒரு குரல் ஒலித்தது:

"நீயே போய் வேலை செய்!"

"இன்னும் பதினைந்து நிமிஷ நேரத்தில் நீங்கள் வேலைக்குத் திரும்பாவிட்டால், உங்கள் அனைவருக்கும் அபராதம் விதிக்கும்படி உத்தரவிடுவேன்" என்று அழுத்தமும் வறட்டுத் தன்மையும் நிறைந்த குரலில் சொன்னான் மனேஜர்.

மீண்டும் அவன் கூட்டத்தின் ஊடாக வழிதேடி, நடந்து சென்றான்; அவன் திரும்பிச் செல்லும்போது அவனுக்குப் பின்னால் தங்கிய கூட்டத்தினர் கசமுசத்தனர்; அவன் செல்லச் செல்ல அந்தக் கசமுசப்பும் அதிகரித்தது.

"போய், அவனோடு பேசிப் பாருங்கள்!"

"இதுதானப்பா, உனக்குக் கிடைக்கும் நியாயம்! என்ன பிழைப்பு வாழ்கிறது?"



அவர்கள் பாவெலை நோக்கித் திரும்பிச் சத்தமிட்டார்கள்.

"ஏ, சட்டப்புலியே! இப்போது நாங்கள் என்ன செய்வதாம்?"

"பிரமாதமாக மட்டும் பேசிக் கிழித்து விட்டாய்! மனேஜர் முகத்தைக் கண்டவுடன் உன் வீராப்பெல்லாம் பறந்தோடி விட்டது!"

"பாவெல் சொல்லு! நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று சொல்!"

தாங்கமுடியாத அளவுக்கு இந்தக் கசப்புக் குரல்கள் பெருகிவரவே, பாவெல் வாய்திறந்தான்:

"தோழர்களே, கூலியைக் குறைக்க மாட்டேன் என்று அவர் உறுதி கூறினால் அல்லாது, நாம் வேலைக்குப் போகக் கூடாது. இதுதான் என் யோசனை."

உத்வேகமான பல குரல்கள் உடனே ஒலித்தன.

"எங்களை என்ன, முட்டாள்கள் என்று நினைத்தாயா?" "வேலைக்குப் போகாதே என்றால்.....வேலை நிறுத்தமா?"

"எதற்காக? கேவலம் ஒத்தைக் காசுக்காகவா?"

"ஏன், வேலை நிறுத்தம் செய்தால் என்ன?"

"நம்மையெல்லாம் சுட்டுத்தள்ளி விடுவான்!"

"அப்புறம் அவனுக்கு வேலைபார்க்க ஆள் ஏது?"

"ஆளா கிடைக்காது? எத்தனையோ பேர் தயாராக முன் வருவார்கள்!"

"கருங்காலிகள்!"

□□□

பாவெல் கீழே இறங்கிவந்துதன் தாயருகே நின்றான். கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது; ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் விவாதித்துக் கொண்டார்கள்; ஆவேசமாகக் கூச்சலிட்டுக் கொண்டார்கள்.

ரீபின் பாவெலிடம் வந்து சொன்னான்: "இவர்களை நம்பி நீ வேலை நிறுத்தம் செய்ய வைக்க முடியாது. எல்லோரும் பேராசைக்காரர்கள்தான், காசை விடமாட்டார்கள். ஆனால், கோழைகள், தைரியமில்லாதவர்கள்! முன்னூறு பேர்கூட உன்னைப் பின்பற்ற மாட்டார்கள். ஒரு வண்டிக் குப்பையையும் ஒரே சுமையில் அகற்றிவிட முடியுமா?..."

பாவெல் பதில் பேசவில்லை. அவனுக்கு முன்னால் திரண்டு நிற்கும் கரிய முகங்களின் பலஜோடிக் கண்களும் அவனையே ஆழ்ந்து நோக்கி அலைபாய்ந்து கொண்டிருந்தன. அவனது இதயம் அதிர்ச்சியால் படபடத்தது. வறண்ட பூமியின்மீது விழுந்த சிறு தூற்றலைப் போல, தன்னுடைய பேச்சு எந்த விதப் பலனும் இல்லாமல் எங்கோ காற்றோடு கரைந்து போய் விட்டதுபோல அவனுக்குத் தோன்றியது.

அவன் களைத்துப் போய்த் தலையைத் தொங்கப் போட்ட வாறே வீட்டுக்குத் திரும்பினான். அவனுக்குப் பின்னால், அவனது தாயும் சிஸோவும் வந்துகொண்டிருந்தார்கள். ரீபின் அவனுக்குப் பக்கமாக வந்து, அவனது காதில் ஏதோ குசு குசுத்தான்.

"நீ நன்றாகத்தான் பேசுகிறாய். ஆனால், உன்பேச்சு இதயத்தைத் தொடவில்லை. ஆமாம், நீ அவர்களது இதயங்களைத் தொடுகிற மாதிரிப் பேசவேண்டும்! இதயத்தின் மத்தியிலே தான் தீப்பொறி விழவேண்டும். நீ மக்களை உன் அறிவைக் கொண்டு வசப்படுத்த முடியாது. காலுக்கேற்ற செருப்பல்ல இது."

"பெலகேயா, நம்மாதிரிக் கிழடுகள் எல்லாம் சமாதியிலே இடம் தேடிக் கொள்ளும் காலம் வந்துவிட்டது!" என்று தாயை நோக்கிப்பேச ஆரம்பித்தான் சிஸோவ். "ஒரு புதுத்தினுசான மக்கள் வளரத் தொடங்கிவிட்டார்கள். நீயும் நானும் எப்படி வாழ்ந்தோம்? முட்டும் முழங்காலும் தேய, மண்டையெல்லாம் தரையிலே முட்டி மோத, நமது முதலாளிக்குச் சலாம் போட்டுதானே வாழ்ந்தோம். ஆனால், இந்தக் காலத்திலோ? பிள்ளைகளுக்குப் புத்திதான் பெருத்துப் போயிற்றோ, தவறுதான் அதிகம் பண்ணுகிறார்களோ? எப்படி யிருந்தாலும், இவர்கள் நம்மாதிரி இல்லை. இவர்களைப் பாரேன்! மனேஜரோடு, அவரோடு சம அந்தஸ்து உள்ளவர்கள் மாதிரி பேசுகிறார்கள், பார்த்தாயா?.... போகட்டும். போய் வா, பாவெல் மிகாய்லவிச்! நீ ஜனங்களுக்காகக் கச்சை கட்டிக்கொண்டு நிற்பது நல்லதுதான், தம்பி! கடவுள் உன்னைக் காப்பாற்றட்டும்! ஒருவேளை இவர்கள் விமோசனத்துக்கு உனக்கு ஒரு வழி கிடைத்தாலும், கிடைக்கும்! கடவுள் உனக்கு உதவட்டும்!"

அவன் போய்விட்டான்.

"போ போ, சீக்கிரம்போ. போய்ச் செத்துத் தொலை!" என்று முனகினான் ரீபின். "இவனைமாதிரி ஆட்களெல்லாம் மனிதர்களே அல்ல; வெறும் மண்ணாங்கட்டிகள்! பெயர்ந்து விழுந்த இடத்தை அடைக்கத்தான் உதவுவான்! பாவெல்! உன்னைத் தூதனுப்பவேண்டும் என்று சொன்னவர்களைக் கவனித்தாயா! உன்னை சோஷலிஸ்ட் என்றும், கலாட்டாக்காரன் என்றும் வதந்திகளைப் பரப்பினார்களே, அவர்களேதான், அதே ஆசாமிகள்தான்! 'பயலுக்கு வேலை போய்விடும்; அதுதான் அவனுக்கு வேண்டும்' என்று அவர்கள் தமக்குள்ளாக நினைத்திருக்கிறார்கள்! தெரிந்ததா?"

"அவர்கள் நினைக்கிறபடி பார்த்தால், அவர்கள் செய்தது சரிதான்" என்றான் பாவெல்.

"ஆமாம் ஓநாய்கள் ஒன்றையொன்று கடித்துத்தின்பது அவைகளுக்குச் சரிதான்!"

ரீபினுடைய முகம் இருண்டது; அவனது குரலில் அசாதாரணமான உத்வேகம் தொனித்தது.

"மக்கள் வெறும் வார்த்தைகளை மட்டும் கேட்கமாட்டார்கள்; பட்டால்தான் தெரியும். உன் வார்த்தைகளை இரத்தத்தில் தோய்த்தெடுக்க வேண்டும், பாவெல்...."

அன்று முழுதும் பாவெல் களைப்போடும், சோர்வோடும் மனச்சஞ்சலத்தோடும்தான் உலவித் திரிந்தான்; அவனது பிரகாசமான கண்கள் எதையோ தேடித் திரிவதுபோலத் தெரிந்தன. தாய் இதைக் கண்டு கொண்டாள்.

"என்ன விஷயம், பாஷா!" என்று ஜாக்கிரதையோடு கேட்டாள்.

"தலை வலிக்கிறது" என்றான் பாவெல்.

"படுத்துக்கொள். போய் வைத்தியரை அழைத்து வருகிறேன்."

"வேண்டாம், வீணாய்ச் சிரமப்படாதே" என்று அவன் அவசரப்பட்டுப் பதில் சொன்னான். பிறகு அவன் தாயிடம் அடிமூச்சுக் குரலில் சொல்ல ஆரம்பித்தான்:

"நான் மிகவும் இளையவன்; மிகவும் பலவீனமானவன். அது தானம்மா தொல்லை! அவர்கள் என்னை நம்பவில்லை; என் கொள்கையை ஏற்கவில்லை- அதாவது- என் கொள்கையை அவர்களுக்கு எப்படி எடுத்துச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. அம்மா, என் மனம் நொந்து போய் விட்டது; எனக்கு என்மீதே கசப்பேற்பட்டுவிட்டது!"

அவனது சிந்தனை தேங்கிய முகத்தைக் கூர்ந்து பார்த்தாள் அவள்; பிறகு அவனைத் தேற்ற முனைந்தாள்:

"கொஞ்சம் பொறுத்திரு" என்று மெதுவாகச் சொன்னாள்; "இன்றைக்கு அவர்கள் தெரிந்து கொள்ளாது போனதை நாளைக்கு நிச்சயம் தெரிந்து கொள்ளத்தான் போகிறார்கள்."

"அவர்களுக்குத் தெரிந்துதான் ஆக வேண்டும்!" என்றான் பாவெல்.

"நீ சொல்வதுதான் சரி என்பது எனக்குக்கூடத் தெரிகிறது."

பாவெல் தாயருகே நெருங்கிச் சென்றான்.

"அம்மா, நீ ஒரு அற்புதப் பிறவி....." என்று கூறிவிட்டுத் திரும்பி நடந்தான். அந்த மென்மையான வார்த்தைகளால் சூடுபட்டவள் போலத் துணுக்குற்ற அவள், கைகளால் இதயத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு, அதனுடன் தன் மகனின் பரிவுணர்ச்சியையும் சுமந்து கொண்டு, அங்கிருந்து வெளியேறினாள்.

அன்றிரவு அவள் படுத்துத் தூங்கிய பிறகு, பாவெல் படுக்கையில் படுத்தவாறே ஏதோ படித்துக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில், போலீஸ்காரர்கள் வந்துசேர்ந்தார்கள். வீட்டிலுள்ள சகல சாமான்களையும் தாறுமாறாக இழுத்தெறிந்து சோதனை போட்டார்கள். கூரை மீதும், வெளி முற்றத்திலும் தேடினார்கள். அந்த மஞ்சள் மூஞ்சி அதிகாரி முன்னொரு முறை வந்தது போலவே, இப்போதும் அவர்களது இருதயங்களைத் தொட்டுத் துன்புறுத்தும் குத்தலான கிண்டலும், குறும்புத்தனமான சிரிப்பும் வெடிக்க, வந்து சேர்ந்தான். தன் மகனது முகத்தின் மீது பதிந்த பார்வையை அகற்றாது, அமைதியாக ஒரு மூலையிலே முடங்கி உட்கார்ந்து விட்டாள் தாய். அவனோ தனது உணர்ச்சிகளை வெளிக்காட்டிக் கொள்ளாமலிருக்க முயன்றான். என்றாலும், அந்த அதிகாரி சிரிக்கும் போதெல்லாம் அவனது கை விரல்கள் அவனையும் அறியாமல் முறுக்கிப் பிசைந்து கொண்டன; அவன் எதிர்த்துப் பேசாமல் வாயை அடக்கிக் கொண்டிருப்பதற்கு எவ்வளவு சிரமப்படுகிறான் என்பதையும், அந்தப் போலீஸ்காரனின் கிண்டல்களைக் கேட்டுக்கொண்டு சும்மா இருப்பது அவனுக்கு எவ்வளவு வேதனை தருகிறது என்பதையும் தாய் உணர்ந்து கொண்டாள். முதல் தடவை பயந்தது போல் அவள் இப்போது அவ்வளவாக பயப்படவில்லை. இந்தக் கொடிய அர்த்தராத்திரி விருந்தாளிகள் மீதுள்ள பகையுணர்ச்சி தான் அவள் உள்ளத்தில் வளர்ந்திருந்தது; அவளது பயவுணர்ச்சியை அந்தப் பகையுணர்ச்சி விழுங்கி விட்டது.

"அவர்கள் என்னைக் கொண்டுபோய் விடுவார்கள்" என்று அவளிடம் லேசாக முணுமுணுக்க முயன்றான் பாவெல்.

"எனக்குத் தெரியும்" என்று மெதுவாக, தலையைக் குனிந்து கொண்டே சொன்னாள் தாய்.

அன்று காலையில் அவன் தொழிலாளர்களிடம் பேசிய பேச்சுக்காக அவனை அவர்கள் சிறையில் போடத்தான் செய்வார்கள் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்; ஆனால் எல்லோரும் அவன் கூறியதை ஒப்புக்கொண்டார்கள்; எனவே எல்லோரும் அவனது விடுதலைக்காக விழித்தெழுந்து போராட வேண்டும்; அப்படிச் செய்தால் அவனை அவர்கள் அதிகநாள் சிறையில் வைத்திருக்க முடியாது...

தன் கைகளால் அவனை அணைத்து வாய்விட்டு அழ வேண்டும் என்று அவள் விரும்பினாள். ஆனால் அந்த அதிகாரியோ அவளுக்கு அருகில் வந்து நின்று ஓரக் கண்ணால் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். அவனுடைய மீசை துடித்தது, உதடுகள் நடுங்கின. அவன் நிற்கிற நிலையைப் பார்த்தால், கண்ணீரும் கம்பலையுமாகத்தான் கதறப்போவதை அவன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான் என்றே அவளுக்குத் தோன்றியது. அவள் தனது முழுப்பலத்தையும் சேகரித்துக் கொண்டு தன் மகனின் கரத்தைப் பற்றிப் பிடித்தாள்; மெதுவாகவும் அமைதியாகவும் திணறுகின்ற மூச்சோடும் பேசினாள்.

(தொடர்ந்து வரும்)

# ஒரு தலைக் காதல்



சத்துருக்கொண்டான்-கே.வின்சன்

அன்றுதான் அவளை முதன் முதலில் அம்மன் கோயிலில் திருவிழாவில் வைத்து சந்தித்தேன். சாதாரண அலங்காரத்தில் கூட அவள் நடிகை ரோஜா மாதிரியே இருந்தாள் என்றால் பாருங்களேன்.

என் விழிவீச்சில் சிக்கிய அவள் விழிகளுக்கு என்னை அறிமுகம் செய்திட வேண்டுமென என்மனம் உந்த, அவளுக்கு முன்னால் பல தடவைகள் நடைபோட்ட வண்ணமிருந்தேன். எத்தனை தடவைகள் அப்படிச் செய்தேனோ எனக்கு ஞாபகமில்லை. திடீரென இரண்டு முரட்டுக் கரங்கள் என்னை பற்றி இழுத்தன. அது எனது நண்பன் பயஸ் என்பதை நான் உணரும் முன்னரே "ஏன்ரா கபில், அடிக்கடி நீ ஏன் இப்பிடி சுடுதண்ணி ஊத்துப்பட்டவன் போல் ஓடித்திரியிறாய்? பார்த்துக் கொண்டிருக்கவே எனக்கு போரடிக்குதுடா."

கிண்டலான தொனியில் கூறும் பயஸின் குரலது.

"ஓ...ஸொரிடா ஒரே இடத்திலை இருக்க எனக்கு போரடிக்கிது. அதுதான் பூசை முடியும் வரையும் இப்படியே செய்து கொண்டிருக்கன்." ஆலயத்துக்குள் வைத்தே அபாண்டமான பொய்யொன்றை அப்படி அவனிடம் சொன்னேன். அவன் ஒரு மாதிரி. அவன் காதில் என் விசயம் பட்டு விட்டால் அவ்வளவு தான். என்னை வெளியில் தலைகாட்ட முடியாதளவிற்கு பண்ணிடுவான். அதுதான் அப்படியொரு பொய்யைச் சொல்லி சமாளித்தேன்.

பூசையும் முடிந்தது. எங்கள் இரண்டு பேரையும் கூப்பிட்ட குருக்கள் ஐயா என்னிடம் விபூதியைத் தந்தார். அவளை நெருங்குவதற்கு இதுதான் சந்தர்ப்பம் என திட்டம் தீட்டிய நான் செயல்படத் துவங்கினேன். விபூதியை அவளிடம் கொடுக்கும் போது மென்மையான புன்னகையொன்றை உதிர்த்தேன். பதிலுக்கு செக்கச் சிவந்த அவள் உதடுகள் ஒன்றை ஒன்று விலகிக் கொள்ள மென்மையான புன்னகையொன்றை என் விழிகளுக்குள் பாய்ச்சினாள்.

'அட்டா அம்மன்கூட என்மேல் கருணை கொண்டுள்ளாள் போலும். என்மேல் இவளுக்கு நல்லதொரு அபிப்பிராயம் ஏற்பட அம்மன் தான் அருள் பண்ணியிருக்க வேண்டும். என் காதல் நிறைவேறினால் இந்த அம்மனின் ஆலயத்தில் தான் என் திருமணத்தை நடத்துவது.' இவ்வாறு என் மனசுக்குள் நினைத்துக் கொண்டேன்.

□□□

எனக்கு தலை போற வேலை இருந்தாலும் வெள்ளிக்கிழமை என்றால் குளித்து முழுகி கோயிலுக்குப் போவதை மட்டும் மறக்கமாட்டேன். அவளைப் பற்றி நானும் என்னைப் பற்றி அவளும் அறிமுகம் செய்து கொண்டோமே தவிர என் மனசுக்குள் உருவான காதலை அவளிடம் வெளிப் படுத்திவிட மட்டும் அவளோடு பழகிய இரண்டு ஆண்டுகளும் போதுமானதாக இல்லாமல் போயின.

'இந்தா வருகிற வெள்ளிக்கிழமை கோயிலில் நிண்டு வரையிக்குள்ள பிருந்தாவ நான் விரும்பும் செய்தியினை எப்படியாவது அவளிடம் எடுத்துச்சொல்லிட வேண்டும்.' என் மனசுக்குள் நினைத்துக்கொண்டேன். காத்திருந்த நாளும் பறந்து வந்தது. வழக்கமான பாதை வழியே நான் போய்க் கொண்டிருந்தேன். என்றுமில்லாதவாறு ஒரு வித சந்தோசம் என்மனதில் களை கட்டியது. என் காதல் இன்று அரங்கேறப் போகிறது என்ற சந்தோசத்தில் என் மனம் ஒரு சினிமாப் பாடலை அசைபோடத்துவங்கியது.

"கவிதை பாடு குயிலே குயிலே இனி வசந்தமே....

இளமை ராகம் இதுவே இது மிக இனிமையே...

உதயமானது புதிய கோலமே விழிகள் யாவிலும் வர்ணஜாலமே

நான் நினைத்த திருநாள் ஒருநாள் இதுதானே.........."

பாடல் வரிகள் முடிவதற்கிடையில் ஆலயமும் அண்மித்தது. கோயிலில் பூசை முடிந்து வரும் பொழுதில் என்னை விட பன்மடங்கு சந்தோசத்தில் பிருந்தா காணப்பட்டாள். அவளாகவே என்னருகில் வந்து.

"கபில் உங்களிடம் சந்தோசமான செய்தி ஒன்று சொல்லப்போறன்."

'அதைத்தான் நானும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கன்.' இவ்வாறு என்மனம் தான் சொன்னது.

"...ஆ கபில் வாற புதன் கிழமை பத்தாம் திகதி இந்த ஆலயத்திலே எனக்குத் திருமணம் நடக்க இருக்கு. கட்டாயம் நீங்க என்ர கல்யாணத்திற்கு வந்திடனும், இந்தாங்க வெடிங்காட். கார்ட்டை உங்க வீட்டுக்கு கொண்டுவரல்லையே என்று கோபிக்காதீங்க. இரண்டு வருடங்களாக என்னோட நீங்க இந்த அளவிற்கு பழக்கப்பட்டதனாலதான் இப்பிடி நடந்துக்கிட்டன். வரட்டுமா?"

கார்ட்டை என் கைக்குள் திணித்துவிட்டு என் பதிலுக்குக் கூட காத்திராது சிட்டாகப் பறந்தாள் பிருந்தா. என் மனம் நிறைய ஏக்கச்சுமை ஏற நான் சிலையாகிப்போனேன்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# உடம்புகள் விற்பனைக்கல்ல....

சிறுகதை

மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்



தெஹிவளைப் புகையிரத நிலையம் காலை நேரப் பரபரப்பில் இருந்தது.

எதிர்ப்பக்கமாய் பரந்து விரிந்திருந்த கடலையும், அதன் அலைகளில் யதார்த்தமாய் ஊடுருவி வரும் காலை நேர சுகந்தமான தென்றலையும் முகர்ந்து கொண்டு, ஆண், பெண் என இருபாலாரும் தத்தம் தேவைகளுக்கும் தொழில்களுக்கும் செல்வதற்காய் புகையிரதத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்க....

நேரம் ஏழு மணியைத் தாண்டிக் கொண்டிருந்த சொற்ப வினாடிகளில்... நானும் அதே புகையிரதத்தை எதிர்பார்த்தவனாய் நிலையத்துக்குள் நுழைகின்றேன். எனக்கும் வேலைக்குப் போகவேண்டிய அவசியமான அவசரம்.

அதிகாலையிலேயே எழுந்து முகச்சவரம் செய்து, குளித்து, உடை மாற்றி, தலை மயிரை சீவியும் சீவாமலும் (காலையுணவை ஆபீஸ் கென்டீனில் வைத்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் பதட்டமான மனநிலையோடு புகையிரதத்தை எதிர்பார்த்து நடையை எட்டிப்போட்டு வருவது எனக்கு வாடிக்கையாகிப்போனதொன்று. என்றாலும்...

இன்றைக்கு சிறிது தாமதித்து எழுந்து விட்ட அயர்ச்சியில்....

புகையிரதத்தை தவறவிட்டு விடுவோமோ என்ற ஐயத்தில்....

களுத்துறையில் இருந்து புறக்கோட்டையை நோக்கி காலை 7.10 மணிக்கு தெஹிவளையில் தரிக்கும் புகையிரதத்தைப் பிடிக்க... அவசரமாய்... டிக்கெட் கவுண்டரில் கியூவாகிப்போயிருந்த சனத்தோடு நானும் ஒருவனாய் நின்று டிக்கெட் எடுத்து... பிளாட்பாரத்துக்கு நகர்ந்தபோதுதான்.....

அனிச்சையாய் அவர்களைக் கவனித்தேன்.

அங்கிருந்த நாகரிகமானவர்களுக்கு மத்தியில் 'அவர்கள்' கொஞ்சம் வித்தியாசமானவர்களாய் இருக்க.... அவர்களின் பேச்சிலும் போக்கிலும் ஏதோவொரு சல்லடைத்தனமான அநாகரிகம் இருந்ததை நான் மட்டுமல்லாமல் அங்கிருந்த அனைவரும் உணரத்தான் செய்திருப்பார்கள்.

அவர்களாகிய அந்த அவனும் அவளும் எந்தவித லஜ்ஜையும் இல்லாமல் 'அது' பற்றி 'எக்ஸ்' தனமாய் கொஞ்சம் சத்தமாய் உரையாட-விவாதிக்க....

யதார்த்த பூர்வமான அவர்களது சம்பாஷணைக்கு வருவதற்கு முன்னால்.... அவர்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லியாக வேண்டும்.

வெள்ளவத்தைக் கடற்கரையோரமாக அமைந்துள்ள புகையிரத தண்டவாளத்தையொட்டி தெஹிவளை, கல்கிசை, மொரட்டுவ, பாணந்துறை என்று தொடரும் கடற்கரையோரங்களில்... நாட்டுப்புறத்தவர்கள்போல் நாகரிகம் தெரிந்தும் தெரியாதவர்களாக- வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்க்கையை ஓட்டும் பாமரத்தனமான மீனவர்கள் தத்தமக்கு ஏற்றால்போல் குடிசைகளையும், பலகை வீடுகளையும் கடற்கரையோரமாய் அமைத்துக்கொண்டு வாழ்க்கை நடாத்துவதை இன்னமும் காணக் கூடியதாகவேயிருக்கிறது.

கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் நாகரிக முன்னேற்றமும், வாழ்க்கை அபிவிருத்தியும் ஏற்பட்ட போதும்.. அந்த ஏழை மீனவர்களது வாழ்க்கை மட்டும் விடியாமலேயே இருப்பது புதிராகிப்போன தொன்றாகும். மாலை ஆறு ஏழு மணிக்கு இந்தக் கடற்கரையோரங்களில் காற்று வாங்கப் போகிறவர்கள்... தூரத்தே கடலில் தென்படும் பொட்டுப்பொட்டான வெளிச்சங்களைக் காண முடியும். காரணம் கேட்டால் பாமர மீனவர்கள் இரவு முழுக்கத் தூக்கம் விழித்து... வலை வீசி... கச்சால் கட்டி மீன் பிடிப்பதாகச் சொல்வார்கள். உப்புக் குளிர் காற்றோடு இரவுகள் அவர்களுக்கு விடிந்துகொண்டேயிருக்க, அவர்களது வாழ்க்கை மட்டும் விடியாமல்....

எப்படியோ....

கஷ்டங்களிலும் வேதனைகளிலும் அயர்ச்சியுறாமல் சாராயம், கஞ்சா, பீடி என்று போதை சமாச்சாரங்களுக்கு பழக்கப்பட்ட அந்த மீனவ உழைப்பாளிகளின் வாழ்க்கையில் பெண்களும் ஒரு பொருட்டல்ல, இரவுக்கு ஒரு பெண்ணென்று வயது வித்தியாசமாய், நிறங்கள் வித்தியாசமாய், அளவுகள் வித்தியாசமாய் அவர்கள் வாழ்க்கையில் பெண்கள் வந்து போவதுண்டு.

விகாரத்தனமாய்த் தோன்றினாலும் ஒரு வித்தியாசமான வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்க....

இந்த அதிகாலை நேரத்தில் , அதுவும்... பொதுமக்கள் கூடும் புகையிரத நிலையத்தில்.. அவனும் அவளும் தர்க்கிப்பதில் இருந்து.. அவர்களுக்கு மத்தியில் ஏற்பட்டதொரு இரவு நேர உடல் வியாபாரத்தில் ஏதோ கணக்குத் தகராறாய் பணப் பிரச்சினையே காரணம் என்றிருக்க...

அவள்!

இருபத்திரண்டு வயதுக்குள், ஐந்தரையடி உயரத்தில், கொஞ்சம் மாநிறமாய் இருந்தாள். அங்கங்கள் செழிப்பாய் வளர்ந்து (அழுக்குப் படிந்த ஆடைகளுடன்) உடம்பில் திட்டுத் திட்டாய் அழுக்குப் படிந்திருக்க...

அவனோ முப்பது வயதுகளையும் கடந்திருந்தான். நெடு நெடுவென்ற உயரத்தில்... போதைகளின் பாவனையில்- பேதைகளின் சங்கமிப்பில்.... கன்னங்களும் கண்களும் உள்ளே இடுங்கிப்போய், தலைமயிர் செம்பட்டை தட்டி.....உடம்பு மெலிந்து... பீடிப்புகைக்கு உதடுகள் கறுத்துத் தடித்து... அவனிலும் திட்டுத் திட்டாய் ஒருவகையான அழுக்குப் படிந்துபோய்...

அவள் சொன்னாள்.

"மார்டின்...பெரேரா நே மம சில்வாத் தெக்க கியா. உதேவெனகங் ஹிடியா... ஏத் தவம மட சில்வா சல்லி துன்ன நே..."

(அவர்களது சிங்கள மொழி உரையாடலைத் தமிழில் தருகிறேன்)

"மார்டின்... நான் முந்தா நாள் இரவு சில்வாவுடன் போய்... காலை வரைக்கும் அவனுடனேயே இருந்தேன். ஆனா.... சில்வா எனக்கு இன்னும் பணம் தரல்ல.."

அவன்-அந்த மார்டின் மௌனமாக இருந்தான்.

புகைத்துக்கொண்டிருந்த பீடியை தூரமாக எறிந்தான்.

அவளே சொன்னாள்.

"இதற்கு முன்னமும் இரண்டு மூன்று ராத்திரிகள் அவனுடன் போயுள்ளேன். அப்பவும் பணம் பாக்கி வெச்சிருக்கான். மோசமான ஆளு.... இதன் பிறகென்றால் ஜென்மத்துக்கும் அவனுடன் போக மாட்டேன்." அவள் சலித்துக்கொள்ள...

அவன் சொன்னான்.

"சீச்சீ.... சில்வா பணவிஷயத்துல கொஞ்சம் ஒரு மாதிரித்தான்."

அவள் கோபமாய்ச் சீறினாள்.

"நீ மட்டும் என்னவாம்...நேற்று ராத்திரி உன்னுடன் இருந்ததற்குப் பணம் தந்தியா?"

"ஏன்.... ஐம்பது ரூபா தந்தேன் தானே..."

"ஐம்பது ரூபா தந்தே... ஆனால் நீ பொருந்தினது எழுபத்தைந்து ரூபா. அப்போ மற்றைய இருபத்தைந்து ரூபாவும் எங்கே?"

அவன் இலேசாய் நெளிந்தான்.

"அந்த பாக்கியை அடுத்தமுறை வாங்கிக்க..."

"அடுத்த முறை வாங்கிக்க.... நானென்ன மளிகைக் கடையா வெச்சி நடாத்திறேன். இந்த மாதிரி வியாபாரத்துல நியாயமா நடந்துக்கணும்."

"உண்ட மாதிரிக்கு ஐம்பது ரூபாவே அதிகம்தான்!"

அவனது வார்த்தைகளில் அவள் உஷ்ணமாகிப்போனாள்.

"ஏன்... பிச்சைக்காரக் காசு ஐம்பது ரூபாவை தூக்கிட்டு என்னிடம் வந்தே? உனக்கு பொண்ணு சுகம் வேணும்னா... வேறொரு அவிசாரியிடம் போறது தானே? பத்து ரூபாவுக்குக்கூட முந்தானை விரிப்பாளுக..."

"நீயே வந்து என்னைக் கூப்பிட்டதாலதான் வந்தேன்!"

அவன் சொல்லவும் அவள் மௌனமாகிப்போனாள்.

அவள் மீண்டும் வார்த்தைகளை இழுக்க...

"உடம்பு சுகம் தேவைப்பட்டவங்களுக்கு உன் உடம்பை விற்பனை செய். எனக்கு உன் சுகம் தேவைப்பட்டால் நான் பணம் தந்து உன்னைக் கூப்பிடுறேன். தவிர- நீ உன் தேவைக்காக- சுகத்துக்காக என்னைக் கூப்பிட்டே... வந்தேன். பணமும் தந்தேன். நியாயமாகப் பார்த்தால் கூப்பிட்டது நீ என்கிறதனால நீதான் எனக்குப் பணம் தரணும்."

அவனது அந்த வார்த்தைகளில் அவள் அதிர்ந்தாளோ-அங்கிருந்தவர்கள் அதிசயித்தார்களோ இல்லையோ நான் அதிர்ந்து சிலிர்த்துப்போனேன்.

நான் மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

'காலம் மாறிப்போச்சு!"

கூடவே, மெல்ல முணுமுணுத்தேன்.

"உடம்புகள் விற்பனைக்கல்ல...

சிந்திக்க ஆரம்பித்தேன். ●

---

# காயாவின் காதல்



காயாவின் காதல்

செ.திவாகரன்-பாண்டியூர்

"அக்கா... அக்கா" அவசர அவசரமாக படுக்கையிலிருந்த காயாவை எழுப்பினாள், அவள் தங்கை ரூபா.

"என்னடி காலையிலே கழுத்தறுக்கத் தொடங்கியாச்சா?" என தங்கையை முறைத்தவாறு, படுக்கைக்கும் விடுதலை கொடுத்தவாறு, அவளை எரிச்சலுடன் பார்த்தாள் காயா.

"நல்ல சேதி சொல்ல விடமாட்டியே. உன் பின்னால நாயா அலைஞ்ச நரேன் நஞ்சு குடிச்சு செத்துப் போயிட்டா னாம். உன்னைப் பிடிச்ச சனி இன்னியோட தொலைஞ்சுது" கல கலவென்று சிரித்தவாறு குளியலறையை நோக்கி ஓடினாள் ரூபா.

சற்றும் எதிர்பாராத செய்தியால் அப்படியே ஸ்தம்பித்து விட்டாள் காயா. காலைக் குளிரையும் மீறி அவள் தேகத்தில் வியர்வை தன்னாட்சியினைக் கைப்பற்றியது. உள்ளம் பயத்தாலும், பலவீனத்தாலும் நடுங்கிக் கொண்டிருந்தது. கண்கள் குளமாக, உதடுகள் 'நரேன்' என துடிக்க, செயலற்றுப் போனவள் மீண்டும் படுக்கையில் வீழ்ந்தாள். வாய் விட்டு அலற வேண்டும் போல் ஒரு பிரமை.., ஆனால் வீட்டில் அவ்விதம் அழ முடியாது. நரேனின் நினைவுகள் அவள் நெஞ்சச் சுமையினை அதிகரிக்கச் செய்ததும் கடந்த கால நினைவுகள் மனத்திரையில் உதயமாகின.

நரேனும் காயாவும் ஒன்றாகவே கல்வி பயிலும் மாணவர்கள். ஆனாலும் காயா எந்த ஆண்களுடனும் கலகலப்பாக கதைப்பதுமில்லை; பழகுவதுமில்லை. இது அவள் சுபாவம் என்பதை விட, அவள் தாய் மரகதத்தின் கண்டிப்பான உத்தரவு எனலாம். நாகரிக யுகத்தில் அவள் அவ்விதம் ஒரு கண்டிப்பை விதித்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியந்தான்.

காயாவின் இயற்கைத்தனமான அழகு, அடக்கம் யாவும் நரேனை வெகுவாகக் கவர்ந்தன. மனதில் அவளையே சகலதுமாகப் பிரகடனப்படுத்தியிருந்தான் அவன். அவள் மீதுள்ள காதலை துணிவாக வெளிப்படுத்திய போது,

"மன்னிக்கணும்" என ஒரே வார்த்தையில் முடித்துக் கொண்டாள் காயா. அவள் தன் காதலை ஏற்கவில்லை என்பது தெரிந்ததும் துவண்டு போனான் நரேன்.

ஆனாலும் அவளை இதயத்திலிருந்து ஒதுக்க மட்டும் அவனுக்குத் துணிவு வரவில்லை. அதனால் அவளைப் பின் தொடர்ந்தான். பாடசாலை, ரியூட்டறி என அவள் எங்கு சென்றாலும், அவளின் நிழலானான் நரேன். அவள் சற்றும் வளைந்து கொடுக்கவில்லை அதனால் சில நண்பர்களை காதல் தூதுவர்களாக்கினான் நரேன். அதன் மூலம் நரேனின் நல்லன்பினை புரிந்து கொண்ட அவள் மனது இலேசாக சலனப்பட்டது. தன் விருப்பத்தை சொல்லி விட வேண்டுமென்று நினைத்த மறுகணமே, காயாவின் மனதில் கண்டிப்பு நிறைந்த தாயின் முகம் தோன்றிப் பயமுறுத்தியது.

நரேன் மீதுள்ள காதலை சொல்லவும் முடியாமல், மனதில் பூட்டி வைக்கவும் முடியாமல் மிகவும் வேதனைப்பட்டாள் காயா. 'சொல்வதா' சொல்லாமல் விடுவதா? ஒரே குழப்பகரமான நிலை.

பதிலின்றி அவளிதயம் வினாக்களை எழுப்பியபடியே வேதனைப்பட்டது. முதல் முறையாக தாய்க்குப் பயந்து வாழும் தன்னையே நொந்து கொண்டாள் அவள். நொந்து என்ன பயன்? அவள் தாய்,

"உன் பின்னால நரேன் எங்கிறவன் சுத்துறானாமே?" அமைதியாக ஆனால் அழுத்தமாக கேட்ட போது,

"சத்தியமா எனக்கு விருப்பமில்ல, அவன்தான் நாயா அலைகிறான்." என அடித்துக் கூறிவிட்டாள். 'நரேன் மீது அளவுக்கதிகமான அன்பும், கட்டுக்கடங்காத காதலும் கொண்ட என்னால் எப்படி அம்மாவிடம் போலிச் சத்தியம் செய்து கொடுக்க முடிந்தது' கேவிக் கேவியழுதாள் அவள். 'இக்குழப்பத்திலிருந்து மீள என்னதான் வழி?' நினைத்த அவள் மனதில் விடை தொலை தூரத்தில் இருப்பது போல் தோன்றவே, தன் நண்பி ஒருத்தியுடன் நரேனை இழிவாகப் பேசித் திட்டி அவனிடம் கூறும்படி அனுப்பினாள்.

□□

நரேனின் அப்பாவுக்கு கொழும்புக்கு வேலை மாற்றலாகவே, அவர்கள் குடும்பத்தோடு கொழும்பிற்கு சென்று விட்டார்கள். இத்தோடு அவனின் பிரச்சனை முடிந்து விட்டதென்று நினைத்தாள் காயா.

நேற்றுக் காலை அலுவலகத்திற்குள் டைப்படித்துக் கொண்டிருந்தவளிடம், பியூன் வந்து "உங்களை நரேன் எங்கிறவர் பார்க்க வந்திருக்காரம்மா."

நரேனா..? அஞ்சு வருஷத்திற்கு முந்தி கொழும்புக்குப் போன நரேனா...?' அவனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல், பரவசம் காயாவின் காதல் நெஞ்சம் மகிழ்வில் துள்ளியது. 'இப்போது கல்யாணம் கட்டியிருப்பாரோ? ச்சீ... கட்டியிருக்க மாட்டார். ஒரு வேளை கட்டியுமிருக்கலாம் நான்தான் அவர் அன்பை உதறித் தள்ளி விட்டேனே' மனம் கலங்க வாசலுக்கு விரைந்தாள். அங்கே, சோகமேயுருவான வண்ணம் நின்றிருந்தான் நரேன்.

"காயா இப்போதும் காலம் கடந்து விடவில்லை. உன் சம்மதத்தை சொல்லி விடு" கெஞ்சிக் கேட்டான்.

'சொல்லி விடலாமா? ஐ லவ் யு நரேன்' என நினைத்த போதே, தாயின் முகம் குறுக்கே வந்தது. சடுதியில் மனதை கல்லாக்கிக் கொண்டவள்.

"எனக்கு இதெல்லாம் பிடிக்காது. அம்மா முடிவு செய்யும் கல்யாணத்தைத்தான் கட்டுவேன். இங்கிருந்து போயிடுங்க." அவள் முகத்தை ஆழமாகப் பார்த்து விட்டு அங்கிருந்து வெளியேறினான் நரேன்.

சுய நினைவுக்குத் திரும்பிய காயாவின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல என்று வழிந்தது.

"புள்ள குமார் வந்திருக்கான்" தாயின் குரல் கேட்டு எழுந்து கொண்டவள், அவசரஅவசரமாக முகத்தைக் கழுவிக் கொண்டு வரவேற்பறைக்குள் நுழைந்தாள்.

"காயா உங்க மீதுள்ள அன்ப புரிய வைக்க நரேன் பல வழியில் முயற்சித்தான், ஆனா நீங்க புரியல: இப்பவாவது உங்களுக்குப் புரிஞ்சிருக்கும். நேற்றிரவு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் போது, இந்த லெட்டரையும் குங்குமச் சிமிழையும் தந்தான்" நரேனின் ஆருயிர் நண்பனாகையால் அவனுடைய குரல் துன்பத்தால் கரகரத்தது. நடுங்கும் விரலோடு கடிதத்தைப் பெற்றுக்கொண்டவள், மெதுவாகப் பிரித்தாள்.

**காயாவிற்கு,**


**உன் திருமணப் பரிசுதான் இக் குங்குமச் சிமிழ். என்னைத்தான் ஏற்றுக் கொள்ளவில்லை. என் பரிசையாவது....?**

நரேன்

குங்குமச் சிமிழை பெற்றுக் கொண்ட காயா "ஐ லவ் யு நரேன்" என பிரபஞ்சம் அதிரும்படி வீறிட்டழுதாள். ●

---



பையன்: இந்தக் கடிதத்தை எங்க அக்கா உங்களிடம் கொடுக்கச் சொன்னா.

அவன்: நன்றி. இன்னொரு கடிதம் வைத்திருக்கிறாயே. அது யாருக்கு?

பையன்: அது எங்க அண்ணன் உங்க தங்கச்சிக்கு கொடுக்கச் சொன்னது.

## வாசகர் கவனிக்க

முரசிற்கு வரும் ஆக்கங்கள்-கதை, கவிதைப்போட்டி, பேனா நண்பர், குறுக்கெழுத்துப் போட்டி, புகார் பெட்டி, தேன் கிண்ணம் எல்லாவற்றையும் கீழ்வரும் த.பெ.இலக்கத்திற்கு மட்டும் அனுப்பி வைக்கவும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

Thinamurasu Varam
P.O.BOX. NO-1772
COLOMBO.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இலக்கிய நயம்





தருவது ரசிகன்

# அழுதாலும் தீராது

சிவப்பான வாயிதழ்கள் மலர சேயிழையாள் புன்னகைத்தாள்.

விரித்து வைத்த வலையில் வசமாக சிக்கிவிட்ட புலியைப் போல அவள் புன்னகையில் மணிமாறன் சிக்கிப் போனான்.

"சிரிக்காதே அப்படி, என்னை சிறைபிடித்து வதைக்காதே இப்படி."

என்றான் மணிமாறன். தன் அழகு அவனை தடுமாற வைக்கிறது என்று அறிந்து மகிழ்ச்சிதான் அவளுக்கு.

தான் ஒருத்தி மட்டுமே அவனியிலே அழகென்று தன்னவனால் புகழப்பட பெண்ணுக்கு உள்ளூர உவகை வரும்.

உள்ளூர உவகை வர வதனத்தில் வெட்கம் வந்துதிக்கும். அவளுக்கும் வெட்கம்தான்.

பக்கத்தில் நின்ற அவன் கரம் நீட்டி அவளை தன்னோடு நெருக்கிக் கொண்டான்.

அவள் மணிவயிற்றில் உள்ளங்கை பதிய நோகாமல் வருடிக்கொண்டு,

" இன்னும் எத்தனை மாதங்கள் கண்ணும், கருத்துமாய் காத்திருக்க வேண்டும் என் கண்மணியைக் காண்பதற்கு?"

என்று கேட்டான்.

"ஐயிரண்டு மாதங்கள் அமைதி காத்தால் போதும். அதற்குள்ளே அவசரமோ?"

வெட்கத்தோடு கலந்து விடை சொன்னாள்.

"உன் நெஞ்சத்திலும் எனது உயிர். வயிற்று மஞ்சத்திலும் எனது உயிர். இப்போது உன்னிடம் இருப்பதுவோ எந்தன் இரண்டு உயிர்."

அவள் காதுமடலை உதடுகளால் ஒற்றிக்கொண்டு அவன் சொல்ல, அவள் நெகிழ்ந்து, முகம் திருப்பி மணிமாறன் கன்னத்தில் முல்லையிதழ்கள் விரித்து முத்திரை பதித்திட்டாள்.

"முதல் முத்தம் போலவே இந்தப் பகல் நீ தந்த முத்தமும் மோகத்தை பொழிகிறதே. சாகும் வரை சலிக்காது, தந்துகொண்டே இருக்கலாம் நீ; உந்தன் இதழ்களுக்கு வலிக்காது என்றால்."

"ஆசைதான். விவஸ்தையேயில்லை அத்தான் உங்களுக்கு."

"விவஸ்தை இல்லையோ இருக்கிறதோ நான் அறியேன். அருகே நீயிருந்தால் அவஸ்தையென்றால் என்ன அர்த்தம் என்று மட்டும் தெளிவாக அறிவேன் நான்."

என்றுரைத்தான் மணிமாறன்.

"அருகே நான் இல்லாவிட்டால்?"

"அப்போதும் அவஸ்தைதான்."

"அது என்ன அவஸ்தை?"

"வேலையிலே இருக்கும் போதும் உன் அருகே வரும் வேளையெப்போ வரும் என்ற அவஸ்தை அது."

"பொய்தானே?"

"முற்றும் மெய்!"

"நான் இல்லாது ஆகிவிட்டால்?"

மணிமாறன் உடல் பதறி அவள் இதழ்களை கரத்தால் மூடி, "விளையாட்டாய் நினைத்துக் கொண்டு வேல் பாய்சும் வார்த்தையிது!நீ நானாகிய பின் நீயில்லை என்றால் முடிவென்ன மடிவன்றோ."

இப்போது அவள் துடித்தாள். அவன் உதடுகளை தன் பசும்தளிர் விரல்களால் மூடினாள்.

விரல்களை விலக்கிவிட்டுச் சொன்னான் மணிமாறன்;

"விரல்களால் தொட வேண்டாம்."

"ஏன் தொட்டால் தோசமோ?"

"இல்லை மோசம்!"

"மோசமா?"

"என் உதடுகளைத் தொடத் துடிக்கும் உன் இதழ்களுக்கு உன் விரல்களே எதிரிகளானால் அது மோசம்தானே!"

"......சீ போங்கள்..."

என்றாள், அவன் மார்பில் வலிக்காமல் குத்திவைத்தாள்.

அவன் அவளைத் தன்னோடு ஒற்றிக் கொண்டான்.

படகிலே தோழியோடு ஆற்றைக் கடக்கையிலும் அவளுக்குள் நேற்று முழுக்க அவன் செய்த குறும்புகள்தான்.

அவருக்குத்தான் என்மீதில் எத்தனை பிரியம்?

மனதுக்குள் ஆற்று வெள்ளம் போல் மகிழ்ச்சி வெள்ளம்.

"என்னடி சிந்தனை? நீ இருப்பது படகிலடி பள்ளியறையில் அல்ல"

"போடி கள்ளி!"

"யார் கள்ளி? இதழ் கள்ளைக் கொடுத்து இரவை உனக்காக கொள்ளையடிக்கும் கள்ளியடி நீ!"

தோழி சொன்னதின் பொருள் புரிந்து, பொய்க் கோபத்தோடு முறைத்தாள் அவள்.

கேலியும், சீண்டலுமாய் தொடர்ந்திட்ட பயணத்தை இயற்கை பொறுக்காமல் நோக்கியதோ? சுழியோ, பலர் சொல்லும் விதியோ படகு கவிழ்ந்தது ஆற்றின் மடியில்.

அவளும்-தோழியும் ஆற்றுக்குள் விழுந்து காணாமல் போயினர்.

▫▫

ஆற்றுக்குள் வீழ்ந்து கரைக்கு வந்து ஒதுங்கிய போதுதான் பேரழகிகள் இருவரும் பிணமான செய்தி ஊரெங்கும் சென்றது.

வேலை முடித்து இல்லாளைக் காணும் எண்ணத்தில் மிதந்து மணிமாறன் கால்கள் விரைந்து வந்தன.

'எப்படிச் சொல்வது?'

அயலவர் தயங்கினர். ஒருவர் முன்வந்து இடியெனத் தாக்கும் செய்தியை அவன் செவியினில் போட்டார்.

வானம் அழிந்ததோ, வையகம் அவிந்ததோ, என் வசந்தமே தொலைந்து போனபின் வானம் அழிந்தாலென்ன, வையகம் அழிந்தால் என்ன?

கருவிலே புது உயிர்; அது விரைவில் பூமிக்கு வந்து புது முகம் பூமுகம் காட்டும் என்று கனவினில் மிதந்தேனே, ஓருயிராய் வாழ்வோம் என்றாளே, இப்போது ஈருயிரும் கொண்டன்றோ போனாளே"

கலங்கினான். கதியற்றுப் போய் நின்று கதறினான்.

ஆறுதல் சொல்லினர் அயலவர் யாவரும்.

தேறுதல் சொல்லினர் தெரிந்தவர் அனைவரும்.

வாழ்க்கையின் தத்துவம் சொல்லினர் உயர்ந்த வயதினர்.

ஆயினும் சோகம் தணியவில்லை தழைத்தது.

போனது உயிர் அல்லவா வெறும் கூடாய் தன்னை நினைத்து சோகத்தில் வெந்தது மனது.

தாங்காத இழப்பு. தீராத சோகம்.

இதனைத்தான் பாரதிதாசன் கவிதையொன்றில் காண்கின்றோம் நாம்.

*பிறக்கமுடி யாதினிமேல் பெண் ஒருத்தி!*
*பிரிக்கமுடி யாதஉயிர் பொருளே! நெஞ்சம்*
*மறக்கமுடி யாதஎல்லாம் பேசி, இன்ப*
*வாழ்க்கை யெனும் கடற்கரையின் ஒட்டில் நானோ*
*சிறக்கஒரு முறையேனும் மூழ்க வில்லை!*
*சேயிழையே! தீங்கனியே அந்தோ நீதான்*
*இறப்பதுவோ! திருவிளக்கே இந்த வையம்*
*இறக்கவில்லை எனில் எனக்கிங் கென்ன வேலை?*

*வெண்ணிலவை எட்டி விட்டேன் என்றிருந்தேன்*
*விண்ணினின்று வீழ்ந்தேனே! தென்றல் காற்றின்*
*பண்ணமைந்த தமிழ்பொதிகை எனக்கே என்றேன்*
*பாழ்ங்கிணற்றில் தூக்கிஎறி யப்பெற் றேனே!"*

*பாரதிதாசன்*

*நன்றி-பாண்டியன்பரிசு.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல—94

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | |
| | ■ | | ■ | 4 | | |
| 5 | 6 | | ■ | | ■ | ■ |
| ■ | | ■ | 7 | | | 8 |
| 9 | | | | | ■ | |
| | | ■ | | ■ | ■ | |
| | ■ | 10 | | | ■ | |

### இடமிருந்து வலம்

01. நல்ல நிலம் பார்த்துஇவர் தொழில் நடத்துவார்.
03. இதற்குத் தான் இன்று மதிப்பு.
04. வாளுக்கு இது தேவை.
05. ஒட்டகத்தில் இது உண்டு.
07. திசைகளில் ஒன்று.
09. இது வந்தால் சிலருக்கு கண்ணீரும் வரும்.
10. விருந்தினரை இப்படியும் அழைப்பதுண்டு.

### மேலிருந்து கீழ்

01. இதற்குச் சிகிச்சை முக்கியம் .
02. காதல் போயின் இது என்றார் பாரதியார்.
03. இதுவும் பல ரகத்தில் உண்டு.
04. பலர் சேர்ந்தால் இது உருவாகும்.
06. வானத்தின் சமிக்கை.
07. இதுவும் வேகமாய்ப் பரவும்.
08. கலவரங்களில் இது சேர்ந்தால் அட்டகாசம்.
09. ஆதியில் தோன்றிய ஆண் என்கிறது பைபிள்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 01.04.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-94
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-92ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ■ | 1 கா | ப் | 2 பு | ■ | 3 நா | ள் |
| 4 ம | ல் | யு | த் | த | ம் | ■ |
| ■ | 5 ந | லி | த | ல் | ■ | 6 வ |
| 7 சோ | டை | ■ | ர் | ■ | 8 பி | று |
| ம் | ■ | தா | ■ | 10 பி | ர | மை |
| 11 ப | கி | ர | ங் | க | ம் | ■ |
| ல் | ■ | ம் | ■ | 12 ச | மா | தி |

குறுக்கெழுத்துப் போட்டி இல.92இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. செல்வி. என். வினோதினி, வெள்ளவத்தை.
2. செல்வி. பௌளருசியா, மல்வானை.
3. இ. துஷ்யந்தன், நீர்கொழும்பு.
4. எம். சைபுர், பொல்கஹவெல.
5. ராஜன் ராமன், பொகவந்தலாவ.
6. திருமதி. சபீனா சித்தீக், மூதூர்.
7. திருமதி. எஸ். ஷோபிகா, கொழும்பு -5.
8. ஏ. அன்சார், பாணந்துறை.
9. செல்வி. கே. கயல்விழி, மட்டக்களப்பு.
10. எவ்.சில்வெஸ்டர், சிலாபம்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா பதில்கள்

• அன்பின் சிந்தியா! யோகாசனப் பயிற்சி பற்றி என்ன நினைக்கிறீர்?

ந.மகேஸ்வரன்-கோட்டைக் கல்லாறு.

*உடலுக்கு பயிற்சி. உள்ளத்துக்கும் திருப்தி!*

▫▫

• சிந்தியா! காதலில் தோல்வியுற்றவர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?

சுல்பிகான்-மடவள.

*பெண்களுக்கு என்றால், வாடிப் போகாதீர்கள். ஆண்களுக்கு என்றால், தாடி வளர்க்காதீர்கள். சாதாரணமாகத் தாடி வளர்ப்பவர்கள் கோபிக்க வேண்டாம்.*

▫▫

• பெண்ணை விரும்பும் ஆணுக்கு ஒரு அறிவுரை கூற முடியுமா?

எம்.ஏ.நிஸ்தார்-வெளிமடை.

*அறிவுரையல்ல அறவுரைதான் கூறமுடியும். அந்தப் பெண்ணை ஏமாற்றாதீர்கள். "பெண் பாவம் பொல்லாதது" அறவுரை எப்படி?*

▫▫

• டியர் சிந்தியா! நீங்கள் ஜனாதிபதி ஆகியிருந்தால்?

நபாய்டீன் சீனத்துல் முபீனா-பண்டாரவளை.

*இப்படியான கேள்விகளுக்கு பதில் சொல்லும் அவசியம் ஏற்பட்டிருக்காது.*

▫▫

• ஆண்டு தோறும் தேர்தல் நடந்தால் யாருக்கு லாபம்?

எம்.மகேந்திரன்-இந்தகல.

*வாங்கிக்கொள்ளும் வாக்காளர்களுக்கு.*

▫▫

• சமாதானக் கதவு மீண்டும் மூடப்பட்டு விட்டதா?

இந்து-இரத்தினபுரி.

*திறந்தால்தானே மூடுவதற்கு.*

▫▫

• டியர் சிந்தியா! கண்ணீருக்கு பற்றாக்குறை ஏற்பட்டால் பெண்களின் நிலை என்னவாகும்?

ரமீனா அன்வர்-தெல்தோட்டை.

*முன்னேற்றமாகும்! அழுதுகொண்டிருப்பதுதானே அடக்குவோருக்கும்வசதியாக இருக்கிறது.*

▫▫

• முதியோரை மதிக்காது முறை கேடாக நடக்கும் இளைஞர்கள் பற்றி?

மனோ-ஹப்புத்தளை.

*வாலிபம் போனபின் தாமும் வருத்தப்படும்போது தவறு உணரப்படும்.*

▫▫

• தமிழினத்தின் தலைவிதியை நாங்களே தீர்மானிப்போம் என்கிறார்களே புலிகள்?

ர.வி.அப்துல் றகுமான்-ஏறாவூர்-06.

*எப்படியான தலைவிதியை என்பதுதான் முக்கியம்.*

▫▫

• நடிகைகள் சுயசரிதை எழுதத்தொடங்கினால்?

மு.கடாபி-ஹொரவப்பொத்தானை.

*பிரபலங்கள் பலரது குடும்பங்களில் பிரளயமே ஏற்படுமய்யா.*

▫▫

• கண்ணும் கண்ணும் சந்தித்தால் வருவது உண்மைக் காதல். அதே கண்ணும் கண்ணும் சந்தித்தால் பொய் காதலும் வருகிறதே என்ன செய்வது?

யாஸ்மின் றவுப்-புத்தளம்.

*தகுந்த கண் வைத்தியரை நாட வேண்டும் என்று அர்த்தம்.*

▫▫

• ஆனையிறவுப் பாதையை திறப்பது பற்றி?

ஏ.எம்.சீ.சம்றாஸ்-கற்பிட்டி.

*அந்த ஆண்டவனே வந்து அபிப்பிராயம் சொன்னாலும் செல்லாது. இதில் நான் சொல்லி என்னய்யா பயன்.*

▫▫

• நான் ஏ.ஆர்.றகுமானைக் காதலிக்கிறேன் நீர் என்ன நினைக்கிறீர்?

சிவலோக சுந்தரி-மட்டக்களப்பு.

*அங்கே வேறு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு தடப்புடலாக கல்யாணமும் நடந்தாச்சு சுந்தரி. சூ லேட்!*

▫▫

• 'தாய் மனசு' படம் ரூபவாஹினியில் இடை நிறுத்தப்பட்டது பற்றி?

ஆர்.சோதிநாதன்-கண்டி.

*தமிழ் பேசும் மக்களது பொறுமை மீது ரூபவாஹினிக்கு அதிகப்படியான நம்பிக்கை. எனினும் மீண்டும் ஒளிபரப்ப மனம் வந்ததற்கு நன்றி.*

▫▫

• என் அபிமான நடிகை ரோஜாவிற்கு எத்தனை வயசிருக்கும்?

பாத்திமா டில்ஷா-சாய்ந்தமருது.

*படைத்தவனே மறந்து போய் வந்து கேட்டாலும் நடிகைகள் மட்டும் வயதைச் சொல்லமாட்டார்கள் பாத்திமா.*

▫▫

• சிந்தியா மனித வாழ்வின் முடிவு எப்படியிருக்க வேண்டும்?

எஸ்.கண்ணன்-வவுனியா.

*நீரின் மேல் எழுத்தாக அல்லாமல்....*

▫▫

• பத்திரிகை உலகில் நீடித்து நிற்க என்ன தேவை?

பாஸீல்-நிக்கவெவ.

*உண்மை-உழைப்பு-வாசகர்களின் உள்ளன்பு.*

▫▫

• சமாதானத்தின் சின்னமான வெண்புறாவை காண முடியவில்லையே?

எம்.நிஸா முஸம்மில்-தொடம்வத்தை.

*இன்னும் விடியவேயில்லையே!*

▫▫

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 73

இவ்வாரம் (26.02.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:

நேற்றாகி இன்றாகி நாளையுமாய் நானிருக்க
நாராயணன் என்முன் நற்கீதை மூலத்தை
பார்த்தவனுக்கு ஓதுகிறான் போர்முனையின் நடுவினிலே!
பாரிலுள்ள மாந்தரவர் பல்லறிவைக் குடைகின்ற
வேதாந்த சாகரத்தை விளவுகின்ற வினாக்களுக்கு
நாதாந்தமாய் விளங்கும் நாயகனாம் கண்ணனவன்
தீதேதுமில்லாத தூய தெளிவாற்றலுடன்
போதனைபோல் புகட்டுகின்ற பாங்கதனைப் பாரீரோ!
மாகடல் சூழ் மாநிலத்தில் மாநிடராய்த் தானுதித்தோர்
சோகவுருவாகிச் சோர்ந்திருக்கும் போதினிலே
வேதத்தின் போதனையே வேதனையை தீர்க்குமெனும்
கீதையதன் சாரமதை கிருபையுடனே உரைத்தான்!

-காட்சி தொடக்கம்-

குருச்சேத்திரம்– அர்ச்சுனன் தன் வில்லான காண்டீபத்தையும் அம்புறாத் தூணியையும் பார்த்துவிட்டு கிருஷ்ணனைப் பார்க்கிறான்.

**அர்ச்:** மாதவா எனது கைகள் இன்னும் காண்டீபத்தை ஏந்த ஆயத்தமாகவில்லை. இந்தப் போரினால் கிடைக்கப் போகும் பலாபலன் என்ன வென்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லையே!

**கிருஷ்:** ஓ குந்தியின் மைந்தனே! லாபமும் நட்டமும் நெருங்கிய தொடர்புடைய வார்த்தைகளே! உலக பந்தங்களில் மூழ்கித்திளைக்கவோ சொர்க்கத்தின் சுகத்தினில் மகிழ்ந்திருக்கவோ நாட்டம் கொண்டவன் நீ அல்ல என்பதை நானறிவேன்! ஆகவே வெற்றி தோல்வி, மகிழ்ச்சி துக்கம், லாப நட்டம் ஆகியவை பற்றி சிந்திக்காமல் மேலே எழுவாயாக!

**அர்ச்:** என்னால் எழுந்திருக்க முடியவில்லை கேசவா!

**கிருஷ்:** இதுவரை உளச்சான்றின் எதிரொலி களாகிய உண்மைகளை வாழ்க்கையி னூடாக ஞானம் மற்றும் உய்த்துணர்வு போன்றவை மூலம் உனக்கு விளக்க முற்பட்டேன். இதனால் நீ குழப்பமடைந் திருக்கலாம். ஆகவே இன்றைய உலக நியதிப்படி கடமையைப்பற்றி மட்டும் சீர்தூக்கிப் பார்! அதன்படி ஒரு முடிவுக்கு வா! அப்போது நீ இந்த யுத்தத்தில் ஈடுபடவேண்டும் என்ற தவிர்க்க முடியாத முடிவுக்கே வருவாய்!

**அர்ச்:** அந்த முடிவுக்கு வர முடியாதவனாக இருக்கிறேன் கேசவா!

**கிருஷ்:** தனிப்பட்ட வகையில் லாப நட்டங்க ளைப் பற்றி நீ அளவிடுவதனால் ஏற்படும் மயக்கம் இது. வெறும் மாயத்தோற்றத்தால் ஏற்படும் தடங்கல் இது. உனது துயரத்தின் அடிப்படையும் அதுவே! இத்தன்மை சமுதாயத்துக்கு நன்மையோ உனக்கு நன்மையோ தரப் போவதில்லை. நிகழ்காலத்துக்கோ எதிர்காலத்துக்கோ இது பலனளிக்கப் போவதில்லை. உரிய பணியைப் புரிவது நல்லொழுக்க வரம்புகளுக்குட்பட்டதே! சமுதாயத்துக்கும் ஏற்றதே! உன்னுடைய சொந்த நலத்துடன் சமுதாயத்துக்கான உன்பணியினை நீ இணைப்பாயானால் அது தூய்மை கெட்டு அசுத்தமடைந்து விடும். உன்னுடைய செயல்களுக்கான பலன் உன்னுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது என்பதனால் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம் தராமல் உனக்குரிய செயலில் இறங்குவாயாக! ஆகவே, பலனை எதிர்பாராமல் உன் கடமையைச் செய்!

**அர்ச்:** குறிக்கோள் ஒன்றில்லாமல் செயலெது வும் சாத்தியமாகுமா வாசுதேவா! குறிமீது கவனம் செலுத்தாமல் செயலால் ஈடுபட முடியுமா?

**கிருஷ்:** நீ எத்தகைய தீர்மானத்துக்கு வந்து உன்கடமையில் இறங்குகிறாயோ அத்து டன் உனது கடமை முடிவடைகிறது. அந்தச் செயலின் பலாபலனை நிர்ணயிக்கும் சக்தி உன்னிடமில்லை. நீ போரிட்டாலும் போரிடாவிட்டாலும் இப்போரின் பெறுபேறை உன்னால் தீர்மானிக்க முடியாது. வெற்றியோ தோல்வியோ உன்னுடைய தீர்மானத்தால் நடைபெறப்போவதில்லை. வெற்றியால் மகிழ்ச்சியோ, தோல்வியால் துன்பமோ படாதவனாகிவிட்டால் வெற்றியும் தோல்வியும் உன்னை எவ்வகையிலும் பாதிக்கப்போவதில்லை. ஏனெனில் போரிடுவதே உனது கடமை! இந்நிலை யில் நீ மனம் கலக்கமற்றவனாகி விடுகிறாய். உனது கடமையை நீ செய்! அது தான் உனது வேதம்! உலகில் சிறந்த வில் வீரனே! உன்னுடைய இலக்கு எதுவோ, அதன் மீது முழுக் கவனமும் செலுத்தி குறி வைக்க உனக்கு பூரண சுதந்திரமுண்டு! ஆனால், உன்னு டைய உரிமைகள் எல்லை கடந்து விடாமல் இருப்பதும் அவசியம்! உனது கர்மமாகிய கடமையையும் ஊர்ஜிதப் படுத்திக்கொள். ஏனெனில், உனது கடமையின் ஆற்றலே உனது தர்மம்!

**அர்ச்:** யோகம் எனப்படுவது என்ன கண்ணா?

**கிருஷ்:** யோகம் அல்லது தர்மம் என்பதுதான் உனது செயலாற்றல். போலித்தன்மை- மாயைகளைத் துறந்து கடமையிலீடுபட வேண்டும்! இதன் பூரணத்துவம் வெற்றி அல்லது தோல்வி ஆகிய எதிலுமே பாதிப்படையாதிருத்தலாகும்!

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை- அமைதியற்ற நிலையில் மன்னர் தடுமாறுகிறார்.

**திருத:** சஞ்சயா....! சஞ்சயா.....! உன்னுடைய குரல் அர்ச்சுனனுடைய காதுகளுக்கு எட்டுமானால், அந்த வாசுதேவனுடைய வார்த்தைகளை நம்ப வேண்டாம் என்று அந்த அர்ச்சுனனுக்குக்கூறு. பார்த்தாயா? அன்று சமாதானத் தூதுவனாக எம்மிடம் வந்த அந்தக் கிருஷ்ணன், இன்று சமாதானம் பற்றி அர்ச்சுனனிடம் ஒரு வார்த்தை தானும் கூறவில்லையே! "திருதராட்டிரனிடம் சமாதானத் தூது போனேனே-அவன் அதனை ஏற்க மறுத்து விட்டான்" என்று வரலாறு என்னைத் தூற்ற வேண்டும் என்றே அந்தத் தேவகி மைந்தன் நாடகமாடி யுள்ளான் பார்த்தாயா? எம்மைப் பழி வாங்குவதற்காகவே அவன் திட்டமிட்டுப் பணி புரிகிறான்.

**சஞ்ச:** பழி வாங்கும் எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை மகாராஜா! குந்தியின் மைந்தருக்கு கிருஷ்ணர் கர்மயோகத்தின் உண்மைகளை விளக்குகிறார்.

**திருத:** என்ன...என் மீது உனக்குள்ள பற்றும் அப்பக்கம் சார்ந்து விட்டதோ?

**சஞ்ச:** நடக்கும் சம்பவத்தை உணர்ந்து தங்களுக்கு உரைக்கிறேனே தவிர எனது பற்றோ, தங்கள் மீதுள்ள விசுவாசமோ இடம்மாறவில்லை பிரபு!

**திருத:** சரி கர்மயோகம் பற்றிய வியாக்கி யானங்களை விடுத்து, அவர்கள் இரு வரும் என்ன செய்கிறார்கள்- என்ன பேசுகிறார்கள் என்பதை மட்டும் கூறினால் போதும்!

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்.

**அர்ச்:** ஓ கேசவா! ஒரு மாமுனிவரை- தவசிரேஷ்டரை எவ்வாறு இனங்காண முடியும்? அவர் எவ்வாறு நடமாடுவார்?

**கிருஷ்:** தவசிகளை அடையாளம் காண்பது கடினமானதொன்றல்ல. நீயே உன்னு டைய ஆசாபாசங்களைத் துறந்து இன்ப துன்ப உணர்வுகளால் மயங்காமல், எவற்றிலும் பற்றற்றவனாகவும் நடுநிலை தளம்பாதவனாகவும் வாழத் தடைப்பட்டால் அந்த நிலையினை அடைந்து விடுவாய்! துறவியின் வார்த்தைகள் இன்ப துன்பங்களைக்கடந்து ஆன்மீகத்தோடு இணைந்து ஆழமானவைகளாகவே இருக்கும். போலித்தனமான மயக்கங்கள் பற்றி துறவி பேசமாட்டான். ஓர் ஆமை தனது தலை, கால்-கைகள் ஆகியவற்றை தனக்கு வேண்டிய நேரம் உள்ளே இழுத்துக் கொள்வது போல் தனது ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றவனாக ஒரு துறவி இருப்பான். சாதாரண மனிதன் தனது புலன்கள் இழுக்கும் போக்கிலேயே போய்க் கொண்டிருப்பான். இதனால் ஆசை வளரும். ஆசை ஈடேறாவிட்டால் கோபம் உண்டாகும். ஆசைகள் வளர வளர நன்மை தீமைகளைப் பற்றிய அவனுடைய சிந்தனை அருகிவிடும். அறிவும் மழுங்க ஆரம்பித்து விடும். அறிவாற்றல் சிதைந்தால் வாழ்வும் சிதிலமாகச் சிதறிவிடும். இந்நிலையில் அமைதியோ சமாதானமோ நிலை பெற முடியுமா? அமைதியற்றுப் போனால் மகிழ்ச்சியும் மறைந்து விடும். ஒரு படகினை நீர் நிலையில் காற்று அலைக்களிப்பதுபோல் ஆசை பேராசை யாக மாறி வாழ்க்கையே துன்பக் கடலில் மனிதனைச் சுழற்றியடிக்கும். இந்த உண்மைகளை உணரும் தன்மை யுள்ளவன் தன்னைத்தானே அடக்கிக் கொள்கிறான். உலகம் உறங்கும் போது துறவி விழித்திருக்கிறான். உலகம் விழித் திருக்கும்போது துறவி தூங்குகிறான்.

**அர்ச்:** உறக்கம்-விழிப்பு-இவை எனக்குப் புரியவில்லை! கண்ணா! இரவு பகல் என்றால் என்ன?

**கிருஷ்:** சாதாரண மனிதன் விழித்திருக்கும் போது ஏதாவதொரு ஈடுபாட்டில் மகிழ்ச்சி காண்கிறான். பசிக்கு உணவும், குடிக்க நீரும், வசிப்பதற்குவீடும் அவனுக்குத் தேவைப்படுகிறது. இவற்றுக்கான நாட்டத்திலேயே அவன் பொழுது கழிகிறது. ஒரு முனிவனுக்கு இவற்றில் ஈடுபாடு கிடையாது. இவற்றுக்கு அப்பாற்பட்ட நிலையில் அவன் வாழ்கிறான். மரத்திலிருந்து விழும் பழம்பற்றிய கவலையை விடுத்து அவன் எண்ணம் முழு மரத்தையே நாடும்; காடுகளைப் பற்றி எண்ணிப் பார்ப்பான். மரத்தை மனிதன் எரிப்ப தற்கு விறகாக்கும் பொருட்டு வெட்டு வான். தவசியோ வனத்தோடு இணைந்த இயற்கையில் லயிப்பான். காடுகளுக்கும் கால மாற்றத்துக்குமிடையிலான உறவினை ஆராய்வான். ஆகவே மனிதன் தனது தேவைகளுக்கான வற்றைத் தேடித்திரட்டும் போது முனிவன் அவற்றுக்கப்பாற்பட்ட நிலை யிலிருப்பான். இதனால்தான் சாதாரண மனிதன் உறங்கும் போது தவசி விழித்துக் கொள்கிறான். தங்கு தடை யின்றி ஓடிவரும் நதியைப் போன்று சாதாரணமானவன் ஓடிக்கொண்டி ருக்கிறான். எதற்காக ஓடுகிறோம் என்ற சிந்தனை அவனிடம் ஏற்படுவதில்லை. ஆறு-அது சுமந்து வரும் நீரை சமுத்தி ரத்தில் கொட்டி விடுகிறது. அதுவே அதன் செயல். சாதாரணமானவனும் ஆற்றைப் போன்றவனே. எவ்வளவு நீரை நதிகள் கொண்டு வந்து கொட்டிய போதிலும் கடல் அவ்வளவையும் ஏற்றுக் கொள்கிறது. அதற்காக தனது கரைகளை விரிவாக்குவதில்லை. ஞானியும் கடலைப்போன்றே- எதற் காகவும் தனது எல்லைகளைக் கடந்து போவதில்லை. ஆகவே, பார்த்தனே! நீயும் கடலைப் போல் ஞானியாவாயாக- ஞானமே உயர்ந்தது!

**அர்ச்:** ஓ ஞானமூர்த்தியே! கர்மத்தை விட ஞானமே சிறந்ததென்று இப்போது கூறுகிறீர்கள். மறுபுறத்தில் யுத்தம் எனும் கொடிய செயலில் ஈடுபடும்படி தூண்டுகிறீர்கள். எனக்குப் பெரும் குழப்பமாயுள்ளதே! நான் ஏன் தியானத்திலீடுபடும் ஞானியாக முடியாது? அதற்கான பாதையை எனக்குக் காட்டமாட்டாயா?

**கிருஷ்:** பாபங்களற்ற பார்த்தனே! தமக்குள் ளேயே இறைவனைக் காண்பவர்கள் தத்துவ ஞானிகள்-ஞானயோகிகள், வேறு சிலர் புற வழிகள் மூலமாக- தங்கள் கிரியைகள்-செயல்கள் மூலமாக ஆண்டவனைத் தேடுபவர்கள்-இவர்கள் கர்மயோகிகள்.

**அர்ச்:** அப்போது நான் ஏன் ஞானயோகியாக முடியாது?

**கிருஷ்:** எப்பாதையை தேர்ந்தெடுத்தாலும் அதற்கும் செயல் அவசியமே! கண்கள் பார்க்கின்றன; காதுகள் கேட்கின்றன; இதேபோல் மெய், வாய், மூக்கு ஆகியன வும் தத்தம் பணிகளைப் புரிகின்றன. இவற்றின் செயற்பாட்டை பலாத்கார மாக தடுக்க முனைபவன் ஞானியாக முடியாது. அவற்றை இயல்பாக தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வல்லவனே ஞானியாவான். பஞ்சேந்தி ரியங்களை ஒழுங்காகக் கட்டுப் படுத்தி அவற்றை ஆளக்கூடிய வலிமை பெற்றவனே மாபெரும் ஞானியாக முடியும். பார்த்தனே! உனக்கென்று விதிக்கப்பட்ட பணியினைத்தானே நீ ஏற்கவேண்டும்! இக்கட்டத்தில் ஞானி யார் அஞ்ஞானி யார் என்பதை அறிந்து கொள்ளலாம். நீ ஒரு கர்ம வீரன்! உன் கடமையை ஒரு யாகமாக-வேள்வியாகச் செய்ய வேண்டியவன். உன் கடமையை செம்மையாக நீ நிறைவேற்றுவாயானால் நீ பிரம்மத்தை நேரடியாக அடைய முடியும். ஆகவே, எவனொருவன் இந்தப் பிரபஞ்சத்தின் நியதிக்குட்பட்டு அவனுடைய கடமையைச் செய்யத் தவறுகிறானோ அவனுடைய வாழ்வே பெறுமானமற்று வீணாகிவிடுகிறது. எவனொருவன் தன் பிரச்சனைகளை மட்டும் சிந்திக்கிறானோ அவன் பாபி. பார்த்தா! மாயையில் மயங்காமல் தெளிவு பெற்று நீ ஏற்றுக் கொண்டுள்ள கடமையைப் பற்றிச் சிந்தித்துப் பார்! தனிப்பட்ட ஆசைகள் உன் கர்ம யோகத்துக்கு இடையூறாகி விடலாம். அவை உன்னை தலை தூக்க விடாது. உனது சமுதாயத்திலிருந்து அவை உன்னைப் பிரித்துவிடும். சமுதாயத்தில் நீ ஒருவனே தவிர சமுதாயம் உன்னில் ஓரங்கமல்ல. உன்னைச் சார்ந்த உன் சமுதாயத்தை எண்ணிப் பார். அவர்க ளுக்காக நீ மேற் கொள்ள வேண்டிய கடமையை கருத்தில் கொள்!

பார்த்தனே! நீ ஒரு மாமனிதன்! உன்னை ஓர் உதாரபுருடனாகக் கருதி உன் வழி நடக்க எண்ணற்றோர் காத்துக்கிடக்கின்றனர். என்னை எடுத்துக்கொள்! மூவுலகத் திலும் என்னால் அடைய முடியாத தெதுவுமேயில்லை.... எதையும் அடைய வேண்டும் என்ற அவாவும் என்னிடம் கிடையாது. அவ்வாறிருந்தும் இன்று நான் உன் முன்னே நிற்கின்றேன்! சுயநலமற்ற எச்செயலையும் பற்றற்ற நிலை நின்று உன் கடமையைச் செய்யும் கர்மவீரன் நீ என்பதனை உணர்த்துகிறேன்.

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை.

**திருத:** சஞ்சயா! சஞ்சயா....! வாசுதேவன் இப்போது ஏதோ சொன்னானே... என்ன அது....?

**சஞ்ச:** இவ்வார்த்தைகளைக் கூறும் போது வாசுதேவ கிருஷ்ணனுடைய குரலில் மகத்தானதொரு மாற்றம் தொனித்தது மகாராஜா! வேறு யாரோ பேசியது போல...!

**திருத:** வேறு யார்..?

**சஞ்ச:** மகாராஜா! மூன்று உலகங்களிலும் தான் விரும்பினால் முடிக்கமுடியாத பணி எதுவுமே இல்லை என்று கூறக்கூடிய வல்லமை பொருந்தியவன் சாட்சாத் நாராயணமூர்த்தியைத் தவிர வேறில்லை! தான் செய்ய வேண்டிய காரியம் எதுவுமே இல்லை என்ற போதும் தொடர்ந்து பணி புரிவதனால் தான் கடமை எனும் சக்கரம் சுழன்று கொண்டே இருக்கிறது. இவ்வியக்க மில்லாதொழிந்தால் சகலமும் சர்வ நாசமாகிவிடும். இவ்வாறு அவர் கூறுகிறார்.

**திருத:** இது ஒரு சாதாரண அல்லது அசா தாரண மனிதனின் வார்த்தைகளல்ல சஞ்சயா! இவற்றை ஒரு பிரம்மரிஷி கூறியிருந்தால் அது தற்பெருமையின் அறிகுறியாகும்.

**சஞ்ச:** ஆனால் வாசுதேவனின் வார்த்தை களில் தற்பெருமையின் நிழலே தோன்ற வில்லையே மகாராஜா!

**திருத:** அதனால் தான் நான் அஞ்சுகிறேன். இவ்வார்த்தைகள் எனக்குக் கூறப்பட்டி ருக்குமானால், நான் என் பார்வையற்ற தன்மையையும் மறந்து வில்லேந்தி விடுவேன்! சஞ்சயா!

அர்ச்சுனன் கை நழுவவிட்ட காண்டீ பத்தை மீண்டும் எடுத்துவிடுவானா?

**சஞ்ச:** எதிர்காலத்தையிட்டுக் கூறுவது என் வரம்புக்குட்பட்டதல்ல மகாராஜா! எதிர்காலத்தைப் பற்றி முன்னமே அறிந்துகொள்ளும் ஆற்றலை மனித னுக்கு ஆண்டவன் தரவில்லையே!

**திருத:** இந்த யுத்தத்தின் முடிவு எவ்வா றாயிருக்கும் என்பதனை இன்று நான் உணர்கிறேன் சஞ்சயா! நூறு புத்திரர்க ளைப் பெற்றமையினால் நான் தனித் தவன் அல்ல என்று நேற்றுவரை எண்ணி இறுமாந்திருந்தேன். இப் பொழுது நான் உண்மையை உணர்ந்து விட்டேன். நான் தன்னந்தனியாக நாளை தவிக்கப் போகிறேன். எங்கே உன் விரல்களைப் பற்றிக் கொள்கிறேன்- குருச்சேத்திரத்துக்கு என்னை உனது ஞான சக்தியால் அழைத்துச் செல்!

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்–

**கிருஷ்:** ஞானத்தை அடிப்படையாகக்கொண்ட கர்மம் சுயநலமற்றது. உலகத்தின் சமநிலைக்கு இதுவே ஆதாரம். பார்த்தனே! மக்களின் நலத்திற்காக புரியும் செயலுக்கு உன்னையே நீ குறை கூறாதே! உன்னுடைய செயல் களின் முடிவினை எனக்கு அர்ப்ப ணித்து விட்டு தர்ம யுத்தத்திற்கு உன்னைத்தயார் படுத்திக் கொள். கடமையின் போது மரணமடைய நேர்ந் தால் அதிலும் மகத்துவதும் இருக்கிறது. உனக்குக் கல்வி புகட்டிய குருமாரை, பிதாமகரை, உனது உறவினர்களை கடமையின் பால் நீ கொன்றாயானால் அதுபாவமாகாது. அவர்களும் மறுமை யில் பெரும்பேறு எய்துவர். போர் முனையில் நீ உயிர்துறக்க நேரிட்டாலும் உனக்கும் அதுபெரும் பேறாகும்.

**அர்ச்:** கேசவா! பாவம் பற்றிப் பேசுகிறீர்களே! மனிதன் எதற்காகப் பாவம் செய்ய வேண்டும்? பாவம் செய்யத் தூண்டும் சக்தி எது?

**கிருஷ்:** ஆசை தான் தூண்டுகிறது! பயனற்ற தன்னலம் தூண்டுகிறது! அவனுடைய கோபம், அவனுடைய பற்று அவனைப் பாவம் செய்யத் தூண்டுகின்றன. மனிதனின் எதிரிகள் இவையே. நெருப்பை மூடியிருக்கும் புகையைப் போல, கண்ணாடியை மூடியிருக்கும் தூசைப்போல, கருவினை மூடியிருக்கும் கருப்பையினைப் போல ஞானத்தை ஆசை மூடியிருக்கிறது.

பற்று என்னும் தீ படர்ந்து ஞானத்தை அழிப்பதற்கு முன்னர், அந்தத் தீ அணைக்கப்பட வேண்டும். கண்ணாடி யைத் துடைப்பது போல அறிவினை அழிக்க முற்படும் அனைத்தையும் சிதைத்துவிட வேண்டும்.

பார்த்தனே! புலன்களைவிட மனம் மேலானது; மனத்தை விட அறிவாற்றல் உயர்ந்தது. அறிவாற்றலை விட ஆன்மா மேலானது. ஆகவே உடலைப் பற்றிய கவ லையை விடுத்து உயிரைப்பற்றி நினை. நீ என்னுடைய பக்தன் மட்டுமல்ல எனது நண்பனுமாவாய். இதனாலேயே தான் இந்த ஞான-கர்ம தத்துவமாகிய மெய்ஞான விளக்கத்தை உனக்கு நான் தருகிறேன். இயற்கை தோன்றும் வரை நீண்ட நெடுங்காலம் இதுமறைபொரு ளாகவே இருந்தது. பின்னர் இதனை நான் சூரியனிடம் கொடுத்தேன்; சூரியன் இதனை மனுவிடம் கொடுத்தான்; மனு மூலகமாக இச்வாகு மன்னனின் சந்ததியிடம் இதுபோய்ச் சேர்ந்தது.

**அர்ச்:** இந்த ஞான- கர்ம தத்துவத்தை சூரிய பகவானிடம் தாங்கள் கொடுத்தீர்களா? சூரியதேவனோ ஆதியானவன் தாங் களோ இக்காலத்தில் தோன்றியுள்ள ஒருவர். அப்படியிருக்கும்போது, இயற்கை தோன்றுவதற்கு முன்னர் தாங்களே எவ்வாறு இதனை அளித்தி ருக்க முடியும்?

**கிருஷ்:** பார்த்தனே! நான் பலபிறவிகளை எடுத்திருக்கிறேன், நான் மட்டுமல்ல, நீயும் தான் பலபிறவிகளை எடுத்தாய்! ஆனால் முன்னைய பிறவிகளைப் பற்றி உனக்கெதுவும் நினைவில் இல்லை. நான் பிறந்தாலும் பிறப்பும் இறப்பும் அற்ற வன். எங்கும் எதிலும் வியாபித்திருப்பவன். பார்த்தா! தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கும் போதெல்லாம் நான் அவ தாரம் எடுப்பேன். தீயவற்றை அழித்து நல்லவற்றை பாதுகாப்பேன். தர்மத்தை நிலைநாட்ட நான் மீண்டும் மீண்டும் பிறப்பேன்.

**அர்ச்:** கேசவா! தர்மத்துக்கு ஏன் கேடு விளைவிக்கப்பட வேண்டும்.

**கிருஷ்:** மனிதன் பந்தபாசங்களிலிருந்து விடு படமுடியாத நிலையில், பேராசைக்கு அடிமையாகும் போது தர்மம் சிதை கிறது. அரக்கு மாளிகை, திரௌபதி துகிலுரிதல் போன்ற அதர்மங்கள் நேராதிருந்தால் கவுரவரும் பாண்டவரும் இவ்வாறு படையுடன் வந்திருக்க முடியுமா?

**அர்ச்:** திரௌபதி மானபங்கப்படுத்தப்பட்ட மைக்காக நான் கோபங்கொண்டது தவறா?

**கிருஷ்:** பாஞ்சாலி துகிலுரியப்பட்டமை உனக்குமட்டும் உள்ள ஒரு பிரச்சனை யல்ல. அவள் இந்திரப்பிரஸ்தத்தின் அரசி-துருபத மன்னனின் மகள். ஆகவே இதுவொரு சமுதாயப் பிரச்சனை- பொதுப் பிரச்சனை! இத்தகைய தீமைகளுக்கு காரணகர்த்தாக்கள்- சமுதாய விரோதிகள்! அவர்கள் தண்டிக் கப்படவேண்டியவர்களே! இத்தீய சக்திகளை ஒழித்துக் கட்ட முன்வந்த நீ உன்கடமையை பொதுமக்களின் நலனுக் காக புரிய வேண்டிய நிலையிலுள்ளாய். பார்த்தனே! இப்பொழுது உன் கடமை யையுணர்ந்து கொண்டிருப்பாய். கர்மா- அகர்மா மற்றும் விகர்மா- அதாவது- செயல், செயலின்மை மற்றும் தவறான செயல் ஆகியவற்றின் பொருளையுணர்ந்திருப்பாய்!

செயலின்மையைவிட செயலே உச்ச மானது. தனக்கோ தான் சார்ந்த சமுதா யத்துக்கோ பயனற்ற ஒன்றைச் செய்வதே விகர்மம் எனப்படுவது. ஞானி தன் செயலின் பலாபலனைப் பற்றிக் கவ லைப்படாமல் தொடர்ந்து தன் பணியி னைச் செய்து கொண்டே இருப்பான். இவன் தனக்கென எதனையும் செய்வ தில்லை. சமூகத்துக்காகவே இவன் பணி தொடரும். சமுதாயத்துக்காக அவன் செய்யும் தொண்டு வேள்வியா கிறது-தியாகம் என மதிக்கப்படுகிறது. ஆகவே, பார்த்தனே! நீயும் உன் செயலின் பலனை வேள்வித் தீயிலே பொசுக்கி சமுதாயத்துக்குரிய செயலி னில் இறங்குவாயாக! செயலின் முடிவு டன் பந்தபாசம் மற்றும் சினம் ஆகியவற் றையும் யாககுண்டத்தில் போட்டுவிடு!

**அர்ச்:** யாகம்- வேள்வி- தியாகம்- இவற்றின் பொருள் என்ன கேசவா?

**கிருஷ்:** ஒரு சாரார் தம்மைப் படைத்த இறைவனைத் திருப்திப் படுத்த யாகம் செய்கிறார்கள். பிரார்த்தனையே அவர்க ளுடைய வேள்வியாகிறது. தங்கள் ஆத்மாவை பரமாத்மாவுடன் ஐக்கியப் படுத்துகின்றனர் சிலர். திரவியங்களும் படைத்து சிலர் வணங்குகின்றனர்; வேறு பலர் செயல்களால்- கிரியைகளால் வணங்குகின்றனர். சமுதாயத்துக்கும் தனக்குமுரிய கடமைகளையே தன் யாகமாகக் கொள்வோருமுளர். அஷ்டாங்க நமஸ்காரம், தியானம், சுவாசத்தின் மூலமான பிராணாயாமம் போன்ற முறை களிலும் இறைவனைத் தரிசிப்போருளர். இவற்றுளெல்லாம் தலையாயது ஞான யாகம் எனும் படியேயாகும். இதுவே தூய்மையானதும் கூட. பந்த பாசங்க ளிலிருந்து ஒருவனை மீட்டுக் கரை சேர்க்கவும் ஞானயாகமே சிறந்த மார்க்கமாகக் கருதப்படுகிறது.

பார்த்தா! பாவப் பெருங்கடலினைக் கடப்பதற்கு உறுதுணையாக நிற்பது ஞானமெனும் தோணியே!

□□

**பார்த்தனுக்குச் சாரதியாய் வாய்த்த பரந்தாமனவன்**
**பாரிலுள்ள மாந்தரவர் வாழ்வு நலம் பெறவே**
**சாத்திரத்தின் மெய்ப்பொருளாம் கீதை யுபதேசமதை**
**குருச்சேத்திரக்களத்தில் பார்த்தனுக்கே அளித்தான்!**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

Regd. as a News Paper at the G.P.O.(PRO/7/95)

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்



436331

வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11


தருவது வியோ டெ




Kala JEWELLERY



புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

433686

61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11


# கச்சிதமான கப்டன்

[illegible]

# சளைக்காத சாம்பியன்

[illegible]



# இந்த மானைப் பாருங்கள் வியப்பு!



# பெரிசு - பெரிசு



[illegible]

# பெருமதியால் சாதனை



[illegible]

# நீண்டகால இருவர்



[illegible]

[illegible]